## மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம் - 2020
## சைவநெறி

**அலகு : 1** **கடவுள்** **தரம் - 10,11**

1. பரம்பொருளைக் குறிப்பிடுவதற்குப் பயன்படும் தமிழ்ச்சொல் எது?
   கடவுள்

2. அச்சொல் உணர்த்தும் மூவகைப் பொருள்களும் எவை?
   - உலகத்தை இயக்குபவன்.
   - உலகத்தை கடந்தவன்.
   - உலகத்தை கடந்தும் அதேசமயம் உலகிலுள்ளும், உயிரினுள்ளும் உள்ளவன்.

3. இந்து சமயத்தின் முதல் நூல் எது? சிறப்பு நூல் எது?
   - முதல் நூல் - வேதம்
   - சிறப்பு நூல் - ஆகமம்

4. சைவசித்தாந்தம் கடவுள் உண்மையை நிரூபிக்கும் 2 வகைகளும் எவை?
   - தக்க காரணம் காட்டி நிரூபிப்பது.
   - கடவுள் இல்லை என்று வாதிடுபவர்களுடைய வாதங்கள் பொருத்தமற்றவை என்று தக்க காரணம் காட்டி மறுப்பது.

5. சமயத்துவ நூல்களின் உண்மையை நிரூபிக்கக் கையாளும் 3 பிரமாணங்களும் எவை?
   - பிரத்தியட்சம்
   - அனுமானம்
   - ஆப்தவாக்கியம்

6. பிரத்தியட்சம் என்றால் என்ன?
   பொறிகள் வாயிலாகப் பெறும் அறிவு

7. ஆப்தவாக்கியம் என்றால் என்ன? ஆப்தவாக்கியமாகக் கொள்ளப்படுபவை?
   - உண்மைவாக்கியம்
   - ஞானியர் உண்மைகள்

8. அனுமானப் பிரமாணம் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக?
   கடவுள் மறுப்பாளர்களுக்கும், ஞானிகளையும், அவர்களது கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு ஏற்ற வழியை கையாள்வதே அனுமானப் பிரமாணம் எனப்படும்.
   உ.ம் :- நெருப்பையும், அதிலிந்து புகை வெளிவரும் வரையும் பலமுறை கண்டுணர்ந்தவர்கள் தூரத்தில் புகை மாத்திரம் தெரியும்போது அங்கே நெருப்பும் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்வது போன்றது.

9. தனு, கரண, புவன, போகம் என்பவற்றை விளக்குக?
   - தனு - உயிர்கள் உறைகின்ற உடல்
   - கரணம் - உயிர்கள் அறிவைப் பெறுவதற்கான கருவி
   - புவனம் - உடலோடு கூடிய உயிர்கள் உலாவுகின்ற உலகம்
   - போகம் - உயிர்கள் அனுபவிக்கின்ற இன்பதுன்பங்கள்

10. கடவுள் உலகத்தைப் படைத்ததன் நோக்கம் யாது?
    ஆணவ மலத்தால் கட்டுண்ட உயிர்கள் அம் மலத்தின் அல்லல்களிலிருந்து விடுபட்டு ஈடேறுவதற்குத் துணையாகவே கடவுள் உலகத்தைப் படைத்தார்.

11. அறிவு என்பது யாது?
    நாம் செய்யும் காரியங்களினால் விளையப்போவது நன்மையா தீமையா என்பவற்றை உய்ந்துணர்ந்து தீமைகளிலிருந்து விலகி நன்மையை நாடிச் செயற்படும் ஆற்றலே அறிவாகும்.

12. அறிவுடமை என்பதற்கு திருவள்ளுவர் கூறும் கருத்து யாது?
மனதை அதன் போக்கில் போகவிடாது தீமையிலிருந்து விலக்கி நன்மையை நோக்கிச் செலுத்துவதே அறிவுடமை ஆகும்.

13. திருவள்ளுவர் பேதமை என்று எதனைக் குறிப்பிடுகின்றார்?
அறியாமை

14. நாம் வாழும் இடங்களிலெல்லாம் திருக்கோயில்களை அமைப்பதன் நோக்கம் யாது?
தெய்வத் திருவுருவங்களைக் காணும்போது தெய்வ சிந்தனை எம் மனதில் எழும் என்பதற்காக.

15. நாம் எப்பொழுதும் தெய்வ சிந்தனையுடன் இருக்கவேண்டியதன் அவசியம் யாது?
பாவங்கள் பற்றிய அச்சம் உண்டாக, பாவங்களைச் செய்வதிலிருந்து தவிர்த்துக் கொள்ளலாம்.

16. கடவுள் நினைவோடு வாழ நம்மை நெறிப்படுத்தும் வழிமுறைகள் எவை?
- எழும்போதே "சிவசிவ" என்று சொல்லிக் கடவுளைச் சிந்தித்தல்.
- காலைக்கடன்களை முடித்து, முகம் கழுவி, வீபூதி தரித்து வீட்டையும், சூழலையும், நம்மையும் சுத்தமாக வைத்திருத்தல்.
- முறையாக நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிதல்.
- நெற்றியில் எப்போதும் திருநீறு இருத்தல் வேண்டும்.

17. பரம்பொருள் என்றால் என்ன?
கடவுள் உலகத்தில் உள்ள பொருள்கள் யாவிலும் மேலான பொருள் ஆதலால் அவரைப் பரம்பொருள் என்று அழைப்பர்.

18. கடவுள் என்பதன் பொருள் யாது
எல்லா உலகங்களையும், எல்லா உயிர்களையும் கடந்தும், அவற்றினுள்ளேயும் இருப்பதால் அவரைக் கடவுள் என்போம்.

Education கல்வி அධ්‍යාපන

**அலகு : 2 சைவ வாழ்வு, தெய்வ சிந்தனை தரம் - 10,11**

## சைவ வாழ்வு

1. "அரிது அரிது மானிடராதல் அரிது" எனக் கூறியவர் யார்?
ஔவையார்

2. சைவநெறி என்பதன் பொருள் யாது?
வழி என்று பொருள்படும்.

3. ஆசாரத்தின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்கம் தருக?
ஆசாரம் இரண்டு வகைப்படும்.
- அக ஆசாரம்
- புற ஆசாரம்

4. "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுவதன் பொருட்டேயாம்." எனக் கூறியவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

5. சைவநாற்பாதங்களைத் தருக?
சரியை கிரியை யோகம் ஞானம்

6. அகப் பூசையில் இறைவனுக்குச் சாத்தவேண்டிய அட்ட புஸ்பங்களும் எவை?
கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, உண்மை, தவம், அன்பு

7. யாருடைய உள்ளத்தில் இறைவன் விரும்பி உறைகின்றான்?

அகத்திலே அன்பும், நீதியும், ஒழுக்கமும் உடையவர்களின் உள்ளத்தில் இறைவன் விரும்பி உறைகின்றான்.

8. சுவாமி விபுலானந்தர் கூறிய இறைவன் உவக்கும் இன்மலர்கள் மூன்றும் எவை?
   - உள்ளக் கமலம்
   - கூப்பிய கைக்காந்தள்
   - நாட்டவிழி நெய்தல்

9. அட்டாங்க யோகங்களில் இரண்டைத் தருக?
   இயமம் நியமம்

10. வாழ்க்கையின் நான்கு படிநிலைகளும் எவை?
    - பிரமச்சரியம்
    - இல்லறம்
    - வானப்பிரஸ்தம்
    - துறவறம்

11. ஒப்புரவு என்றால் என்ன?
    மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்வதை ஒப்புரவு என்போம்.

12. ஒற்றுமையை உணர்த்த நம்மத்தியில் வழங்கும் மரபுத் தொடர் யாது?
    "ஊர் கூடித் தேர் இழுத்தல்"

13. அல்லற்பட்டவர்களுக்குச் செய்யும் சேவையே இறைவனுக்கு உகந்த சேவையாகும் என்பதை விளக்கும் திருக்குறள் யாது?
    ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாழ்
    பேரறிவாளன் திரு

14. சைவசமயத்துடன் தொடர்புடைய கலைகள் எவை?
    இலக்கியம், கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம்

15. இறைவன் நாதரூபமாக விளங்கும் மூர்த்தம் யாது?
    நடராஜ வடிவம்

16. நமது வீட்டு வாசலில் போடப்படும் மாக்கோலம் எதனை உணர்த்துகின்றது?
    அழகுக் கலையாகவும், எறும்பு முதலான வாயில்லாப் பூச்சிகளுக்கும் உணவளிக்கும் அறமாகவும் விளங்குகின்றது.

17. ஆரம்ப காலத்தில் கல்விக்கூடமாக விளங்கியவை எவை?
    திண்ணைப் பள்ளிக்கூடம், கோயில்கள்

18. தற்காலத்தில் ஆலயத்துடன் சேர்ந்து சமயத்தையும், விழுமியத்தையும், ஒழுக்கத்தையும் வளர்ப்பதற்காகச் செயற்படும் நிறுவனம் எது?
    அறநெறிப் பாடசாலைகள்

19. இறையுணர்வை ஏற்படுத்தாத கல்வியால் எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்த்தும் திருக்குறள் யாது?
    "கற்றதனால் ஆய பயன் என்கொல், வாலறிவன்
    நற்றாள் தொழாஅர் எனின்"

## தெய்வ சிந்தனை

20. ஏனைய உயிர்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டும் அறிவு எது?
    பகுத்தறிவு

21. அறிவுடமை என்பது யாது?

Education கல்வி අධ්‍යාපන

மனதை அதன்போக்கில் போகவிடாது தீமையினின்று விலக்கி நன்மையை நோக்கிச் செலுத்துவதே அறிவுடமையாகும்.

22. அறிவுடமையைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
கல்வி, வாழும் சூழல், வாழ்க்கை அனுபவங்கள்

23. சமயம் வலியுறுத்தும் பிரதான உண்மை யாது?
எமக்கு மேலே சக்தி ஒன்று இருக்கின்றது. நாம் செய்யும் பாவ புண்ணியங்களின் பயனை நாம் அனுபவித்தே தீரவேண்டும்.

24. பழி, பாவம் முதலான அஞ்ச வேண்டிய விடயங்களுக்கு அஞ்சுவது அறிவுடையாரது இயல்பு எனக் கூறும் திருக்குறள் யாது?
''அஞ்சுவது அஞ்சாமை பேதமை, அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்''

25. திருக்கோயில்களை அமைப்பதன் முக்கிய நோக்கம் யாது?
மனதில் தெய்வ சிந்தனை எழும் போதெல்லாம் பாவ காரியங்களைச் செய்யாது தவிர்ப்போம். புண்ணிய காரியங்களைப் புரிவதில் ஈடுபாடு காட்டுவோம் என்பதற்காகவே.

26. ஏன் நாம் கடவுளை வழிபட வேண்டும்?
கடவுள் வழிபாடே கடவுள் நினைப்பை நம் மனதில் நிலைநிறுத்தும். அந்த நினைப்பே நம்மைப் பாவ காரியங்கள் செய்வதற்கு அஞ்சப் பண்ணும். புண்ணிய காரியங்களைச் செய்வதற்குத் தூண்டும்.

27. அதிகாலை நித்திரை விட்டெழும்போது யாது கூறுவீர்?
''சிவ சிவ''

28. இறைவனது நினைப்பை ஏற்படுத்துவதில் முக்கிய காரணியாக விளங்குவது எது?
நெற்றியில் எப்போதும் திருநீறு அணிதல்.

29. உண்ண முன்பு யாது செய்தல் வேண்டும்?
இறைவனை வணங்குதல், காகம் முதலான பறவைகளுக்கும், பிராணிகளுக்கும் எடுத்து வைத்தல் வேண்டும்.

30. நாம் கடைப்பிடிக்கக்கூடிய நல்ல பண்புகளில் ஒன்றைத் தருக?
தேவாரம், திருவாசகம் போன்ற அருட்பாக்களைப் பாராயணம் செய்தல்.

31. கடவுள் வழிபாட்டில் சிறந்த வழிகளில் ஒன்றைத் தருக?
தியானம் செய்தல்

32. கடவுள் வழிபாடு எப்போது முழுமை பெறுகின்றது?
நாம் வாழும் ஒழுக்கமான வாழ்வினாலேயே கடவுள் வழிபாடு முழுமை பெறுகின்றது.

## அலகு : 3 சைவ விழுமியங்கள் தரம் - 10,11

1. விழுமியம் என்றால் என்ன?
    - மேலான அல்லது உயர்ந்த நற்பண்புகள் எனப் பொருள்படும்.
    - இந்தப்பிறவியில் எம்மை நன்நெறியில் நின்று தவறாது வாழவைப்பது.
    - மனிதனை மனிதனாக வாழ வைக்கும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகள்.

2. விழுமியங்களானவை எவை?
அன்புடைமை, வாய்மை, பணிவுடைமை, அடக்கமுடைமை, செய்நன்றி மறவாமை முதலானவை

### அன்பு

3. அன்பு எனப்படுவதாவது யாது?
அன்பாவது ஒருவர் தன்னோடு தொடர்புடையவர்களிடத்தில் காட்டுகின்ற ஈடுபாடாகும்.

4. அருள் என்பதாவது யாது?
   அன்பின் முதிர்ச்சியே அருளாம்.

5. சைவசமயத்தவர்கள் பாவ காரியங்களாக விலக்குவதாவது யாவை?
   கொலை, களவு, பொய், புலால் உண்ணுதல், காமம்.

6. பன்றிக் குட்டிகளுக்குத் தாயானவர் யார்?
   சிவபெருமான்

7. இக்கதை வலியுறுத்துவதாவது யாது?
   சீவகாருன்யம்

8. திருமூலரின் கருத்துக்கமைய தெய்வநிலை அடைவதற்குரிய தகுதியாவது யாது?
   உயிர்கள் மீது அன்பு செலுத்துதாகும்.

9. ''அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்'' எனக் கூறியவரும் நூர்லுமாவது யாவை?
   திருமூலர், திருமந்திரம்.

10. அன்புடைமை பற்றி திருவள்ளுவர் கூறுகின்ற குறள் ஒன்றை தருக?
    அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
    என்போடு இயைந்த தொடர்பு.

11. எமது பிறவித் துன்பத்தை நீக்குவதற்கு நாம் செய்யவேண்டியதாவது யாது?
    தவம்

12. தவம் என்பதாவது யாது?
    உண்மை, உறங்காமை தவ நியதியாகாது பிறரிடம் அன்பு காட்டுதலே உயர்ந்த தவமாகும்.

13. அன்பாகிய தவத்தின் மூலம் இன்பத்தைப் பெறலாம் என்று கூறியவர் யார்?
    மகாகவி சுப்பிரமணிய பாரதியார்
14. இவர் கூறிய கூற்றாவது யாது?
    - செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே தவம் செய்தால் எய்த விரும்பியதை வையத்தில் பெறலாம்.
    - அன்பிற் சிறந்த தவம் வேறில்லை இல்லை – அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு.

**வாய்மை**

15. வாய்மை எனப்படுவதாவது யாது?
    உண்மை பேசுதல்

16. வாய்மை என்றால் என்னவென திருவள்ளுவர் கூறியதாவது?
    யாவர்க்கும் எவ்வகையிலும் தீமை பயக்காதவற்றைப் பேசுவதே வாய்மையாகும்.

17. வாய்மை பற்றி திருவள்ளுவர் கூறிய குறள் ஒன்று தருக?
    வாய்மை எனப்படுவது யாது எனில், யாது ஒன்றும்
    தீமை இல்லாத சொலல்.

18. ஒரு பொய்யினால் நன்மை உண்டாகுமாக இருந்தால், அந்தப் பொய்யும் வாய்மையாகக் கொள்ளப்படும் என்று வள்ளுவர் கூறிய குறளாவது?
    பொய்மையும் வாய்மை இடத்து, புரைதீர்ந்த
    நன்மை பயக்கும் எனின்

19. பொய் பேசாதவன் உலகத்தவர்களால் மதிக்கப்படுவான் என்பதை திருவள்ளுவர் எவ்வாறு கூறுகிறார்?
    உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார்

உள்ளத்துள் எல்லாம் உளன்.

20. உண்மை பற்றி வேதம் கூறுகின்ற வாக்கியமாவது யாது?
"சத்தியமேவ ஜயதே"

21. உண்மை பற்றி உபநிடதம் கூறுகின்ற மகாவாக்கியமாவது யாது?
"சத்தியம் வத"

22. உண்மை பேசி உத்தமராய் வாழ்ந்தவர்களாகக் கொள்ளப்படுபவர்கள் யார்?
அரிச்சந்திரன், மகாத்மாகாந்தி

23. அகிம்சாவழியின் அடித்தளமாவது யாது?
உண்மை பேசி வாழுதல்.

**ஈகை**

24. ஈகை என்பதாவது யாது?
வறுமையில் வாடுபர்களுக்கு உணவு முதலானவற்றைக் கொடுத்து உதவுவது கொடை, அறம், தருமம் எனக் கூறப்படும்.

25. ஈதலே அறம், அறம்செய விரும்பு எனக் கூறியவர்?
ஔவையார்

26. "வறியவர்க்கு ஒன்று ஈவதே ஈகை: மற்றெல்லாம்
குறி எதிர்ப்பை நீரது உடைத்து." எனத் திருவள்ளுவர் கூறியதாவது யாது?
வறியவர்க்குக் செய்யப்படும் உதவியே ஈகை. மாறாக எதையும் எதிர்பார்த்துச் செய்வோமாயின் அச்செயல் வியாபாரமாகும்.

27. திருவள்ளுவர் தனது கோப உணர்ச்சியை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாவது யாது?
ஒருவன் பிறரிடம் இரந்து வாழவேண்டிய நிலையில் இருப்பதை சமூக நீதியாகக் கருதுகின்ற தன்மையையாகும்

28. உலகத்தில் மிகக் கொடிய துன்பமாவது யாது?
பசித் துன்பம்.

29. பத்து விதமான பண்புகள் பறந்து போவதற்குக் காரணமாவது யாது?
பசி

30. தவம் செய்பவர்களிடத்தில் உள்ளதான பெரும் ஆற்றலாவது யாது?
பசியை பொறுத்துக் கொள்வதாகும்.

31. தவ ஆற்றலிலும் உயர்ந்த ஆற்றலாகக் கொள்ளப்படுவதாவது யாது?
பசியை தமது ஈகைமூலம் நீக்குகின்ற செயலாம்.

32. இரத்தல், ஈகை என்பன பற்றிப் புறநானூறு கூறுகின்ற விடையங்களாவன யாவை?
ஈ என இரத்தல் இழிதன்று: அதன் எதிர்
ஈயேன் என்னல் அதனிலும் இழிதன்று.
இரந்து வாழ்கின்றநிலை மிகவும் தாழ்வானதே ஆயினும் யாரும் தம்மிடம் இரந்து வந்த போது இல்லை என்று கைவிரிப்பது அதைவிடத் தாழ்வானதாகும்.

33. மனிதனின் அடிப்படைத் தேவைகளாவன யாவை?
உணவு, உடை, உறையுள்

34. இயல்வது கரவேல் என்ற ஔவையின் கூற்றின் மூலமாக வெளிப்படுத்தியுள்ளதாவது யாது?
எம்மால் இயன்றவரை இல்லை என்னாது கொடுக்க வேண்டும் என்பதாகும்.

**ஒப்புரவு**

35. ஒப்புரவு என்பதாவது யாது?

சமூகத்தின் தேவையறிந்து செய்யும் அறச் செயல்களாகும்

36. ஒப்புரவாளனிடம் இருக்க வேண்டிய சேவையின் மான்பு பற்றி வள்ளுவர் கூறுவதாவது யாது?
    பிரதியுபகாரத்தினை கருதாது சேவை செய்யும் பன்பு.

37. பொருளாதார வளம் உள்ள ஒருவன் சமூகத்தின் நன்மை கருதிச் செய்யத்தக்க இனிய அறச் செயல்களாக பாரதியார் கூறியுள்ளனவாவன யாவை?
    கோயில்கள், குளங்கள், நூலகங்கள், அநாதை இல்லங்கள், ஆதுலர்சாலைகள், மருத்துவசாலைகள் முதலான பொதுமக்கள் பயன்பெறும் அறநிலையங்களை அமைத்து வழங்கலாகும்.

38. அதிக அளவான பொருளை ஈட்டுவதற்கு உரிய வழியாக வள்ளுவர் கூறுவதாவது யாது?
    முயற்சி, திறமை

39. செல்வந்தரிடம் செல்வம் சேருவதற்கான காரணமாவது யாது?
    தக்க அறச்செயல்களை தேவையறிந்து செய்வதற்காகும்.

40. செல்வந்தரிடம் உள்ள செல்வமானது எதற்கொப்பானதாக வள்ளுவரால் கூறப்படுகின்றது?
    ஊர்ப்பொதுவான நீர்நிலை, பயன்தரும் மரம், மருத்துவ மரம்.

41. ஊரின் நடுவில் பயன்மிக்க மரம் பழுத்திருப்பதாவது எதற்கு ஒப்பானதாகும்?
    அற உணர்வுள்ள ஒருவரிடம் உள்ள செல்வத்திற்கு

42. அற்றார் அளிபசி தீர்த்தல், அஃது ஒருவன்
    பெற்றான் பொருள் வைப்புவழி – என்பதன் ஊடாக வள்ளுவர் கூறு விளைந்ததாவது யாது?
    வறியவர்களின் பசித் துன்பத்தினை நீக்குவதற்காக செலவு செய்யும் பணமே வங்கியில் சேமிப்பதிலும் சிறந்த சேமிப்பு நிதியாக அமையும் என்கின்றார்.

43. ''ஒப்புரவாளனை'' பேரறிவாளன் எனப் பெருமைப்படுத்தக் காரணமாவது யாது?
    செல்வத்தை அழியாதபடியும், புண்ணியமாகப் பெருகும் படியும் அறச்செயல்களில் முதலீடு செய்யும் அறிவு படைத்தவர்கள் என்பதால்.

## அலகு : 4 காலக் கணிப்பும் பஞ்சாங்கமும் தரம் - 10,11

1. காலக்கணிப்பு அலகுகளாவன யாவை?
   மாதம், ஆண்டு, கிழமை, நாள் ஆகியன

2. காலக்கணிப்புக்கு உதவுபவையாவன எவை?
   சூரியன், பூமி, சந்திரன், இராசி, நட்சத்திரம்.

3. ஆண்டு, மாதங்களைக் கணிப்பீடு செய்வதற்கு உதவுபவை எவை?
   சூரியன், சந்திரன்

### மாதம்

4. சூரியனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்படும் முறைமையின் பெயராவது யாது?
   சௌரமானம் / சூரியமானம்

5. சந்திரனை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்படும் முறைமையின் பெயராவது யாது?
   சந்திரமானம்

6. சந்திரமான முறையில் மாதத்தைக் கணிப்பீடு செய்யும் இருவகைகளாவன?
   பூர்ணிமாந்தமுறை, அமாந்தமுறை

7. பூர்ணிமாந்த முறை என்பது யாது?
   பௌர்ணமியை (பூரணையை) இறுதிநாளாகக் கொண்டு மாதத்தைக் கணிப்பிடும் முறை

8. அமாவாசையை இறுதிநாளாகக் கொண்டு மாதத்தைக் கணிக்கும் முறையாவது யாது?
அமாந்த முறை

9. பண்டைய தமிழர்களின் மாதக் கணிப்பீட்டு முறைமையாவது யாது?
சந்திரமான முறை அல்லது பூரணிமாந்த முறை

10. மாதம் என்ற பெயர் ஏற்படுவதற்கான காரணமாவது?
மதியின் (திங்கள்) – சந்திரமான அடிப்படையில் கணிப்பிடப்பட்டமை

11. மாதத்திற்கு வழங்கும் மறு பெயராவது யாது?
திங்கள் (மதி, சந்திரன்)

12. பண்டைய தமிழர் மாதங்களிற்கு எவ்வாறு பெயர் சூட்டினர்?
பூரணை அல்லது பௌர்ணமி அல்லது நிறைமதி அந்தமாதத்தில் எந்த நட்சத்திரத்துடன் சேர்ந்து நிற்கின்றதோ அந்த நட்சத்திரத்தின் பெயர் அந்த மாதத்திற்கு சூட்டப்பட்டது.

13. சித்திரை மாதம் எனப் பெயர் சூட்டப்படக் காரணமாவது?
சித்திரை நட்சத்திரத்தோடு பூரணை சேர்ந்து நிற்றலாகும்.

14. வைகாசி மாதம் எனப் பெயர் சூட்டப்படக் காரணமாவது?
விசாக நட்சத்திரத்தோடு பூரணை சேர்ந்து நிற்றலாகும்.

## ஆண்டு

15. முற்காலத்தில் தமிழ் ஆண்டு எவ்வாறு அமைந்தது?
தைமாதம் முதல் மார்கழி மாதம் வரையும்

16. பண்டைய தமிழர் முறைமைப்படி சந்திரமான முறைப்படி ஆண்டைக் கணிப்பிட்டவர்கள் சிலரைக் கூறுக?
உரோமர், கிரேக்கர், வடஇந்தியர்

17. தற்போது உள்ள ஆண்டுக் கணிப்பு முறை எவ்வகையினைச் சார்ந்தது?
சூரியமான முறை சார்ந்தது.

18. சூரியமான முறைப்படி ஒரு ஆண்டு எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது?
சூரியன் மேட இராசியில் பிரவேசிக்கும் நாள் - (சித்திரை வருடப்பிறப்பு அன்று )
சூரியன் மீனராசியை விட்டு வெளியேறும் நாள் (வருடப்பிறப்பிற்கு முதல் தினம்)

19. சூரியமான அடிப்படையில் ஒருமாதம் எனக் கொள்ளப்படுவதாவது யாது?
இராசி மண்டலத்தின் ஒரு இராசியில் சூரியன் பிரவேசிப்பது முதல் அந்த இராசியை விட்டு சூரியன் விலகும் வரையான காலப்பகுதி ஒரு மாதமாகும்.

20. சூரிய மண்டலத்தில் உள்ள இராசிகளின் எண்ணிக்கை யாது?
பன்னிரண்டு

21. சூரியமான முறையின் பிரகாரம் சூரியன் செல்லும் பாதை எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது?
வடதிசை (உத்தராயனம்)
தென்திசை (தெட்சனாயனம்)

22. உத்தராயன காலமாவது யாது?
**சித்திரை வருடப்பிறப்பு** முதல் ஆனிமாதம் வரையான ஆறு மாதங்களாகும்

23. தெட்சனாயன காலமாவது யாது?
**ஆடிப்பிறப்பு** முதல் பங்குனிமாதம் வரையான ஆறு மாதங்களாகும்.

24. இந்து முறைப்படி ஆண்டுகளின் எண்ணிக்கையாவது?
பிரபவ வருடம் முதல் அட்சய வருடம் ஈறாக உள்ள அறுபது(60) வருடங்கள்

25. இந்து முறைப்படி ஒவ்வொரு தமிழ் வருடமும் எந்த மாதத்தில் ஆரம்பமாகும்?
சித்திரை வருடப்பிறப்புடன் ஆரம்பமாகும்.

26. 2020.04.12 ஆம் திகதி வரை இருந்த தமிழ் வருடத்தின் பெயர் யாது?
விகாரி வருடம்

27. 2020.04.15 ஆம் திகதி முதல் ஆரம்பித்துள்ள புதிய வருடத்தின் பெயர் யாது?
சார்வரி வருடம்

28. எம்மைப் போன்று அறுபது ஆண்டுச் சுழற்சியை பின்பற்றும் நாடு எது?
சீனா

29. அறுபதின் அடிப்படையில் கணிக்கப்படும் பிற விடயங்கள் எவை?
மணித்தியாலம், நிமிடம், வட்டப் பாகை

30. அறுபது ஆண்டுகள் கொண்ட ஒரு தொகுதிக்கு வழங்கப்படும் பெயர் யாது?
சகாப்தம்

31. சகாப்தங்கள் சிலவற்றினைக் குறிப்பிடுக?
சாலிவாகன சகாப்தம், விக்கிரம சகாப்தம், கொல்லம் சகாப்தம்

## வாரம்

32. கிழமை, வாரம் என்ற சொற்கள் தரும் பொருளாவது யாது?
உரிமை

33. கிழமைக்கு உரிமை என்று பொருள் கூறக்காரனமாவது யாது?
ஒவ்வொரு கிரகங்களிற்கு உரிய பெயர்களைக் கொண்டதாக 7 நாட்களுக்கும் பெயர் சூட்டப்பட்டிருத்தலால் ஆகும்.

34. கிழமைகளின் பெயர் எவற்றின் அடிப்படையில் அமைந்தது?
கோள்கள் அல்லது கிரகங்களின் பெயரால் (நவக்கிரகத்தில் இராகு, கேது இரண்டையும் தவிர்த்து)

35. சாயா அல்லது நிழல் கிரகங்கள் எனப்படுபவை எவை?
இராகு, கேது

36. கிரகங்களின் நடுநாயகமாக விளங்குபவர் யார்?
சூரியன்

37. இந்து முறைப்படி ஒருநாள் என்பது யாது?
ஒருநாள் சூரிய உதயம் முதல் அடுத்தநாள் சூரிய உதயம் வரையான காலம்.

## திதி

38. திதி என்பது யாது?
சந்திரன் வளர்வதையும் தேய்வதையும் அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுவது

39. சந்திரன் வளரும் காலம் எப்பெயர் பெறும்?
சுக்கிலபட்சம் (வெண்பக்கம்)

40. சந்திரன் தேயும் காலம் எப்பெயர் பெறும்?
கிருஸ்ணபட்சம் (கரும்பக்கம்)

41. சுக்கிலபட்சம் எனப்படுவது?

அமாவாசையை அடுத்து வரும் சந்திரனின் முதலாம் வளர்ச்சி நாள் ( பிரதமை) முதல் பூரணசந்திரன் வெளிப்படும் (பௌர்ணமி) வரையான சந்திரனின் வளர்ச்சிக்காலம் சுக்கிலபட்சமாகும்.

42. கிருஸ்ணபட்சம் எனப்படுவது?
பூரணையினை அடுத்து வரும் சந்திரனின் முதலாவது தேய்வு நாள் (பிரதமை) முதல் அமாவாசை வரையிலான சந்திரனின் தேய்வுக்காலம் கிருஸ்ணபட்சம் எனப்படும்.

43. ஒரு பட்சத்தில் எத்தனை திதிகள் உள்ளடங்கும்?
15

44. வளர்பிறை, தேய்பிறை ஆகிய இரண்டு பட்சத்திலும் எத்தனை திதிகள் உள்ளன?
30

## கரணம்

45. கரணம் என்றால் என்ன?
ஒரு திதியின் அரைப்பங்கு காலம் கரணமாகும்.

46. ஒரு திதியில் எத்தனை கரணங்கள் உள்ளடங்குகின்றன?
இரண்டு

47. கரணங்கள் மொத்தம் எத்தனை?
அறுபது (60)

## நட்சத்திரம்

48. சந்திரன் பூமியை சுற்றிவர எடுக்கும் நாள் அளவு யாது?
27 - 1/6 நாள்

49. நாளுக்குரிய நட்சத்திரம் என்றால் என்ன?
சந்திரன் நகரும் பாதையில் 27 தினங்களிலும் தரித்து நின்று சுழலும். ஒவ்வொரு நாளும் தரித்து நிற்கும் விண்மீன்களை அன்றைய நாளுக்குரிய நட்சத்திரம் என்பர்

50. நட்சத்திரங்கள் எத்தனை?
27

51. நட்சத்திரங்கள் சில தருக?
அஸ்வினி, பரணி, கார்த்திகை

52. ஒரு நட்சத்திரம் எத்தனை பாதங்களைக் கொண்டுள்ளது?
நான்கு

## யோகம்

53. யோகம் என்றால் என்ன?
சந்திரன் ஒவ்வொரு நட்சத்திரத்தையும் கடப்பதற்கு எடுக்கும் காலப்பகுதியே யோகம் எனப்படும்.

54. யோகங்கள் எத்தனை?
27

## இராசி

55. இராசி என்றால் என்?
ஒன்பது பாதங்கள் அல்லது இரண்டே கால்(2 – ¼) நட்சத்திரங்களின் தொகுதி ஒரு இராசியாகும்.

56. முதலாம் இராசிக்கு உரிய பெயர் என்ன?

மேட இராசி

57. இராசிகள் எத்தனை?
பன்னிரண்டு (12)

58. முதலாம் இராசியில் உள்ளடங்கும் நட்சத்திரங்கள் எவை?
அஸ்வினி 1ஆம் பாதம், அஸ்வினி 2ஆம் பாதம், அஸ்வினி 3ஆம் பாதம், அஸ்வினி 4ஆம் பாதம், பரணி 1ஆம் பாதம், பரணி 2ஆம் பாதம், பரணி 3ஆம் பாதம், பரணி 4ஆம் பாதம், கார்த்திகை 1ஆம் பாதம்.

**பஞ்சாங்கம்**

59. பஞ்சாங்கம் என்றால் என்ன?
வாரம், திதி, நட்சத்திரம், கரணம், யோகம் ஆகிய ஐந்து அங்கங்களைக் கொண்டு அமைந்த நூல் பஞ்சாங்கமாகும்

60. பஞ்சாங்கம் எந்தக் காலத்தில் யாரால் கணிக்கப்பட்டது?
குப்தர் காலத்தில் ஆரப்பட்டரால்

61. பஞ்சாங்கத்தை நம் வாழ்வில் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் எவை?
பண்டிகைக்காலம்
விழாக்கள் - (சமயவிழாக்கள், வீடுகுடிபுகுதல், பிறந்ததினம், ஏடுதொடக்குதல், காதுகுத்து, பூப்புனித நீராட்டு, தீருமணம், அபரக்கிரியைகள்)
ஆலய நித்திய நைமித்திய கிரியைகள் (கொடியேற்றம், கும்பாவிஷேகம்)

62. காலக் கணிப்பானது இந்து மரபில் பெறுகின்ற சிறப்பாவது யாது?
- இயற்கையுடன் இணைந்து இருப்பது.
- சமய மரபுகளில் இன்றியமையாது விளங்குவது
- வழிபாடுகள், விரதங்கள், பண்டிகைகள், விழாக்கள் முதலானவை காலக்கணிப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படல்.

**அலகு : 5 விரதங்கள் தரம் - 10,11**

1. ‘‘இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுவதன் பொருட்டேயாம்.’’ எனக் கூறியவர் யார்?
ஆறுமுகநாவலர்

2. சனிபகவானின் மறுபெயர்கள் எவை?
ஆயுட்காரன், பாவத்தின் கிரகம்

3. சனிபகவானினால் பீடிக்கப்படாதவர்கள் யாவர்?
பிள்ளையார், ஆஞ்சநேயர்

4. ‘‘தவம்’’ என்பதற்குத் திருவள்ளுவர் கூறும் வரைவிலக்கணம் யாது?
தனக்கு வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமையுமே தவம் என்கிறார்.

5. கந்தசஷ்டி எப்போது அனுட்டிக்கப்படுகின்றது?
ஐப்பசி மாதம் அமாவாசையை அடுத்த பிரதமை முதல் சஷ்டி ஈறாக ஆறு நாட்கள் இவ் விரதம் அனுட்டிக்கப்படுகின்றது.

6. விநாயகசஷ்டி விரதத்தின் மறுபெயர்கள் எவை?
பிள்ளையார் கதை, பெருங்கதை

7. திரிகரணங்களும் எவை?
மனம், வாக்கு, காயம்

kalvi.lk

8. விநாயகசஷ்டி விரத காலத்தில் பாராயணம் செய்யப்படும் நூல் எது?
   பிள்ளையார் கதை

9. ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் ஆலயம் எது?
   காரைநகர் சிவன் கோயில்

10. வரலட்சுமி விரதத்தின் மறுபெயர் யாது?
    குலப்பண்டிகை

11. கார்த்திகை விளக்கீடு எப்போது கொண்டாடப்படுகிறது?
    கார்த்திகை மாதப் பூரணையன்று

12. கார்த்திகை விரதம் எத்தெய்வத்திற்குரியது?
    முருகப் பெருமான்

13. அக்கினித்தலம் என்று சிறப்பிக்கப்படும் தலம் எது?
    திருவண்ணாமலை

14. விரதம் என்பதன் பொருள் யாது?
    மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடல் விரதம் ஆகும்.

15. புரட்டாதிச்சனி விரதம் யாரை நோக்கி அனுட்டிக்கப்படுகின்றது?
    சனீஸ்வரபகவான்

16. சனீஸ்வரபகவானுடைய தாய், தந்தையாகக் கருதப்படுபவர்கள் யார்?
    சூரியபகவான், உஷாதேவி

17. சனீஸ்வரபகவானின் வாகனமாகக் கருதப்படுபவது எது?
    காகம்

18. சனிபகவானுக்கு நைவேத்தியமாக வழங்கப்படும் பொருட்கள் எவை?

| | |
|---|---|
| எள்ளுச்சாதம் | கறுப்பு, நீலநிறப்பட்டு |
| நீலநிறமலர்கள் | நல்லெண்ணெய் |

19. கந்தசஷ்டி எக்கடவுளை நோக்கி அனுட்டிக்கப்படுகின்றது?
    முருகக் கடவுள்

20. விநாயகருக்குரிய விரதங்கள் எவை?
    - வளர்பிறைச்சதுர்த்தி விரதம்
    - சங்கடகரசதுர்த்தி விரதம்
    - ஆவணிச்சதுர்த்தி விரதம்
    - விநாயகசஷ்டி விரதம்

**அலகு : 6     தீபாவளி, சைவசாதனங்கள்     தரம் - 10,11**

## தீபாவளி

1. ''பண்டிகை'' என்ற சொல்லின் பொருள் யாது?
   பெருநாள், விசேட நாள்

2. பண்டிகைகள் நான்கினைக் குறிப்பிடுக?
   - தைப்பொங்கல்
   - சித்திரைப் புத்தாண்டு
   - ஆடிப்பிறப்பு
   - தீபாவளி

3. 2020 ஆம் ஆண்டு பிறக்கப்போகும் சித்திரைப் புத்தாண்டின் பெயர் யாது?
சார்வரி வருடம்

4. தீபாவளி எப்போது கொண்டாடப்படுகிறது?
ஐப்பசி மாத அபரபக்க சதுர்த்தசியில்

5. விரதங்களும், பண்டிகைகளும் எமக்கு எதைப் புலப்படுத்துகின்றன?
விரதங்களும், பண்டிகைகளும் சமயம் வேறு, வாழ்வு வேறு அன்று. வாழ்க்கையோடு இணைந்தது தான் சமயம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

6. உத்தராயண, தட்சனாயண தொடக்கநாள் பண்டிகை யாது?
உத்தராயணம் - தைப்பொங்கல
தட்சனாயணம் - ஆடிப்பிறப்பு

7. தீபாவளி பண்டிகையுடன் தொடர்புடைய அசுரன் யார்?
நரகாசுரன்

8. இளவேனில் கால ஆரம்பநாள் பண்டிகை எது?
சித்திரைப் புத்தாண்டு

9. தீபாவளி என்பதன் பொருள் யாது?
தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்தல் என்பது பொருளாகும்.

10. காத்தல் கடவுள் யார்?
விஷ்ணு

11. தீபாவளி உணர்த்தும் தத்துவம் யாது?
ஓவ்வொருவரும் ஞானமாகிய ஒளியை அடைவதுதான் தீபாவளியின் தத்துவமாகும்.

12. தீபாவளிப் பண்டிகை தினத்தன்று இடம்பெறும் கேளிக்கை நிகழ்வுகள் எவை?
- புத்தாடை அணிதல்.
- பட்டாசு கொளுத்துதல்.
- ஆடல், பாடல் நிகழ்வுகளில் ஈடுபடல்.

13. ''நல்லவர்களைக் காத்து தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும், காலந்தோறும் நான் தோன்றுகின்றேன்.'' என்னும் கூற்றுக்குரியவர் யார்? இக்கூற்று கூறப்பட்டுள்ள நூல் எது?
- கிருஷ்ணபகவான்
- பகவத்கீதை

## சைவசாதனங்கள்

14. சிவசின்னங்கள் எவை?
வீபூதி
உருத்திராக்கம்

15. திருநீறு அணியும் இரு முறைகளும் எவை?
உத்தூளனம்
திரிபுண்டரம்

16. திருநீற்றின் மறுபெயர்கள் எவை?
வீபூதி, பஸ்மம், பசிதம், இரட்சை, ஷாரம்

17. திருநீற்றின் மகிமையை உணர்த்திய சிவனடியார்கள் யாவர்?
சம்பந்தர், அப்பர், மெய்ப்பொருள்நாயனார்

18. ''நீறில்லா நெற்றி பாழ்'' எனப் பாடியவர் யார்?
ஔவையார்

19. திருநீற்றின் மகிமை கூறப்படும் நூல்கள் எவை?
- வேதங்கள்
- ஆகமங்கள்
- புராணங்கள்
- இதிகாசங்கள்
- தேவாரத் திருமுறைகள்

20. "முத்தி தருவது நீறு" எனப் பாடியவர் யார்?
சம்பந்தர்

21. சிவப்பிரசாதமாக வழங்கப்படுவது எது?
திருநீறு

22. திருநீற்றின் வகைகள் எவை?
கற்பம், அனுகற்பம், உபகற்பம், அகற்பம்

23. உருத்திராக்கம் என்பதன் பொருள் யாது?
உருத்திரனது கண் எனப் பொருள்படும்.

24. சிவனடியார்கள் போற்றி அணியவேண்டிய புனித சின்னம் எது?
உருத்திராக்கம்

25. உருத்திராக்கம் எதனை நினைவூட்டும் சாதனமாக உள்ளது?
ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையை நினைவூட்டும் சாதனமாக உள்ளது.

26. "நெக்குள் ஆர்வம் மிகப்பெருகி நினைந்து…" எனும் பதிகத்தைப் பாடியவர் யார்?
சம்பந்தர்

27. உருத்திராக்கம் அணியும் சந்தர்ப்பங்கள் எவை?
- சந்தியாவந்தனம்
- சிவபூசை
- செபம்
- தேவார, திருவாசக பாராயணம்
- புராணபடனம்
- சிவாலய தரிசனம்

28. அகத்தே அணியும் சிவசின்னம் எது?
பஞ்சாட்சரம்

29. புறத்தே அணியும் சிவசின்னங்கள் எவை?
- திருநீறு
- உருத்திராக்கம்

30. பஞ்சாட்சரத்தின் மறுபெயர் யாது?
திருவைந்தெழுத்து

31. பஞ்சாட்சரத்தின் இரு வகைகளும் எவை?
- சூக்கும பஞ்சாட்சரம்
- தூல பஞ்சாட்சரம்

32. சூக்கும பஞ்சாட்சர மந்திரம் எது?
சிவாயநம

33. தூல பஞ்சாட்சர மந்திரம் எது?
நமசிவாய

Education கல்வி அධ்‍யாපන

34. பஞ்சாட்சரத்தின் பொருளையும், பெருமைகளையும் விரிவாக விளக்கும் நூல் எது?
திருமந்திரம்

35. பஞ்சாட்சரத்தின் பெருமைகளைக் கூறும் பதிகங்களை அருளியவர்கள் யாவர்?
- திருஞானசம்பந்தர்
- திருநாவுக்கரசர்
- சுந்தரர்

36. "காதலாகிக் கசிந்து கண்ணீர்….." எனும் நமசிவாயப் பதிகத்தைப் பாடியவர் யார்?
திருஞானசம்பந்தர்

37. திருநீறு என்றால் என்ன?
பசுவின் சாணத்தை நெருப்பிலே சுடுவதால் உண்டாகும் தூய நீறே திருநீறு எனப்படும்.

38. திருநீறு எத்திசைகளை நோக்கியவாறு நின்று அணியவேண்டும்?
வடக்கு, கிழக்கு

39. சிவநெறி என்பது யாது?
சிவனைப் பரம்பொருளாகக் கொள்வது சிவநெறி ஆகும்.

## அலகு : 7 திருமணச்சடங்கு, அபரக் கிரியைகள் தரம் - 10,11

### திருமணச்சடங்கு

1. வாழ்வியல் சடங்குகளின் இரு வகைகளும் எவை?
- பூர்வக்கிரியை – உடலில் உயிர் தங்கியிருக்கும்போது செய்யப்படும் கிரியை.
  உதாரணம் :- அன்னப்பிரசாரனம்
  வித்தியாரம்பம்
  திருமணம்
  பெயர் சூட்டுதல்.
  புதுமனை புகுதல்
- அபரக்கிரியை – உடலை விட்டு உயிர் போனபின் செய்யப்படும் கிரியை.
  உதாரணம் :- ஈமக்கிரியை
  சபிண்டீகரணம்
  அந்தியேட்டி
  சிரார்த்தம்

2. திருமணக் கிரியையில் அடங்கும் விடயங்கள் எவை?

| | |
|---|---|
| மங்கல நீராட்டுதல் | மாலை மாற்றுதல் |
| காப்புக் கட்டுதல் | அக்கினி வலம் வருதல் |
| கன்னிகாதானம் | அம்மி மிதித்தல் |
| மங்கல நாண் பூட்டுதல் | அருந்ததி பார்த்தல் |

3. திருமணத்தை ஒட்டிய பூர்வாங்க சம்பிரதாயங்கள் எவை?
- இரு வீட்டாரும் சேர்ந்து நிச்சயம் செய்தல்.
- தாலி செய்வதற்காக பொன்னுருக்குதல்.
- மணமக்கள் வீட்டில் கன்னிக்கால் நட்டுதல்.

4. திருமண சம்பிரதாயங்கள் எவை?

| | |
|---|---|
| சங்கற்பம் செய்தல் | பால், பழம் புசித்தல் |
| காப்புக் கட்டுதல் | அக்கினி வலம் வருதல் |
| கன்னிகாதானம் | அம்மி மிதித்தல் |
| மங்கல நாண் பூட்டுதல் | அருந்ததி பார்த்தல் |
| மாலை மாற்றுதல் | |

5. ‘‘கன்னிகாதானம்’’ என்பது யாது?
   மணமக்களுக்கு காப்பு கட்டியபின் மணமக்களின் பெற்றோர் மணமேடைக்கு அருகில் வந்து அமர்வர். மணமகளின் பெற்றோர் தம் மகளை மணமகனிடம் ஒப்படைக்கும் சடங்கு இடம்பெறும். இதுவே கன்னிகாதானம் எனப்படும்.

6. மணமக்கள் எமது சமயத்தில் எவ்வாறு பார்க்கப்படுகின்றார்கள்?
   சிவ சக்தி ரூபமாகப் பார்க்கப்படுகின்றார்கள்.

7. அக்கினியைச் சுற்றி மணமக்கள் வலம் வருவற்கான காரணம் யாது?
   அக்கினி சாட்சியாகக் கைபிடித்தல் என்பதை உணர்த்துவதற்காக வலம் வருவார்.

8. அருந்ததி பார்த்தல் ஏன் இடம்பெறுகின்றது?
   இல்லறம் சிறக்க வேண்டும் என்பதற்காகப் பார்க்கப்படுகின்றது.

## அபரக் கிரியைகள்

9. கிரியைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
   2 வகைப்படும் 1) வீட்டுக் கிரியை 2) ஆலயக் கிரியை

10. வீட்டுக் கிரியைகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?
    **2** வகைப்படும் 1) பூர்வக் கிரியை 2) அபரக் கிரியை

11. அபரக் கிரியை என்றால் என்ன?
    உடலை விட்டு உயிர் நீங்கிய பின் ஆற்றப்படும் கிரியை அபரக் கிரியை எனப்படும்.

12. ‘‘அபரம்’’ என்பதன் பொருள் யாது?
    பிந்தியது என்பது பொருள்

13. ‘‘கிரியை’’ என்பதன் பொருள் யாது?
    செயல் என்பது பொருள்

14. இறந்த ஒருவருக்கு அபரக் கிரியைகள் செய்வதற்குத் தகுதியானவர்கள் யார்?
    அவரது புதல்வர்கள்

15. அஸ்தி சஞ்சயனம் எனப்படுவது யாது?
    பூதவுடல் தகனம் செய்யப்பட்டதும் தகனம் செய்த இடத்திலுள்ள சாம்பலை விதிமுறைப்படி சேகரித்து அதைப் புண்ணிய நீர் நிலையில் கரைத்து விடும் கிரியை அஸ்தி சஞ்சயனம் எனப்படும்.

16. ஒருவர் இறந்த பின்னர் எத்தனை நாட்களின் பின்னர் அந்தியேட்டிக் கிரியை இடம் பெறுவது உகந்தது?
    30 ஆம் நாளில் இடம்பெறுவது சிறப்பு

17. ‘‘அந்தி’’ என்பதன் பொருள் யாது?
    இறுதி

18. ‘‘இட்டி’’ என்பதன் பொருள் யாது?
    யாகம்

19. ‘‘அந்தியேட்டி’’ என்பதன் பொருள் யாது?
    இறுதியாகச் செய்யப்படும் யாகம் என்பது பொருளாகும்.

20. ‘‘அந்தியேட்டிக் கிரியை’’ பொதுவாக எவ்விடத்தில் மேற்கொள்ளப்படும்?
    ஆற்றங்கரை அல்லது சமுத்திரக்கரையில்

21. ‘‘மாசிகம்’’ எனப்படுவது யாது?

ஒருவரின் இறப்பின் பின் ஒரு வருட காலம் வரையில் ஒவ்வொரு மாதமும் அவர் இறந்த திதியில் செய்யப்படும் கிரியை மாசிகம் எனப்படும்.

22. ''ஆண்டுத் திவசம்'' என்றால் என்ன?
ஒருவர் இறந்து ஓர் ஆண்டு முடிவில் செய்யப்படும் கிரியை ஆண்டுத் திவசம் எனப்படும்.

23. ''சிரார்த்தம்'' என்றால் என்ன?
சிரத்தையுடன் செய்யப்படுவது சிரார்த்தம் எனப்படும்.

24. மகாளய பட்சக் காலத்தைத் தருக?
புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள பதினைந்து நாட்கள்.

25. ''பிதிர்கள்'' எனப்படுவது யாது?
இறந்த மூதாதையரின் ஆத்மாக்கள் பிதிர்கள் எனப்படுகின்றன.

26. ''மகாளயம்'' செய்வதன் நோக்கம் யாது?
பிதிர்கள் நற்கதி அடைய வேண்டும் எனும் நோக்கிலேயே செய்யப்படுகின்றன.

27. தாயை இழந்தவர்கள் அநுட்டிக்கும் விரதம் யாது?
சித்திராப் பௌர்ணமி விரதம்

28. தந்தையை இழந்தவர்கள் அநுட்டிக்கும் விரதம் யாது?
ஆடி அமாவாசை விரதம்

29. ''தென்புலத்தார்'' எனப்படுவோர் யார்?
இவ்வுலகில் வாழ்ந்து தமது சரீரங்களை விட்டுப் பிரிந்த ஆத்மாக்கள் தெற்குத் திசையில் வாழ்வதாக கருதப்படுகின்றது. இவ் ஆத்மாக்களையே தென்புலத்தார் என்கின்றோம்.

30. பிதிர்களுக்குரிய வழிபாடுகள் 4 தருக?
1) அந்தியேட்டி 2) சிரார்த்தம் 3) ஆண்டுத்திவசம் 4) மகாளயம்

31. பிதிர்கடன்களை நிறைவேற்றுவதற்கு உகந்த தலங்கள் யாவை?
- கீரிமலை நகுலேஸ்வரம்
- முன்னேஸ்வரம்
- மாமாங்கேஸ்வரம்

32. பிதிர்களுக்குரிய வழிபாடுகளை இயற்றுவதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?
- மூதாதையர்களின் ஆசி கிட்டும்.
- வாழ்வில் துன்பம் நீங்கி இன்பம் பெருகும்.

33. மகாளய பட்ச காலத்தில் செய்யத்தக்க செயல்கள் யாவை?
- தான தருமம்
- பிதிர் தர்ப்பணம்

## மேலதிக அறிவிற்கான வினா விடைகள்

34. அபரக் கிரியைகளின் சிறப்பினை எவை விளக்குகின்றன?
இதிகாச புராணங்களும், சிவாகமங்களும், பத்ததிகளும் விளக்குகின்றன.

35. அபரக் கிரியைகளுள் அடங்கியுள்ள பல கிரியைகள் எவை?
சூர்ணோற்சவம், தகனம், அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசிகம், சிரார்த்தம், மகாளயம்

36. அபரக் கிரியைகள், இறந்தவரின் உடலை எவ்விதமாகப் பாவித்து செய்யப்படுகின்றது?
- சிவதீட்சை பெற்றவர்களின் பூதவுடலை சிவமாகப் பாவித்து பூசை செய்வர்.
- சிவதீட்சை பெறாதவர்களுக்குப் பூதவுடலில் தீட்சை வைத்த பின்பு கிரியைகள் செய்யப்படும்.

37. ஒருவர் இறந்த பின்பு நடைபெறும் வீட்டுச் சடங்குகளை நிரற்படுத்தி எழுதுங்கள்?
- பூதவுடலை வீட்டின் பிரதான மண்டபத்தில் கிடத்துவர்.
- வீட்டின் தெற்குப் புறத்தில் பூதவுடலுக்குக் குளிப்பாட்டுதல் இடம்பெறும்.
- பூதவுடலிற்கு வாசனப் பொருட்களைத் தெளிப்பர்.
- ஆடை அணிவித்து, மலர்மாலை சூட்டி, அலங்காரம் செய்விப்பர்.
- பூதவுடலை மண்டபத்தில் தெற்கே தலையும், வடக்கே காலையும் வைத்துக் கிடத்துவர்.
- வீட்டு முற்றத்தில் மண்டபம் அமைத்து, குருக்கள் பூசை செய்த பின் பூதவுடலுக்குத் திருநீறு, சந்தனம், குங்குமம் சாத்தப்படும்.
- இதன் பின்பு பொற்சுண்ணம் இடித்தல் நிகழ்வு இடம்பெறும்.
- திருப் பொற்சுண்ணப் பாடல்களைப் பாடி, இடித்த சுண்ணப்பொடியை நீரிட்டுக் குழைத்து பூதவுடலில் கண், நெற்றியில் வைப்பதுடன் உடலெங்கும் தெளிக்கப்படும்.
- கற்பூரம் காட்டுதல், பேரப்பிள்ளைகள் தீப்பந்தம் பிடித்தல், திருமுறை ஓதுதல், வாய்க்கரிசி போடுதல் நிகழவுகள் நடைபெறும்.
- வீட்டிலிருந்து பூதவுடலின் கால்கள் முன்பக்கமாக இருக்கும் வகையில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

38. அபரக் கிரியையின்போது குருக்கள் எவ்வித பூசைகள் செய்வார்?
வருண கும்ப பூசை, அக்கினி பூசை

39. அபரக் கிரியையின்போது சுண்ணப்பொடி எதனை இட்டு இடிக்கப்படுகிறது?
அறுகு, மஞ்சள் என்பவற்றை இட்டு இடிக்கப்படுகிறது.

40. பூதவுடலிற்கு குளிப்பாட்டும்போது எதனைப் பயன்படுத்துவர்?
அரப்பு, எண்ணெய் பூசி, அரிசிமா, மஞ்சள்மா, தயிர், பால் என்பவற்றைத் தடவி இளநீர், கும்பநீர் என்பவற்றால் உடலின் கால் பகுதி தொடங்கி தலை வரை குளிப்பாட்டுவர்.

41. சுடலையில் விறகுகள் எப்பக்கமாக அடுக்கப்படல் வேண்டும்? பூதவுடல் எப்பக்கமாக விறகின் மேல் வைக்கப்படும்?
- விறகுகள் தெற்கு வடக்காக அடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- பூதவுடலின் தலை தெற்குப் பக்கமாக அமையும்படி வைத்தல் வேண்டும்.

42. பூதவுடலுக்கு கொள்ளி எதன் பின் வைக்கப்படும்?
- பூதவுடல் விறகின்மேல் தெற்குப் பக்கமாக அமையும்படி வைக்கப்படும்.
- சுடலைக்கு வந்தவர்கள் வாய்க்கரிசி போடுதல்.
- கர்த்தா வாய்க்கரிசி போடுவார்.
- கர்த்தா மட்குடக் கும்பத்துடன் இடப் புறமாக மூன்று தரம் பூதவுடலைச் சுற்றி வந்து குடத்தைக் கீழே போட்டு உடைப்பார்.
- அதன் பின்பு பூதவுடலில் தலைப் பக்கமாகக் கர்த்தாவால் கொள்ளி வைக்கப்படும்.

43. பூதவுடலுக்கு கொள்ளி வைத்த பின் கடமை செய்பவர் எவற்றைச் செய்வார்?
கால்மாட்டில் சென்று பூணூல், பவித்திரம் என்பவற்றைச் சிதையில் இட்ட பின்பு திரும்பிப் பார்க்காது வீடு செல்ல வேண்டும்.

44. காடாற்றுதல் என்றால் என்ன?
பூதவுடல் தகனம் செய்து ஐந்தாம் நாள் தகிக்கப்பட்டவரின் எலும்பையும், சாம்பலையும் முறையான நமஸ்காரங்களுடன் எடுத்துப் புண்ணிய தீர்த்தத்தில் சேர்த்தல் அஸ்தி சஞ்சயனம் அல்லது காடாற்றுதல் எனப்படும்.

45. அந்தியேட்டிக் கிரியைகளின் மூன்று வகைகளும் எவை? இவ் அந்தியேட்டிகள் எவர்களுக்குரியது?
1) நிர்வாண அந்தியேட்டி 2) விசேட அந்தியேட்டி 3) சமய அந்தியேட்டி
- நிர்வாண அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி இரண்டும் உயர் தீட்சையாளருக்குரியவை.
- சமய அந்தியேட்டி சாதாரண தீட்சையாளருக்குரியது.

46. சபிண்டீகரணம் என்றால் என்ன?
இறந்தவரைப் பிதிர் தேவர்களோடு சேர்ப்பதற்காகப் பிண்டமிட்டுச் செய்யப்படும் கிரியை சபிண்டீகரணம் ஆகும்.

47. ''பிண்டம்'' என்றால் என்ன?
பிண்டம் என்பது அரிசிமா, எள், உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை போன்ற பொருட்களால் செய்யப்பட்ட உருண்டை ஆகும்.

48. திவசத்தினை வேறு எவ்விதம் அழைப்பர்?
திதி என அழைப்பர்.

49. ''ஆட்டைத் திவசம்'' என்றால் என்ன?
ஒருவர் இறந்து ஒரு ஆண்டின் பின் செய்யும் சிரார்த்தம் ஆட்டைத் திவசம் ஆகும்.

50. ''பிண்டமிடல்'' என்றால் என்ன?
இறந்தவரது ஆன்மா ஈடேற்ற பரிபூரண சித்தியின் பொருட்டு அரிசி, எள், உழுந்து, பால், தேன், தயிர், வாழைப்பழம், நெய் எனும் பொருட்களை உருண்டையாக உருட்டிச் சிரார்த்த நிகழ்வில் பயன்படுத்தப்படும். இது பிண்டமிடல் எனப்படும்.

51. சிரார்த்த தினம் எவ்வாறு கணிக்கப்படும்?
- ஒருவர் இறந்த திதியைக் கொண்டே இது நிச்சயிக்கப்படும்.
- சிரார்த்த திதி வந்தால் பின்னைய திதியைக் கைக்கொள்ள வேண்டும்.

52. பிதிர் வழிபாடு வேறு எவ்விதம் கூறப்படும்?
முன்னோர் வழிபாடு

53. மகாளயம் என்ற சொல்லின் பொருள் யாது?
பெரிய ஒடுக்கம் என்பது பொருளாகும்.

54. பிதிர்களுக்கு விசேட காலம் என எக்காலத்தைக் கூறுவர்?
வருடத்தில் புரட்டாதி மாதத்து அமாவாசைக்கு முன்னுள்ள 15 நாட்கள் பிதிர்களுக்கு விசேட காலம் எனக் கருதுவதுண்டு.

55. மகாளய பட்சம் என்றால் என்ன?
வருடத்தில் புரட்டாதி மாதத்து அமாவாசைக்கு முன்னுள்ள 15 நாட்கள் பிதிர்களுக்கு விசேட காலம் என்பர். இக்காலத்தில் அவர்களைத் திருப்தி செய்யும் பொருட்டு செய்யப்படும் சிரார்த்தம் ''மகாளய பட்சம்'' எனப்படும்.

56. மகாளய காலத்தில் செய்யப்படும் தர்ப்பணமும், சிரார்த்தமும் ஏன் சிறப்புடையது எனக் கூறப்படுகிறது?
மகாளய காலத்தில் பிதிர்கள் பிதிர்லோகம் நீங்கிப் பூவுலகம் வந்து பசியினாலும், தாகத்தினாலும் தமது பிள்ளைகள், முதியோரின் இல்லம் நாடி வந்து பூவுலகில் தமக்கு நெய், தேன், பாயாசம் எள்ளுடன் நீர் என்பன கிடைக்கமாட்டாதா? என ஏங்குகிறார்கள். எனவே தான் இக்காலம் செய்யும் தர்ப்பணமும், சிரார்த்தமும் சிறப்பானதாகும்.

57. ஏகோதிட்டம் என்றால் என்ன?
இறந்தவருக்காக ஒருவரை வரித்துக் கொடுத்தல் ஏகோதிட்டம் எனப்படும்.

58. பிதிர்களுக்குரிய விரதங்கள் 2 தருக?
சித்திராப் பௌர்ணமி ஆடி அமாவாசை

59. அபரக் கிரியைகள் செய்வதன் நோக்கம் யாது?
இறந்தபின் ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, உயர்ந்த நிலை அடையும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பண்டுதொட்டு இற்றை வரை வழிவழியாக மேற்கொள்ளப்படுகின்றன.

60. தந்தை இறந்தால் கடமைகளைச் செய்பவர் யார்?
மூத்த மகன்

61. தாய் இறந்தால் கடமைகளைச் செய்பவர் யார்?
இளைய மகன்

**அலகு : 8 வேதங்கள், ஆகமங்கள் தரம் - 10,11**

## வேதங்கள்

1. இந்து சமயத்தின் பிரிவுகளையும் முழுமுதல் கடவுளையும் குறிப்பிடுக?
   - சைவம் - சிவபெருமான்
   - சாக்தம் - சக்தி
   - காணபத்தியம் - விநாயகர்
   - கௌமாரம் - முருகன்
   - வைணவம் - விஷ்ணு
   - சௌரம் - சூரியன்

2. இந்து சமயத்தின் பிரிவுகளை வேறு எவ்வாறு அழைப்பர்?
சண்மதம்

3. “வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்....” எனக் கூறும் நூல் யாது? பாடியவர் யார்?
திருமந்திரம், திருமூலர், 10 ஆம் திருமுறை

4. சைவ சமயத்தின் முதல் நூல்களைக் குறிப்பிட்டு பொது, சிறப்பு எனப் பாகுபடுத்துக?
   - வேதம் - பொது
   - ஆகமம்- சிறப்பு

5. வேதம் என்பதன் பொருளைத் தருக?
அறிவு

6. வேதத்தின் மறுபெயர்களையும், பொருளையும் தருக?
   - சுருதி - காதால் கேட்கப்படுவது
   - எழுதாமறை - கால காலமாகச் செவி வழியாகப் பேணப்பட்டமை.
   - அபௌருசயம் - மனிதனால் ஆக்கப்படாதவை.

7. நால் வேதங்களும் எவை?
   - இருக்கு
   - யசுர்
   - சாமம்
   - அதர்வனம்

8. “உள்பொருள் ஒன்றே: அதனையே அறிந்தோர் பல பெயர்களால் வழங்குவர்” என்ற சுலோகம் உள்ள வேதம் யாது?
இருக்கு

9. வேள்விகள் பற்றி சிறப்பாக கூறும் வேதம் யாது?
யசுர்

10. காலத்தால் முந்திய இசை நூல் எது?
சாம வேதம்

11. அதர்வ வேத மந்திரங்களின் தொகுப்பு கூறும் விடயங்கள் எவை?
நீண்ட ஆயுள், செல்வம், நோய் நீக்கம், பகை நீக்கம்

12. வேதத்தின் 4 பகுதிகளையும், அவை குறிப்பிடும் விடயங்களையும் தருக?
   - மந்திரங்கள் - தெய்வங்களை நோக்கிப் பாடும் துதிப்பாடல்கள்
   - பிராமணங்கள் - யாகங்களின்போது மேற்கொள்ளப்படும் சடங்கு முறைகள்.

- ஆரணியங்கள் - சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களை உருவங்கள், கதை வடிவில் எடுத்துரைப்பன.
- உபநிடதங்கள் - வேதத்தின் இறுதிப்பகுதி. ஆழமான ஆன்மீக உண்மைகளை விளக்குவது. தத்துவங்களின் அடிப்படை.

13. வேதங்களின் 3 காண்டங்களும் எவை?
    - கர்மகாண்டம் - கிரியைகள், மத ஆசாரங்கள் பற்றிக் கூறும் பகுதியாகும்.
    - உபாசன காண்டம் - தியானத்திற்கு உரிய விடயங்கள்
    - ஞான காண்டம் - தத்துவ விளக்கங்களை உள்ளடக்கிய பகுதி.

### ஆகமங்கள்

14. இந்துசமயத்தின் முதல் நூல்கள் எவை?
    வேதம் ஆகமம்

15. இந்துசமயத்தின் பொது நூல் என சிறப்பிக்கப்படும் நூல் எது?
    வேதம்

16. இந்துசமயத்தின் சிறப்பு நூல் என சிறப்பிக்கப்படும் நூல் எது?
    ஆகமம்

17. வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?
    அறிவு

18. ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?
    தொன்று தொட்டு வரும் அறிவு
    இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞானநூல்

19. சைவ ஆகமங்கள் எப்பெயரால் அழைக்கப்படுகின்றன?
    சிவாகமங்கள்

20. சிவாகமங்களின் எண்ணிக்கை யாது?
    28 (காமிகம், வாதுளம்)

21. வைணவ ஆகமங்கள் எப்பெயரால் அழைக்கப்படுகின்றன?
    பஞ்சராத்திரம்

22. சாக்த ஆகமங்கள் எப்பெயரால் அழைக்கப்படுகின்றன?
    தந்திரங்கள்

23. ஆகமங்கள் யாரால் அருளிச் செய்யப்பட்டது?
    இறைவனால்

24. ஆகமங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டன என்பதற்கான சான்றாதாரங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
    - வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்….. (திருமந்திரம்)
    - மன்னுமாமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம்….. (திருவாசகம்)
    - நாயகனார் முன்னர் உரைத்த ஆகமநூல்……. (பெரியபுராணம்)

25. சிவபெருமான் சிவாகமங்களை யாருக்கு உபதேசித்தார்?
    உமாதேவியாருக்கு

26. ‘‘வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைநூல்’’ எனப் பாடியவர் யார்?
    திருமூலர்

27. ‘‘மன்னுமாமலை மகேந்திரம் அதனில்….’’ எனப் பாடியவர் யார்?
    மாணிக்கவாசகர்

28. “நாயகனார் முன்னர் உரைத்த ஆகமநூல்……” எனக் கூறியவர் யார்?
சேக்கிழார்

29. “ஆகமம் ஆகி நின்று அன்னிப்பான் தாள் வாழ்க” எனப் பாடியவர் யார்?
மாணிக்கவாசக சுவாமிகள்

30. சிவபெருமானின் திருமுகங்கள் எத்தனை? அவை எவை?
ஐந்து 1) ஈசானம் 2) தற்புருஷம் 3) சத்தியோசாதம் 4) வாமதேவம் 5) அகோரம்

31. உபாகமங்களின் எண்ணிக்கை யாது?
207 உதாரணம் :- தரசிங்கம் (மிருகேந்திரம்), விசுவான்மிகம்

32. சிவாகமங்களின் பிரிவுகள் எத்தனை? அவை எவை?
நான்கு 1) சரியாபாதம் 2) கிரியாபாதம் 3) யோகாபாதம் 4) ஞானபாதம்

33. சரியாபாதத்தில் கூறப்படும் விடயங்கள் யாவை?
தொண்டுகள், பிராயச்சித்த வழி, பவித்திர வழி, சிவலிங்க இலக்கணம், சமயாசாரங்கள், உமாமகேஸ்வர இலக்கணம், சிரார்த்தம், அந்தியேட்டி விதி போன்ற விடயங்கள்

34. கிரியாபாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?
மந்திர உச்சாடனம், சந்தியாவந்தனம், பூசை, செபம், தீட்சை, சிவசின்னங்கள் போன்ற விடயங்கள்

35. யோகாபாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?
முப்பத்தாறு தத்துவங்கள், அட்டமாசித்திகள், அட்டாங்கயோகம், ஆறு ஆதாரங்கள் போன்ற விடயங்கள்

36. ஞானபாதத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?
முப்பொருள் உண்மை, சிவனின் சொரூபம், மூவகை ஆன்மா, மூவகை கன்மம் போன்ற விடயங்கள்

37. எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்……. எனக் கூறும் நூல் எது?
பெரியபுராணம்

38. ஆகமங்களில் கூறப்படும் விடயங்கள் எவை?
- கோயிற் கிரியைகளும், அவற்றைச் செய்யும் முறைகளும்
- வழிபடுவோருக்குரிய இயல்புகள்
- சைவ சாதன வழிபாட்டினால் ஆன்மாக்கள் அடையும் பேறுகள்
- ஆலயம் அமைப்பதற்கான இடம், அதன் அமைப்பு முறை
- படிம இலக்கணம், படிமங்களை வார்க்கும் முறை
- இறை வாகனங்கள், தேர் அமைக்கும் முறை
- அர்ச்சகர், சிற்பாசிரியர் ஒழுக்கம்

39. மனதிலே கோயில் கட்டிய சிறப்பிற்குரிய நாயனார் யார்?
பூசலார் நாயனார்

40. திருக்கோவிலுக்கு நிலத்தைத் தேர்ந்தெடுத்தல் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
பூகர்ஷணம்

41. ஆகமங்கள் சிவனடியார்களைப் பாகுபடுத்தும் முறைகளைக் குறிப்பிடுக?
சரியையாளர், கிரியையாளர், யோகியர், ஞானியர்

42. ஆகமங்களின் குறிக்கோள் யாது?
ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாகிய வீடுபேற்றை அடையச் செய்தல் ஆகும்.

43. ஆகமம் சிறப்பு நூல் என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
இந்து சமயத்தின் உட்பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறான ஆகமங்கள் காணப்படுவதனால் ஆகும்.

## அலகு : 9 திருமுறைகள், தோத்திரப் பாடல்கள் தரம் - 10,11

1. திருமுறைப் பாடல்களைப் பாடியோர் எத்தனை பேர்?
   27

2. திருமுறைப் பாடல்களைப் படிப்பதனால் பெறும் பயன்கள் எவை?
   இறைபக்தி, ஆன்மீக உணர்வு வளரும், மனநின்மதி ஏற்படும், விரும்பிய பலனைப் பெறலாம், நோய்கள் நீங்கும், கவலைகள் நீங்கும், வெற்றி கிடைக்கும்.

3. தேவார முதலிகள் யாவர்?
   திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார்

4. அடங்கன் முறை என்றால் என்ன?
   முதல் 7 திருமுறைகள் அதாவது தேவாரப்பாடல்

5. எரியேந்தி ஆடுபவர் யார்? எக்கையில்?
   - நடராஜப் பெருமான்
   - இடது மேற்கை

6. எடுத்த பொற்பாதத்தின் பெயர் யாது? இதனை எக்கடவுளிடம் காணலாம்?
   குஞ்சிதபாதம் நடராஜர்

7. 8ம் திருமுறையில் அடங்குபவை எவை? பாடியவர்கள் யார்?
   திருவாகசம், திருக்கோவையார் – மாணிக்கவாசகர்

8. 9ம் திருமுறையில் அடங்குபவை எவை? பாடியவர்கள் எத்தனை பேர்?
   திருவிசைப்பா, திருப்பல்லாண்டு – 9 பேர்

9. பாலுக்காக அழுத குழந்தை யார்? சிவன் கொடுத்தது என்ன?
   உபமன்யு பாற்கடல்

10. திருஞானசம்பந்தர் எதற்காக அழுதார்?
    வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியவும்

11. ஒவ்வொரு நாளும் நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய அறங்கள் எவை?
    - இறைவனுக்குப் பச்சிலை, மலர்கள் வைத்து வழிபடல்.
    - பசுவுக்கு ஒரு பிடி உணவு கொடுத்தல்.
    - பிற உயிர்களுக்கு ஒரு பிடி உணவு கொடுத்தல்.
    - ஏனையோருடன் இன்னுரை பேசுதல்.

12. பெரிய புராணத்தின் மறுபெயர்கள் எவை?
    திருத்தொண்டர்புராணம், ஆளுடையநம்பிபுராணம், மாக்கதை

13. வீதிவிடங்கன் என்னும் பெயருக்குரியவர்கள் யாவர்?
    திருவாரூர் சிவபெருமான், மனுநீதிகண்ட சோழனின் மகன்

14. பின்வருவனவற்றுக்குப் பொருள் கூறுக?
    - அருட்பாடல்களின் தொகுப்பு – திருமுறை திருமால் - விஷ்ணு
    - பிரமபுரம் - தோணிபுரம், சீர்காழி திருவிசைப்பா - இசையோடு கூடிய பாடல்
    - மன்மதன் - காமன் தண்ணளி – குளிர்ந்த ஒளி
    - நமன் - இயமன் வேந்தன் - அரசன்
    - வியாக்கிரபாதர் – புலிக்கால் முனிவர் அண்ணல் - சிவபெருமான்

15. திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?
    - தொகுத்தவர் – நம்பியாண்டார்நம்பி
    - தொகுப்பித்தவர் - இராஜராஜசோழன்

Education கல்வி அධ්‍යාපන

16. கணபதி ஈச்சரத்தில் திருஞானசம்பந்தர் கண்ட காட்சியைச் சுருக்கமாக எழுதுக?
வேதங்களையும் அவற்றின் ஆறு அங்கங்களையும் ஓதுகின்ற நாவினை உடைய, அந்தணர்கள் சிவனைத் துதிக்கின்ற, வானத்து சந்திரன் தவளும் மாடமாளிகை கொண்ட வீதிகள், கயல் மீன்கள் புரளும் நீர் வளமும், செல்வமும், சிறப்பும், இரவில் ஒளிவீசும் அனலாகிய தீயை ஏந்தி ஆடும் நடராஜர் விளங்கும் கணபதி ஈச்சரம்

17. பின்வரும் சொற்கள் சிலேடையாக உணர்த்தும் இரு பொருள்களையும் எழுதுக?
- மெய் - திருமேனி, மெய்மைப்பொருள்
- காமன் - சிற்றின்பம், மன்மதன்
- பணி – பாம்பு, தொண்டு

18. எடுத்த பொற்பாதம் என்றால் என்ன?
நடராஜரின் தூக்கிய திருவடி அதாவது இடது பாதம்

19. ‘‘நாமார்க்கும் குடியல்லோம்….’’ பாடிய சந்தர்ப்பத்தை எழுதுக?
சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறிய நாவுக்கரசரை தண்டிக்க வேண்டும் என்று சமணர் அரசருக்குக் கூற, அரசன் அமைச்சர்களிடம் நாவுக்கரசரை அழைத்து வருமாறு கூற, அமைச்சர் சென்ற வேளையில் மறுத்து நாவுக்கரசர் பாடிய தேவாரம்.

20. சிதம்பரம் நடராஜப் பெருமானைப் பற்றிய காட்சிப் பாடலடியை எழுதுக?
‘‘குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமின் சிரிப்பும்…’’..

21. சுந்தரர் கண் பார்வை இழந்த தலம் எது? இழக்கக் காரணம் யாது?
- திருவொற்றியூர் எல்லை
- சங்கிலியாருக்குக் கொடுத்த சத்தியத்தை மீறியமையால்

22. சுந்தரர் இடக்கண் பார்வை பெற்ற தலம் எது?
திருவேகம்பம்

23. சுந்தரர் வலக்கண் பார்வை பெற்ற தலம் எது? அவ்வேளை பாடிய தேவார அடியை எழுதுக?
- திருவாரூர்
- ‘‘மீளா அடிமை உமக்கே ஆளாய்…’’

24. ‘‘அந்தநாளனுன் அடைக்கலம் புகுத….’’ எனும் தேவாரம் யாரால் பாடப்பட்டது? இப்பாடலில் காணப்படும் வரலாறு யாது?
- சுந்தரமூர்த்தி நாயனார்
- மார்க்கண்டேயர் சிவனிடம் அடைக்கலம் புகுந்த வேளை, இயமன் மார்க்கண்டேயருடைய உயிரைப் பறிப்பதற்கு பாசக்கயிறு வீசியபோது, சிவன் காலால் காலனான இயமனை உதைத்து மார்க்கண்டேயரைக் காப்பாற்றினார்.

25. திருவிசைப்பா பாடியோர் எத்தனை பேர்? மூவரின் பெயரை எழுதுக?
- 9பேர்
- திருமாளிகைத்தேவர் கண்டராதித்தர் கருவூர்த்தேவர்

26. திருவிசைப்பாவையும், திருப்பல்லாண்டையும் பாடியவர் யார்?
சேந்தனார்

27. ஏறாதிருந்த கொடியை ஏறச்செய்ய பாடிய பாடல் எது? யார் பாடினார்?
- கொடிக்கவி
- உமாபதி சிவாச்சாரியார்

28. ஓடாதிருந்த தேரை ஓடச்செய்யப் பாடிய படல் எது? யார் பாடினார்?
- திருப்பல்லாண்டு
- சேந்தனார்

29. 11 ஆம் திருமுறையில் அடங்கும் பிரபந்தங்கள் எத்தனை? அவற்றில் 5 எழுதுக?

Education கல்வி அധ്യാപന

- 41

திருமுருகாற்றுப்படை — திருத்தொண்டர் திருவந்தாதி
திருவெண்காட்டு மூத்த திருப்பதிகம் — திருவிரட்டைமணிமாலை
திருவாலங்காட்டுப்பதிகம்

30. தண்ணளி வெண்குடைவேந்தன் செயல் யாது?
பசுக்கன்றைக் கொன்ற தன் மகன் வீதிவிடங்கனை மனுநீதிகண்ட சோழன் தன் தேர்ச்சில்லால் நெரித்தமை.

31. திருச்சிற்றம்பலம் ஓதும்போது மனதில் யாரை நினைக்க வேண்டும்?
தில்லைச் சிற்றம்பலத்தில் நடனமிடும் நடராஜனை

32. தேவாரப் பண்ணிசைக்கு வழிவகுத்த வேதம் யாது?
சாமவேதம்

## தோத்திரப் பாடல்கள்

33. தோத்திரப் பாடல்கள் என்றால் என்ன?
பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்டதன் பின் பாடப்பட்டவையாகும்.

34. தோத்திரப் பாடல்களின் வகைகள் எவை?
    - திருப்புகழ் - அருணகிரிநாதர்
    - திருமாலை - தொண்டரடிப் பெரியாள்வார்
    - திருவாய்மொழி - நம்மாழ்வார்
    - அபிராமி அந்தாதி - அபிராமிப்பட்டர்
    - சகலகலாவல்லிமாலை - குமரகுருபரசுவாமிகள்
    - பராபரக்கண்ணி - தாயுமானசுவாமிகள்
    - கந்தலரங்காரம் - அருணகிரிநாதர்
    - கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார்

35. திருப்புகழின் சிறப்புகள் 2 தருக?
    - இறைவனது தெய்வத்தன்மை வாய்ந்த புகழ்.
    - இனிய சந்தத்தில் அமைந்தவை.

36. திருப்புகழில் விநாயகர் துதியாக அமைந்த பாடலடி எது?
“உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி....”

37. விநாயகர் யானை வடிவிலே காட்டை அடைந்ததன் நோக்கம் யாது?
முருகனிடம் வள்ளி வந்து அடைவதற்காக

38. வேண்டியவருக்கு வேண்டிய யாவையும் வரையாது கொடுக்கும் இயல்புடையன எவை?
கற்பகதரு, காமதேனு, சிந்தாமணி

39. தேவலோகத்திலுள்ள கற்பக விருட்சம் எது?
உம்பர் தரு

40. வள்ளிநாயகியின் மொழியினை ஒத்தவை எனக் குறிப்பிடப்படுவது?
பாகினையும், கனிரசத்தையும் ஒத்தவை

41. சீதைமேல் காமுற்று காகவடிவில் வந்தவர் யார்?
சயந்தன்

42. ஐந்தொழில்களும், அவற்றுக்குரிய கடவுளர்களையும் குறிப்பிடுக?
    - படைத்தல் - பிரமா
    - காத்தல் - திருமால்
    - அழித்தல் - உருத்திரன்
    - மறைத்தல - மகேஸ்வரன்

Education கல்வி அධ්‍යාපන

- அருளல் - சதாசிவன்

43. ‘‘இளையோனே’’ என்று போற்றப்படுபவர் யார்?
    முருகக் கடவுள்

44. ‘‘பாதிமதி நதி போது மணிசடை….’’ எனும் திருப்புகழ் பாடப்பட்ட தலம் எது?
    சுவாமிமலை

45. ஆறுபடை வீடுகளில் மாமரங்கள் செறிந்து வளர்கின்ற, சோலைகள் நிறைந்த இடம் எது?
    சுவாமிமலை

46. பாதிமதி எனப்படுவது எது?
    பிறைச்சந்திரன்

47. சுரருலகு எனப்படுவது எது?
    தேவலோகம்

48. அருணகிரிநாதர் விநாயகரிடம் வேண்டுவது யாது?
    உனது திருப்பாதம் இரண்டினையும் வழிபட்டிருக்கும் பேற்றினை எனக்கு அருள்வாயாக.

49. ‘‘ஆழ்வார்கள்’’ பாடிய பாடல்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
    நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

50. ‘‘திராவிட வேதம்’’ என அழைக்கப்படும் நூல் எது?
    நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

51. நாலாயிரத் திவ்ய பிரபந்தங்களைத் தொகுத்தவர் யார்?
    ஸ்ரீமத் நாதமுனிகள்

52. திருமாலைப் பாசுரம் பாடியவர் யார்?
    தொண்டரடிப் பெரியாழ்வார்

53. திருவாய்மொழிப் பாசுரம் பாடியவர் யார்?
    நம்மாழ்வார்

54. ‘‘பச்சை மாமலைபோல் மேனி’’ எனும் பாசுரம் பாடியவர் யார்?
    தொண்டரடிப் பெரியாழ்வார்

55. ‘‘அச்சுதன்’’ என்பதன் பொருள் யாது?
    அழிவற்றவன்

56. திருவரங்கத்திலே எழுந்தருளியிருக்கும் கடவுள் யார்?
    திருமால்

57. ஆயர்குலத்து ‘‘குலக்கொழுந்து’’ எனப் போற்றப்படுபவர் யார்?
    திருமால்

58. ‘‘உண்ணும் சோறு பருகு நீர்..’’ எனும் பாடல் இடம் பெறும் நூல் எது?
    திருவாய்மொழி

59. அபிராமி அந்தாதியைப் பாடியவர் யார்?
    அபிராமிப்பட்டர்

60. அபிராமி அந்தாதியிலுள்ள பாடல்கள் எத்தனை?
    100 பாடல்கள்

61. அந்தாதி என்பதன் பொருள் யாது?

அந்தாதி என்பதனை அந்தம் + ஆதி எனப் பிரித்து ஒரு பாடலின் முடிவுச் சொல் அடுத்த பாடலின் தொடக்கமாக அமைவது அந்தாதி எனப்படும்.

62. சகலகலாவல்லி மாலையைப் பாடியவர் யார்?
குமரகுருபரர்

63. சகல கலைகளுக்கும் அதிபதியாக விளங்குபர் யார்?
சரஸ்வதி

64. குமரகுருபரர் வாழ்ந்த காலப்பகுதி எது?
கி.பி 17 ஆம் நூற்றாண்டு

65. குமரகுருபரர் பன்மொழி ஆற்றல் வேண்டி பாடிய பாடல் எது?
சகலகலாவல்லி மாலை

66. பராபரக் கண்ணி பாடியவர் யார்?
தாயுமான சுவாமிகள்

67. "பராபரக் கண்ணி" எனப் பெயர் வரக் காரணம் என்ன?
தாயுமான சுவாமிகள் பாடிய கண்ணிகள் யாவும் பராபரம் என்று முடிவதால்

68. தாயுமானவர் எந்த மன்னனுடைய அமைச்சராக விளங்கினார்?
விஜயரங்க சொக்கநாதம்

69. கந்தரலங்காரம் எனும் நூலினைப் பாடியவர் யார்?
அருணகிரிநாதர்

70. "தண்டை" எனும் ஆபரணம் அணிந்தவர் யார்?
முருகப் பெருமான்

71. கந்தபுராணத்தின் ஆசிரியர் யார்?
கச்சியப்ப சிவாச்சாரியார்

72. கந்தபுராணத்தின் விநாயகர் காப்புச் செய்யுள் எது?
"திகட சக்கர செம்முக...."
"உச்சியின் மகுட....."

73. கந்தபுராணத்தின் சுப்பிரமணியர் காப்புச் செய்யுள் எது?
மூவிரு முகங்கள் போற்றி...

74. கந்தபுராணத்தின் பாயிர வாழ்த்துப் பாடல் எது?
"வான்முகில் வழாது..."..

75. கச்சியப்ப சிவாச்சாரியார் முருகப் பெருமானுக்கு எவ்வாறு வணக்கம் தெரிவிக்கிறார்?
ஆறு திருவதனங்களுக்கும், பன்னிரண்டு திருத்தோள்களுக்கும் (முருகப் பெருமானின்) மலர்ப்பாதங்களுக்கும், சேவலுக்கும், மயிலுக்கும், வேலாயுதத்திற்கும்

76. காப்புச் செய்யுள் என்றால் என்ன?
ஆசிரியர் தான் படைக்க நினைத்துள்ள நூலினை வெற்றிகரமாக முழுமையாக இயற்றி முடிப்பதற்கு இறைவன் துணை நின்று காக்க வேண்டும் என்ற கருத்தில் பாடுவர்.

77. கந்தபுராணத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
முருகன்

78.

| பாடலடி | பாடியவர் | பாடல் வகை | தலம் | பண் |
|---|---|---|---|---|
| அங்கமும் | சம்பந்தர் | தேவாரம் | திருமருகல் | நட்டபாடை |

| | | | | |
|---|---|---|---|---|
| வேதமும் | | | | |
| உற்றுமை சேர்வது | சம்பந்தர் | தேவாரம் | திருக்கழுமலம் | பழம்பஞ்சுரம் |
| குனித்த புருவமும் | நாவுக்கரசர் | தேவாரம் | சிதம்பரம் | திருவிருத்தம் |
| நாமார்க்கும் குடியல்லோம் | நாவுக்கரசர் | தேவாரம் | பொது | திருத்தாண்டகம் |
| அந்த நாளனுன் | சுந்தரர் | தேவாரம் | ஒற்றியூர் | தக்கேசி |
| மீளா அடிமை | சுந்தரர் | தேவாரம் | திருவாரூர் | செந்துருத்தி |
| பால் நினைந்தூட்டும் | மாணிக்கவாசகர் | திருவாசகம் | சீர்காழி | மோகனம் |
| தந்தது உன் தன்னை | மாணிக்கவாசகர் | திருவாசகம் | தில்லை | மோகனம் |
| கற்றவர் விளங்கும் | திருமாளிகைத்தேவர் | திருவிசைப்பா | வீழிமிழலை | பஞ்சமம் |
| பாலுக்குப் பாலகன் | சேந்தனார் | திருப்பல்லாண்டு | சிதம்பரம் | பஞ்சமம் |
| யாவர்க்குமாம் | திருமூலர் | திருமந்திரம் | பொது | |
| விநாயகனே வெவ்வினை | கபிலர் | பிரபந்தம் | இரட்டை மணிமாலை | |
| தண்ணளி வெண்குடை | சேக்கிழார் | பெரியபுராணம் | சிதம்பரம் | மத்தியமாவதி |

**அலகு : 10 திருக்கூட்டச்சிறப்பு, மீட்சிப்படலம் தரம் - 10,11**

1. வடமொழியில் அமைந்த புராணங்கள் எத்தனை?
   18

2. வடமொழியில் அமைந்த புராணங்களில் சிறந்த புராணம் எது?
   ஸ்கந்தபுராணம்

3. ஸ்கந்தபுராணம் எத்தனை சங்கிதைகளைக் கொண்டது?
   7

4. சிவரகசிய காண்டம் எந்த நூலில் எப்பிரிவில் காணப்படுகின்றது?
   ஸ்கந்தபுராணத்தில் சங்கர சங்கிதையில்

5. சிவரகசிய காண்டம் எத்தனை காண்டங்களைக் கொண்டது? அவற்றை எழுதுக?
   7
   சம்பவ காண்டம் அசுர காண்டம் மகேந்திர காண்டம்
   யுத்த காண்டம் தேவ காண்டம் தட்ச காண்டம்
   உபதேச காண்டம்

6. கந்தபுராணத்தின் ஆசிரியர் யார்?
   கச்சியப்ப சிவாச்சாரியார்

7. கச்சியப்ப சிவாச்சாரியாரின் தந்தை பெயர் யாது?
   சிவஸ்ரீ காளத்தியப்ப சிவாச்சாரியார்

8. கச்சியப்ப சிவாச்சாரியார் பூசை செய்த ஆலயம் எது?
   காஞ்சிபுரத்தில் உள்ள குமரகோட்டம்

9. கச்சியப்ப சிவாச்சாரியாரிடம் இருந்த பண்புகளை எழுதுக?
   - ஒழுக்கமும், அருளுணர்வும் வாய்க்கப் பெற்றவர்.
   - வடமொழியாகிய சமஸ்கிருதத்திலும் நல்லறிவு வாய்ந்தவர்.
   - முருக பக்தியில் சிறந்தவர்.

10. சைவசித்தாந்த உண்மைகளைக் கதை வடிவில் கூறும் தமிழ்ப் புராணம் எது?
கந்தபுராணம்

11. கந்தபுராணத்தின் 6 காண்டங்களின் பெயர்களையும் எழுதுக?
உற்பத்தி காண்டம் அசுர காண்டம் மகேந்திர காண்டம்
யுத்த காண்டம் தேவ காண்டம் தட்ச காண்டம்

12. கந்தபுராணத்தில் ஒவ்வொரு காண்டங்களிலுமுள்ள உட்பிரிவுகள் எவ்வாறு அழைக்கப்படும்? உதாரணம் தருக?
படலம் என அழைக்கப்படும்.
உ.ம் :- சூரபத்மன் வதைபடலம் மார்க்கண்டேய படலம் மீட்சிப் படலம்
வள்ளியம்மை திருமணப் படலம் தெய்வயானை அம்மன் திருமணப் படலம்

13. ஆணவ வடிவமாக உலவிய அசுரன் யார்?
சூரபத்மன்

14. சூரபத்மனை வதம் செய்த கடவுள் யார்?
முருகப் பெருமான்

15. முருகப் பெருமானின் படைத் தலைவர் யார்?
வீரவாகு தேவர்

16. முருகனின் தம்பி யார்?
வீரவாகு தேவர்

17. வீரவாகு தேவருக்கு முருகன் இட்ட கட்டளை யாது?
"தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து மீட்டு வாருங்கள்"

18. தேவர்களின் அசுரன் யார்?
இந்திரன்

19. இந்திரனின் மகன் பெயர் யாது?
சயந்தன்

20. மீட்சிப் படலத்தில் கூறப்படும் விடயங்கள் எவை?
சிறையிலுள்ள சயந்தன் முதலான தேவர்களை, வீரவாகு தேவர் சென்று அவர்களது கால்களிலுள்ள விலங்குகளை அறுத்து மீட்டு வந்தமையும், அவர்கள் யுத்த களத்தில் நின்ற முருகப் பெருமானை வணங்கி ஏனைய தேவர்களுடன் இணைந்து கொண்டமை, முருகனுக்கு நன்றி கூறுதல்.

21. "எங்கள் துயரை அகற்ற வந்தீரோ" எனக் கூறிய சந்தர்ப்பத்தை எழுதுக?
சிறையிலுள்ள சயந்தனும் ஏனைய தேவர்களும் சிறைக்கு வெளியே வந்த வீரவாகு தேவரைப் பார்த்துக் கூறுதல்.

22. முருகனது பாதத்தை வணங்கிய சயந்தன் முதலானவர்களைப் பார்த்து முருகன் கூறிய வார்த்தை யாது?
"கொடியவனான சூரபத்மனது சிறையிலே நெடுங்காலம் துன்பம் அனுபவித்தீர்கள், இனி எத்துன்பமும் இன்றி சுவர்க்கலோகத்தில் இன்பமாக வாழுங்கள்"

23. முருகனைப் பார்த்து "அடியோம் உய்ந்தோம்" எனக் கூறியவர் யார்?
சயந்தன்

24. சமுத்திரராஜனை நோக்கி முருகப் பெருமான் இட்ட கட்டளை யாது?
சூரபத்மனது மகேந்திரபுரியை அழித்து வா.

25. அரி பரம இந்திராதி தேவர்கள் என்போர் யாவர்?
அரி – விஷ்ணு, பிரமன், இந்திரன் ஏனைய 33 கோடி தேவர்கள்

26. முருகப் பெருமான் போர் முடிந்ததும் போர்க்களத்திலிருந்து சென்ற முதல் தலம் யாது? எந்த வாகனத்தில் சென்றார்?
   - திருச்செந்தூர்
   - மயில்

27. சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்த உப ஆகமங்களில் ஒன்றின் பெயரை எழுதுக?
    குமாரதந்திரம்

28. தேவர்கள் எல்லோரும் இணைந்து குமாரதந்திர முறைப்படி முருகப் பெருமானை அர்ச்சித்துப் பூசை செய்த இடம் எது?
    திருச்செந்தூர்

29. முருகப் பெருமான் தேவர்களைப் பார்த்து விரும்பிய வரங்களைக் கேளுங்கள் எனக் கூறிய காலத்தில் தேவர்கள் வேண்டிய விடயம் யாது?
    ''எமக்கு யாதொரு குறையும் இல்லை. எங்கள் உயிர் உள்ளளவும் உம்முடைய பாதார விந்தங்களில் குறைவிலாத அன்புடையவர்களாக விளங்கும் அருளைப் புரிய வேண்டும்.''

30. தேவர்களுக்குக் கோயிலைக் கட்டிக் கொடுப்பவன் யார்?
    தேவதச்சன்

31. சூரசங்காரத்தின் பின்னர் முருகன் யாருக்குப் பூசை செய்தார்?
    சிவபிரானை சிவலிங்கத்தில் எழுந்தருளப் பண்ணி சிவ பூசை செய்தார்.

32. பின்வருவனவற்றிற்குப் பொருள் தருக?

| | | |
|---|---|---|
| திரு – செல்வம் | வானோர் - தேவர்கள் | அமரர் - தேவர்கள் |
| வம்மின் - வாருங்கள் | அவுணர் - அசுரர் | வதனம் - கண் |
| கோ – அரசன் | அகிலகாரணர் - சிவன் | களிப்பு – மகிழ்ச்சி |
| சமுத்திரராஜன் - வருணன் | மாயவன் - மகாவிஷ்ணு | ஆதிதேவன் - சிவபெருமான் |
| திசைமுகன் - நான்முகன் | திருக்கானம் - திருமண்டபம் | மாதோர் பாகன் - சிவன்உமை |

33. மீட்சிப் படலத்தில் இடம் பெறும் முருகப் பெருமானின் சிறப்புக்களைக் கூறுக?
   - சூரனாதியோரை அழித்து தேவர்களைக் காத்தமை.
   - சூரனை அவனது ஆணவத்தை அழித்து சேவலும், மயிலும் ஆக்கித் தனக்குத் தொண்டு செய்யப் பணித்தமை.
   - சயந்தன் முதலிய தேவர்களைச் சிறையிலிருந்து மீட்டமை.
   - சூரனால் அழிந்த பூதகணங்களை மீண்டும் உயிர் பெறச் செய்தமை.
   - தேவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தமை.
   - தந்தையாகிய சிவபெருமானைப் பூசை செய்து அர்ச்சித்து வழிபட்டமை.

34. புராணபடனம் என்றால் என்ன?
    புராணத்தின் பாடல்களை ஒவ்வொன்றாக ஒருவர் பக்தியுடனும், பண்ணுடனும் படிக்க, அப்பாடலுக்கு இன்னொருவர் விரிந்த பொருளைக் கூறுவார்.

35. புராணபடனம் செய்யும் நூல்கள் எவை?

| | | |
|---|---|---|
| கந்த புராணம் | சிவராத்திரி புராணம் | ஏகாதசி புராணம் |
| திருத்தொண்டர் புராணம் | திருவாதவூரடிகள் புராணம் | |

36. ஈழத்தில் புராணபடனத்தைத் தொடக்கி வைத்தவர் யார்?
    அரியாலை கச்சிக்கணேசையர்

37. புராணபடனத்தை வளர்த்தவர் யார்?
    சைவசேனாதிபதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

38. கந்தசஷ்டி உற்சவ காலத்தில் படிக்கப்படும் புராணம் எது?
    கந்தபுராணம் - சூரபத்மன் வதைபடலம்

39. திருவெம்பாவை காலத்தில் படிக்கப்படும் புராணம் எது?
திருவாதவூரடிகள் புராணம்

40. புராணங்களைப் படிப்பவர்களை எவ்வாறு அழைப்பர்?
பௌராணிகர்

41. 12 ஆந் திருமுறையாக அமைந்துள்ளது யாது?
திருத்தொண்டர்புராணம் (பெரிய புராணம்)

42. பெரிய புராணத்தைப் பாடியவர் யார்?
சேக்கிழார் குடியில் பிறந்த அருண்மொழித் தேவர்

43. தேவாசிரிய மண்டபம் எங்குள்ளது?
திருவாரூரில் கோயில் வாசலில்

44. பெரிய புராணம் எழுதப்பட்ட இடம் யாது?
சிதம்பரம் 1000 கால் மண்டபம்

45. தேவாசிரிய மண்டபத்தில் வாழ்பவர்கள் யாவர்?
பிரமன், இந்திரன், லக்மீநாராயணன் போன்ற தேவர்கள்

46. தேவாசிரிய மண்டபம் ஆயிரம் பாற்கடல் போல் விளங்குவதற்கு காரணம் யாது?
எல்லாத் துன்பத்தையும் போக்கவல்ல திருநீற்றைப் பூசிய அடியார்களின் மேனி மேலுள்ள வீபூதி ஒளி நிறைந்த அகத்தூய்மை எதனையும் காக்கவல்ல நமசிவாய ஐந்தெழுத்தின் ஓசை ஒலிப்பதால்

47. "மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசுநீறு போல் உள்ளும் புனிதர்கள்…." என்பதன் கருத்து யாது?
திருக்கூட்டத்தில் உள்ள அடியார்கள் மாசு இல்லாத அழகிய தம் திருமேனியில் பூசுகின்ற திருநீறு எவ்வாறு வெண்ணிறமாக விளங்குகின்றதோ, அதே போல் அவர்களின் உள்ளமும் தூய்மையானவர்கள்.

Education
අධ්‍යාපන

48. "ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணி அல தொன்றிலார்….." என்பதன் கருத்து யாது?
சிவனடியார்களுக்கு மாலை உருத்திராட்சமே, ஆடை கந்தை துணியே, அவர்களுக்கு மனப்பாரம் சிவனது தொண்டே அல்லாமல் வேறில்லை.

49. ஆலால சுந்தரன் யார்? அவ்வாறு பெயர் வந்ததன் காரணம் யாது?
- சுந்தரமூர்த்தி நாயனார்
- பாற்கடலில் எழுந்த ஆலகால விசத்தை எடுத்து வந்து சிவபெருமானிடம் கொடுத்தமையால்

50. திருத்தொண்டர் புராணத்தின் முதற்சருக்கமாகிய திருமலைச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை எழுதுக?
திருமலைச்சிறப்பு, திருநாட்டுச்சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கூட்டச் சிறப்பு(சிவனடியார் சிறப்பு), தடுத்தாட்கொண்ட புராணம்

**அலகு : 11 திலகவதியார், குங்கிலியக் கலைய நாயனார் தரம் - 10,11**

## திலகவதியார்

1. திலகவதியார் பிறந்த இடம் எது?
திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாரூர்.

2. திலகவதியாரின் பெற்றோரின் பெயர் யாது?
புகழனார், மாதினியார்

3. திலகவதியார் திருப்பணி செய்த ஆலயம் எது?
திருவதிகை வீரட்டானேச்சரம்

4. திலகவதியார் தங்கியிருந்த மடத்தின் பெயர் யாது?
திருவதிகை மடம்

5. திலகவதியார் செய்த தொண்டுகள் எவை?
- ஆலயத்தினை துப்பரவு செய்தல்
- பூப்பறித்தல்
- மாலை கட்டுதல்
- பூசைத்திரவியங்கள் கொடுத்தல்

6. திலகவதியாரிடம் காணப்பட்ட நற்பண்புகள் எவை?
சமய நம்பிக்கை, இறை நம்பிக்கை, சகோதர பாசம்

7. திலகவதியாரின் தம்பியார் யார்?
மருணீக்கியார் (திருநாவுக்கரசர்)

8. திலகவதியார் எவ்விதம் மருணீக்கியாருக்கு குரு தீட்சை அளித்தார்?அப்போது என்ன நடந்தது?
- சைவநெறியைப் பின்பற்றுமுகமாக குரு தீட்சை அளித்தார்.
- பக்குவப்பட்ட ஆன்மாவாக மாற்றினார்.
- திருவைந்தெழுத்தை ஓதி திருநீற்றைக் கொடுத்தார்.
- திருநீற்றைப் பெற்றதும் மருணீக்கியார் புதுப்பொலிவு பெற்றார்.

9. திருநாவுக்கரசருக்கு ஏற்பட்ட நோய் எது?
சூலைநோய்

10. “உழவாரப் படையாளி” என அழைக்கப்படுபவர் யார்?
திருநாவுக்கரசர்

11. திருநாவுக்கரசருக்கு சமணர்கள் இட்ட பெயர் யாது?
தருமசேனர்

12. சைவசமயத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட பெண்ணடியார்கள் மூவரைத் தருக?
திலகவதியார், காரைக்காலம்மையார், மங்கையற்கரசியார்

13. மருணீக்கியாரின் செந்தமிழ்த் திறத்தினைக் கண்டு “திருநாவுக்கரசர்” எனப் பெயர் சூட்டியவர் யார்?
சிவபெருமான்

14. திருநாவுக்கரசர் சூலைநோயை நீக்குமாறு வேண்டிப் பாடிய பதிகத்தின் முதலடியைத் தருக?
“கூற்றாயினவாறு விலக்ககலீர்……”

15. திருநாவுக்கரசரின் சூலைநோயைக் குணப்படுத்திய பொருள் எது?
திருநீறு

16. தருமசேனர் எங்கே தலைமைக் குருவாக விளங்கினார்?
திருப்பாதிருப்புலியூரிலுள்ள சமண மடத்திற்கு

17. திருநாவுக்கரசு சுவாமிகளது மறுபெயர்கள் எவை?
அப்பர், மருணீக்கியார், தருமசேனர், உழவாரப் படையாளி

18. மருணீக்கியாரின் இளமைப் பருவம், இழப்புகள் என்ன உணர்வை அவரிடத்தில் ஏற்படுத்தியது?

உலக நிலையாமை பற்றிய உணர்வு

## குங்கிலியக் கலைய நாயனார்

19. குங்கிலியக் கலையர் நின்றநெறி யாது?
    கிரியைநெறி

20. குங்கிலியக் கலையர் எங்கே பிறந்தார்?
    சோழநாட்டின் திருக்கடவூரில்

21. குங்கிலியக் கலைய நாயனார் முத்தியடைந்த தினம் எது?
    ஆவணி மூலம்

22. தாலியை விற்று இறைசேவை செய்த நாயனார் யார்?
    குங்கிலியக் கலைய நாயனார்

23. சிவபெருமான் காலனைக் காலால் உதைத்த தலம் எது?
    திருக்கடவூர்

24. கலைய நாயனாருக்கு குங்கிலியக் கலைய நாயனார் எனப் பெயர் வரக் காரணம் என்ன?
    இறைவனுக்கு தினமும் குங்கிலியத் தூபமிடும் பணியைச் செய்து வந்தமையால்

25. குங்கிலியக் கலைய நாயனாரால் செய்யப்பட்ட அற்புதச் செயல் யாது?
    சோழப்படையினால் நிமிர்த்த முடியாத சரிந்த சிவலிங்கத்தை நிமிர்த்தியமை.

26. இவ் அற்புதம் நிகழ்ந்த தலம் யாது?
    திருப்பனந்தாள்

27. குங்கிலியக் கலையர் எவ்விதம் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார்?
    தன் குடும்பத்தில் வறுமை ஏற்பட்டபோதும், தனது மனைவி, பிள்ளைகளையும் மறந்து குங்கிலியத் தூபமிடும் மேற்கொண்டமையினால்

28. குங்கிலியக் கலையர் தனது திருப்பணியைச் செய்த ஆலயம் எது?
    அமிர்தகடேஸ்வரர் ஆலயம்

29. குங்கிலியக் கலைய நாயனார் காலத்தில் வாழ்ந்த இரு நாயன்மாரைத் தருக?
    திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்

30. குங்கிலியக் கலைய நாயனார் பற்றி குறிப்பிடும் புராணம் எது?
    பெரியபுராணம்

## அலகு : 12 திக்கோயிலும், திருவிழாவும், கும்பாவிஷேகம் தரம் - 10,11

1. கிரியை என்ற சொல்லின் பொருள் யாது?
   நியதிச்செயல்

2. ஆறுகாலப் பூசை வேளைகளைத் தருக?
   - உஷக்காலப் பூசை
   - காலைச்சந்திப் பூசை
   - உச்சிக்காலப் பூசை
   - சாயங்காலப் பூசை
   - இரண்டாங்காலப் பூசை
   - அர்த்தசாமப் பூசை

3. மகோற்சவம் என்ற சொல்லின் பொருள் யாது?
   பெரிய உயர்வான ஐந்தொழில்

4. மகோற்சவத்தை வேறு எவ்வாறு அழைப்பர்?
   பிரம்மோற்சவம்

5. கோயிற் கிரியைகளின் மூன்று வகைகளைத் தருக?
   - நித்திய கிரியை
   - நைமித்திய கிரியை
   - காமிய கிரியை

6. நைமித்திய கிரியைகள் என்றால் என்ன? உதாரணம் தருக?
   குறித்த ஒரு காரணத்தால் (நிமித்தத்தால்) செய்யப்படும் கிரியை நைமித்திய கிரியைகள் எனப்படும்.
   உ.ம் :- மகோற்சவம், கும்பாவிஷேகம்

7. கும்பாவிஷேகம் வேறு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
   திருக்குடமுழுக்கு

8. குடமுழுக்கினைப் பெருஞ்சாந்தி என்று போற்றப்படுவதன் காரணம் யாது?
   எல்லா உயிர்களும் குறைவின்றி வாழ்வதன் பொருட்டு நிகழ்த்தப்படும் கிரியையாதலால் பெருஞ்சாந்தி என்று போற்றப்படும்.

9. பிரதிஷ்டையின் 4 வகைகளும் எவை?
   - அநாவர்த்தனம்
   - ஆவர்த்தனம்
   - புனராவவர்த்தனம்
   - அந்தரிதம்

10. சுபமூர்த்த நிர்ணயம் இல்லாமல் செய்யப்படும் பிரதிஷ்டை எது?
    அந்தரிதம்

11. கும்பாவிஷேகத்தைத் தொடர்ந்து அதன் அங்கமாக நடைபெறும் அபிஷேகம் யாது?
    மண்டலாபிஷேகம்

12. ஒரு மண்டலம் எத்தனை தினங்களைக் கொண்டது?
    48 தினங்கள்

13. பிரதிஷ்டா குருவிடம் காணப்படவேண்டிய இலட்சணங்கள் யாவை?
    பக்தி, அறிவு, ஒழுக்கம், மனஉறுதி

14. ஆவர்த்தனம் என்பதன் பொருள் யாது?
    புதிதாக ஒரு ஆலயத்தை அமைத்து, மூலமூர்த்தியை கும்பத்தில் ஆவாகணம் செய்து மூலஸ்தானத்தில் மூலமூர்த்தியை எழுந்தருளச் செய்வதாகும்.

15. அநாவர்த்தனம் என்பதன் பொருள் யாது?
    இயற்கை அனர்த்தத்தால் ஆலயம் அழிவுறும்போது ஆலயத்தைக் கட்டி, விக்கிரகங்களைப் புதுப்பித்து கும்பாவிஷேகம் செய்தல்.

16. புனராவர்த்தனம் என்பதன் பொருள் யாது?
    ஆலயங்களில் பழுது ஏற்படும்போது விக்கிரகங்களை, சுவாமியை பாலஸ்தாபனஞ் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மீண்டும் சுவாமியை பிரதிஷ்டை செய்தலாகும்.

17. அந்தரிகம் என்பதன் பொருள் யாது?
    ஆலயத்தில் திருட்டு அல்லது துர்நிகழ்வுகள் ஏற்படுமிடத்து உடனடியாக அத்துர்நிகழ்வு நீங்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும்.

18. கும்பாவிஷேகம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்?
    பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை

19. மகோற்சவம் உணர்த்தும் கருத்து யாது?

ஐந்தொழில்களால் உயிர்களைக் காக்கும் முறை.

20. கொடியேற்றம் எதனைக் குறிக்கின்றது?
படைத்தல்

21. வாகனத் திருவிழா எதனைக் குறிக்கின்றது?
காத்தல்

22. தேர்த்திருவிழா எதனைக் குறிக்கின்றது?
அழித்தல்

23. தீர்த்த உற்சவம் எதனைக் குறிக்கின்றது?
அருளல்

24. மௌனோற்சவம் எதனைக் குறிக்கின்றது?
மறைத்தல்

25. ஆலயத்தில் கொடி கட்டிய இடத்தில் யாருக்குப் பூசை நடைபெறும்?
சிவபெருமானுக்கு

26. தேர்கள் எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும் என்று கூறும் நூல் எது?
மானசாரம்

27. நகரும் கோயில் எது?
தேர்

28. தேர் செய்யப் பயன்படும் மரங்கள் எவை?
தேக்கு, மருது, வேங்கை

29. திருவிழாக்களை வேறு எப்பெயர் கொண்டு அழைப்பர்?
சாம்பவதீட்சை

30. உற்சவம் என்பதன் அர்த்தம் யாது?
உயர்வான படைத்தல் முதலிய ஐந்தொழில்களைக் குறிக்கும்.

31. வாஸ்து சாந்தி என்பது யாது?
தர்ப்பை, வைக்கோல் முதலியவற்றால் செய்யப்பட்ட வடிவத்தை சிவாக்கினியோடு சேர்த்து வீதியில் இழுத்தல்.

32. கொடியிறக்கம் எதனைக் குறிக்கின்றது?
ஐந்தொழில் முடிவதும் ஆன்மாக்கள் முத்தியடைதலையும் குறிக்கும்.

33. ஆசாரியார் திருவிழாவை இடையூறின்றி நடாத்தி முடிப்பதற்குச் செய்ய வேண்டிய விடயம் யாது?
காப்புக்கட்டுதல்

34. கொடியேற்றம் உணர்த்தும் தத்துவம் யாது?
ஆணவம் வலுவிழந்து ஆன்மாக்கள் மல நீக்கம் பெறும் பொருட்டு கொடியை ஏற்றுதல்.

35. திருவிழாக்களின் நிறைவின் பின்னர் இடம்பெறும் திருக்கலியாணம் உணர்த்தும் தத்துவம் யாது?
அருள் வடிவான சக்தி, அறிவுமயமான சிவத்தோடு கலந்து பிரபஞ்சத்தை இயங்க வைப்பதைக் குறிக்கின்றது.

36. மகோற்சவங்களால் விளையும் நன்மைகள் எவை?
- ஒன்றுசேரும் பண்பு வளர்கின்றது.
- ஐம்புலன்களுக்கு விருந்து கிடைத்தல்.
- நற்பண்புகள் வளர்தல்.

kalvi.lk

- கவலைகள் மறக்கப்படல்.
- சமூக நல்லிணக்கம், ஒற்றுமை என்பன ஏற்படல்.

37. கும்பம் உணர்த்தும் தத்துவம் யாது?
    கும்பம் - உடம்பு, சீலை – தோல், நூல் - நாடி, குடம் - ,தண்ணீர் - இரத்தம்

38. கும்பாவிஷேகம் செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் எவை?
    - ஆலயம் புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவு பெறும்.
    - விக்கிரகங்களுக்கு சக்தி உண்டாகும்.
    - ஓமப்புகை படுவதனால் உடலில் உள்ள நோய்கள் நீங்கும்.
    - தெய்வ சந்நிதானத்தில் அனைவரும் ஒன்று கூடுவதால் சமூக நல்லிணக்கம், ஒற்றுமை என்பன ஏற்படும்.

**அலகு : 13 சமயகுரவர் தரம் - 10,11**

**அறிமுகம்**

சைவ சமயகுரவர்களது வாழ்க்கை வரலாறுகளை அறிந்து, அவர்களது செயற்பாடுகளை முன்மாதிரியாகக் கொண்டு, வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவோம்.

- முதற் குரவர்கள் நால்வர்
- தேவார முதலிகள் மூவர்
- சமயகுரவர்கள் இறைவன் மீது உண்மையான பக்தியுடன் ஒழுகியவர்கள்
- இறை அருளினால் வாழ்க்கை இடர்களைக் கடந்தவர்கள்
- மக்கள் மத்தியில் பக்தி உணர்வையும், ஆலய வழிபாட்டையும் முதன்மையாகக் கொண்டு சமயத்தை வளர்த்தவர்கள்.

| | சம்பந்தர் | நாவுக்கரசர் | சுந்தரர் | மாணிக்கவாசகர் |
|---|---|---|---|---|
| பிறந்த நாடு | சோழநாடு | திருமுனைப்பாடி | திருமுனைப்பாடி | பாண்டிநாடு |
| பிறந்த ஊர் | சீர்காழி | திருவாரூர் | திருநாவலூர் | திருவாதவூர் |
| தந்தை பெயர் | சிவபாத இருதயர் | புகழனார் | சடையனார் | சம்புபாதசிரியார் |
| தாய் பெயர் | பகவதியார் | மாதினியார் | இசைஞானி அம்மையார் | சிவஞானவதி |
| இளமைப் பெயர் | பிள்ளையார் | மருணீக்கியார் | நம்பியாரூரர் | திருவாதவூரர் |
| அருள் பெற்றது | சீர்காழி | திருவதிகை | திருவெண்ணை | திருப்பெருந்துறை |
| முதல் பாடியது | தோடுடைய செவியன் | கூற்றாயினவாறு | பித்தா பிறை | நமசிவாய வாழ்க |
| இறுதியில் பாடியது | காதலாகி கசிந்து | எண்ணுகேன் என் | தானெனை முன் | முத்திநெறி அறியாத |
| பாடிய திருமுறை | 1,2,3 | 4,5,6 | 7 | 8 |
| பாடிய பாடல் | தேவாரம் | தேவாரம் | தேவாரம் | திருவாசகம் |
| ஒழுக்கநெறி | கிரியை | சரியை | யோகம் | ஞானம் |
| வாழ்ந்த வயது | 16 | 81 | 18 | 32 |
| குருபூசை தினம் | வைகாசி மூலம் | சித்திரை சதயம் | ஆடிச்சுவாதி | ஆனிமகம் |
| பெற்ற முத்தி | சாமீபம் | சாலோகம் | சாரூபம் | சாயுச்சியம் |
| மறுபெயர்கள் | ஆளுடையபிள்ளை<br>கவுணியர்கோன்<br>முத்தமிழ்விரகர்<br>சைவசிகாமணி<br>புகலியர்கோன் | ஆளுடையஅரசு<br>வாகீசர்<br>சொற்கோ<br>தாண்டகவேந்தர்<br>வாக்கின்மன்னன் | ஆளுடையநம்பி<br>தம்பிரான்தோழர்<br>சேரமான்தோழர்<br>சிங்கடியப்பன்<br>வனப்பகையப்பன் | ஆளுடைய அடிகள்<br>கோவைவேந்தன்<br>தென்னவன்பிரமராஜன் |

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

1. திருஞானசம்பந்தருக்கு ''ஆளுடைய பிள்ளையார்'' எனப் பெயர் வரக்காரணம் யாது?
 இறைவனால் ஆட்கொள்ளப்பட்டமையால் ஆளுடைய பிள்ளையார் என அழைக்கப்பட்டார்.

2. ஆளுடைய பிள்ளையார் பாடிய பதிகங்களை யாழில் பண் அமைத்துப் பாடியவர் யார்?
 பாணர்

3. ஏன் ''திருஞானசம்பந்தர்'' என அழைக்கப்பட்டார்?
 சிவஞான சம்பந்தம் பெற்றமையால்

4. திருஞானசம்பந்தர் ''மடையில் வாளை..'' எனும் பதிகத்தை எப்போது பாடினார்?
 திருக்கோலக்கா என்னும் திருப்பதியை அடைந்து தன் கையினால் தாளமிட்டு பாடினார்.

5. திருஞானசம்பந்தர் கையினால் தாளமிட்டு பதிகம் பாடிச் சென்றபோது கைவருந்தும் எனக் கருணை கூர்ந்த இறைவன் எவற்றைக் கொடுத்தார்?
 ஐந்தெழுத்துப் பொறித்த பொற்றாளத்தைக் கொடுத்தார்.

6. திருநீலகண்டப் பெரும்பாணரும் அவரது மனைவி மதங்கசூளாமணியும் ஏன் சீர்காழிக்கு வந்தனர்?
 திருஞானசம்பந்தரை வணங்கிப் பாடுவதற்காக சீர்காழிக்கு வந்தனர்.

7. மாதர் மடப்பிடியும் என்னும் பதிகத்தின் பண் யாது?
 யாழ்முரி

8. சமணர்கள் திருஞானசம்பந்தரை அனல் வாதத்திற்கு அழைத்தபோது யாது நிகழ்ந்தது?
 பிள்ளையார் ''போகமார்த்த பூண்முலையாள்'' என்ற பதிகம் எழுதப்பட்ட ஏட்டை தீயில் இட்டார். ஏடு எரியாது பசுமையாக இருந்தது. சமணர்களது ஏடு எரிந்து சாம்பராகியது.

9. சமணர்கள் திருஞானசம்பந்தரை புனல் வாதத்திற்கு அழைத்தபோது யாது நிகழ்ந்தது?
 பிள்ளையார் ''வாழ்க அந்தணர்'' என்ற பதிகம் எழுதப்பட்ட ஏட்டை இட்டார். சம்பந்தரின் ஏடு ஆற்றோட்டத்தை எதிர்த்துச் செல்ல, சமணர்கள் ஏடு ஆற்றோடு சென்றது.

10. சமண அரசரின் கூன் எவ்வாறு நிமிர்ந்தது?
 புனல் வாதத்தின் போது வேந்தனும் ஓங்குக என்று அருளியமையினால்

11. திருஞானசம்பந்தர் இராமேச்சரத்தில் இருந்து கொண்டு ஈழத்திலுள்ள எத் திருத்தலங்களை வணங்கிப் பாடல்கள் பாடி அருளினார்?
 திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்

12. ''கல்லூர்ப் பெருமணம்'' என்னும் பதிகத்தை ஏன் பாடினார்?
 ''இந்த இல் ஒழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள் தன்னோடும் அந்தமில் சிவன்தாள் சேர்வள்'' என்று இறைவனை வேண்டிப் பாடினார்.

13. ''காதலாகிக் கசிந்து'' என்ற பதிகத்தை ஏன் பாடினார்?
 ''காதலியும், நீவிரும், திருமணம் கானவந்தோர் அனைவரும் நம்பாற் சோதியிற் கலமின்'' என்று ஒலி கேட்க சோதி ஒன்று தோன்றிற்று. எல்லோரும் அச்சோதியில் கலந்தபோது பாடியது.

| திருஞானசம்பந்தர் பாடிய தேவாரங்கள் | பாடிய சந்தர்ப்பம் |
|---|---|
| தோடுடைய செவியன்....... | உமையம்மையாரோடு விடைமீது தனக்குக் காட்சி கொடுத்தருளிய சிவபெருமானைச் சுட்டிக்காட்டியபோது |
| எந்தை ஈசன் எம்பெருமான்.... | திருவருட்துறையை வணங்குவதற்கு நடந்து சென்றபோது முத்துச் சிவிகை, முத்துக் குடை, |

| | |
|---|---|
| | முத்துச் சின்னம் கிடைத்தபோது இறைவனை வணங்கிப் பாடியபோது |
| மாதர் மடப்பிடியும்….. | பாணர் திருப்பதிகங்களை யாழில் இட்டு வாசிப்பதனால் அவற்றின் சிறப்பு உலகில் விளங்குகின்றது, என்று உறவினர்கள் கூறியபோது பாணர் மனம் நடுங்கி “சுவாமி” தங்கள் திருப்பதிகம் பாடவேண்டும் என்று வேண்டியபோது |
| துணிவளர் திங்கள்….. | திருப்பாச்சிலாச்சிரமத்தை அடைந்தபோது அங்கு ஆலயத்தின் உள்ளே “கொல்லிமழவன்” என்ற அரசனின் மகள் முயலகன் நோயினால் வருந்துவதைக் கண்டு |
| அவ்வினைக் கிவ்வினை…….. | கொடிமாடச் செங்குன்றம் என்னும் இடத்தில், பனியின் கொடுமையால் தம் அடியார்களும், பிறரும் குளிர்சுரத்தால் வருந்துவதைக் கண்டு இப்பதிகத்தைப் பாடி வருத்தம் தீர்த்தார். |
| இடரினும் தளரினும்…….. | ஆளுடைய பிள்ளையாருடைய தந்தை யாகம் செய்வதற்குப் பொன் தேவைப்பட்டது. அப்போது இப்பதிகத்தைப் பாடி சிவனருளால் ஆயிரம் பொன் பெற்றுத் தந்தையாருக்குக் கொடுத்தார். |
| சடையா யெனுமால்… | திருமருகலை அடைந்த பொழுது கன்னி ஒருத்தியுடன் வழிப்பயணமாக வந்த வணிகன் ஒருவன் அரவம் தீண்டி இறந்து கிடந்தான். இதனைக் கண்டு இரக்கமுற்ற சம்பந்தர் இப்பதிகத்தைப் பாடி அவனை உயிர்ப்பித்தார். |
| சதுரம் மறை.. | திருமறைக் காட்டில் தேவாரம் பாடித் திருநாவுக்கரசர் திறந்த கதவை சம்பந்தர் இப்பதிகத்தைப் பாடி மூடச் செய்தார். |
| செய்யனே திருவாலவாய்.. | மதுரைக்கு வந்த பிள்ளையார் மடத்தில் தங்கினார். சமணர்கள் அரசனுடன் சேர்ந்து ஆலோசித்து சூழ்ச்சி செய்து அம்மடத்துக்கு தீ இட்டனர். இதனை அறிந்த பிள்ளையார் இப்பதிகத்தைப் பாட தீ அணைந்தது. |
| மந்திரமாவது நீறு… | சமண அரசனுடைய வெப்புநோயைத் தீர்ப்பதற்கு அரசன் பிள்ளையாரை வேண்ட அவர் சிவபெருமானை வணங்கி இப்பதிகத்தைப் பாடியபோது வெப்புநோய் நீங்கியது. |
| மட்டிட்ட புன்னை… | திருமயிலாப்பூரில் பூம்பாவை என்பவள் பாம்பு தீண்டி இறந்தாள். தந்தையார் அவளுடைய அஸ்தியைக் குடத்தில் இட்டு வைத்திருந்தார். அக்குடத்தை கபாலீசுவரர் திருமுன் வைத்து இப்பதிகத்தைப் பாடி பூம்பாவையை உயிர்ப்பித்தார். |

## திருநாவுக்கரசு நாயனார்

14. திருநாவுக்கரசர் “உழவாரப் படையாளி” என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
    அவர் தம் கையில் வைத்திருக்கும் உழவாரத்தினால் கோயிற் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்வார். அதனால் “உழவாரப் படையாளி” என அழைக்கப்பட்டார்.

15. திருநாவுக்கரசு நாயனார் நல்லூரை அடைந்து இறைவனை வணங்கி தனக்கு தீட்சை அளிக்குமாறு கேட்டபோது பெற்ற தீட்சை எது?
    சென்னிமிசை திருவடித்தீட்சை

16. திருநாவுக்கரசரின்மீது பக்தி கொண்டு தமது பிள்ளைகளுக்கு அவரது பெயரை வைத்த அந்தணன் யார்?
    அப்பூதியடிகள்

17. திருவீழிமிழலை என்னும் தலத்துக்குத் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சென்றபோது பஞ்சம் நிலவியமையைக் கண்டு யாது செய்தனர்?

இறைவன் அருளால் படிக்காசு பெற்று பஞ்சம் போக்கினர்.

18. திருப்பஞ்சீலி தலத்தில் நிகழ்ந்த அற்புதம் யாது?

திருப்பஞ்சீலிப் பெருமான் சைவவேதியர் கோலத்துடன் பொதிசோறு வைத்துக்கொண்டு சோலையையும், குளத்தையும் அமைத்தார்.

19. திருநாவுக்கரசர் கைலைக் காட்சியைக் கண்ட தலம் எது?

திருவையாறு

20. திருநாவுக்கரசரைக் கானும் விருப்பில் சம்பந்தர் உடன் வருவோரை யாது வினவினார்?

"அப்பர் எங்குற்றார்"

21. திருநாவுக்கரசர் பூம்புகார் கோயிலுக்குச் சென்று உழவாரத் தொண்டு செய்துவரும் நாளில் இறைவன் திருவுளங்கொண்டு யாது செய்தார்?

திருநாவுக்கரசரின் பற்றற்ற நிலையை உலகத்தவருக்குக் காட்டினார்.

| **திருநாவுக்கரசர் பாடிய தேவாரங்கள்** | **பாடிய சந்தர்ப்பம்** |
|---|---|
| நாமார்க்கும் குடியல்லோம்....... | நாவுக்கரசர் மீண்டும் சைவசமயத்தைத் தழுவியபோது சமண அரசன் அவரை அழைத்தபோது, அரசன் கட்டளையை அறிவித்த அமைச்சரைப் பார்த்து இப்பதிகம் பாடினார். |
| மாசில் வீணையும்.... | சமணர்கள் வெப்பம் நிறைந்த சுண்ணாம்பு அறையில் இட்டபோது இப்பதிகம் பாடினார். |
| சுண்ணவெண் சந்தனச் சாந்தும்..... | சமண அரசன் நாவுக்கரசர் மீது யானையை ஏவியபோது இப்பதிகம் பாடினார். யானை அவரை வலம் வந்து வணங்கியது. |
| சொற்றுணை வேதியன்..... | சமணர்கள் அவரைக் கல்லுடன் கட்டிக் கடலில் இட்டபோது இப்பதிகத்தைப் பாடினார். கல் தெப்பமாக மிதந்தது. |
| பொன்னார் திருவடிக்கு........ | திருத்துங்கானை மடக் கோயிலுக்குச் சென்று இறைவனை நோக்கி புன்னெறியாகிய சமண சமயத்திலிருந்து மாசுற்ற இந்த உடலோடு வாழ முடியவில்லை. இவ்வுடலுடன் வாழ்வதற்கு உன்னுடைய சூல, இடப இலச்சினையை எனக்கு இட்டருள வேண்டும் என்று பாடல் பாடியபோது சூல, இடப இலச்சினைகள் நாவுக்கரசரின் தோளில் பொறிக்கப்பட்டன. |
| ஒன்று கொலாமவர் சிந்தை........ | நாவுக்கரசர் திங்களூர் என்ற இடத்துக்கு வந்து அப்பூதியடிகளின் மகன் பாம்பு தீண்டி இறந்ததைக் கண்டு அவ் உடலைத் திருப்பழனத்து இறைவன் திருமுன் கொணர்வித்து இப்பதிகத்தைப் பாடினார். சிறுவன் உயிர்பெற்று எழுந்தான். |
| பண்ணினேர் மொழியாளுமை... | திருமறைக் காட்டில வேதங்களால் பூசிக்கப்பட்டு பூட்டப்பட்ட கதவு திறக்காமையால் அங்குள்ளவர்கள் இறைவனை வேண்ட நாவுக்கரசர் இப்பதிகத்தைப் பாடி கதவு திறக்கப்பட்டது. |
| விற்றூணொன்றில்லாத.... | தொண்டை நாட்டை அடைந்து கண்ணப்பர் முத்தி அடைந்த திருக்காளத்தி நாதரை வழிபட்டு பாடியது. |
| மாதர்ப்பிறைக் கண்ணியானை.... | திருவையாற்றுக் கோயிலை அடைந்தார். கைலை மலை போல காட்சி அளித்தது. தாம் கண்ட கைலைக் காட்சியைப் பாடியபோது |
| பொய்மாயப் பெருங்கடலில்... | பூம்புகார் கோயிலில் உழவாரத்தொண்டு செய்துவரும் வேளையில் வானுலக அரம்பையர் அவரின் முன் |

| | |
|---|---|
| | ஆடல், பாடல் புரிந்து அவருடைய மனதைக் கலைக்க முயன்றபோது |

## சுந்தரமூர்த்தி நாயனார்

22. திருக்கைலாய மலையில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்து வந்த சமயகுரவரைக் குறிப்பிடுக?
ஆலாலசுந்தரர் என்று அழைக்கப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார்

23. அவர் திருக்கைலையில் செய்த பிழை யாது?
உமாதேவியாரின் சேடியர்களாயிருந்தவர்களைக் காதலித்தமை.

24. அதனால் அவருக்கு இறைவன் வழங்கிய தண்டனை யாது?
''நீ மணக்கோலத்துடன் மண்மேல் வாழ்ந்து மீண்டு வருவாயாக'' என்று கூறினார்.

25. நம்பியாரூரர் வளர்ந்த அரசனின் பெயரைக் குறிப்பிடுக?
சேரமான் பெருமாள் நாயனார்

26. திருமணத்தின்போது சுந்தரரைத் தடுத்தாட்கொண்டவர் யார்? அப்போது அவர் தாங்கி வந்த வேடம் யாது?
- சிவபெருமான்
- கிழப்பிராமண வடிவம்

27. சுந்தரரை வன்றொண்டர் என அழைத்தவர் யார்? அவ்வாறு அழைத்தமைக்கான காரணம் யாது?
- சிவபெருமான்
- சிவபெருமான் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டு தம்மை வன்மையாகப் பேசியபடியால் வன்றொண்டர் என அழைத்தார்.

28. ''நீ முன்பு நமக்குத் தொண்டன், நம் ஏவலால் மண்ணிற் பிறந்தனை..'' இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
சிவபெருமானால் சுந்தரமூர்த்தி நாயனாருக்குக் கூறப்பட்டது.

29. சுந்தரமூர்த்தி நாயனார் ''தம்பிரான் தோழர்'' என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
தோழமையோடு இறைவனை வணங்கி வந்தமையால் ''தம்பிரான் தோழர்'' என அழைக்கப்பட்டார்.

30. திருமூலட்டானத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் வன்மீகநாதரை வணங்கியபோது நிகழ்ந்த அற்புதம் யாது?
''நம்மை உனக்குத் தோழமையாகத் தந்தோம். நாம் முன்னர் உன்னைத் தடுத்தாட்கொண்ட அந்த மணக்கோலத்துடன் நீ மண்மேல் வாழ்ந்து மீண்டு வருவாயாக'' என்ற ஒலி கேட்டது.

| சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தேவாரங்கள் | பாடிய சந்தர்ப்பம் |
|---|---|
| பித்தாப் பிறைசூடி.... | சிவபெருமான் சுந்தரரைத் தடுத்தாட்கொண்டருளியபோது, சுந்தரர் இறைவனை வன்மையாகப் பேசியபோது, இறைவன் சுந்தரரைப் பாடும்படி ஆணையிட்டபோது, இப்பதிகம் பாடப்பட்டது. |
| தில்லைவாழ் அந்தணர்தம்.... | திருவாரூர் கோயிலிலுள்ள தேவாசிரியன் என்னும் மண்டபத்திற் கூடியிருந்த அடியார்களைக் கண்டு நான் அடியேனாகும் நாள் எந்நாள் என்று இறைவனை வணங்கியபோது, இறைவன் காட்சி கொடுத்த சந்தர்ப்பத்தில் இப்பதிகம் பாடப்பட்டது. |
| நீள நினைந்தடியேன்.... | குண்டையூர் கிழாரிடம் நெல் பெற்ற சுந்தரருக்கு அதனைத் திருவாரூருக்குக் கொண்டு செல்ல ஆள் |

| | |
|---|---|
| | கிடைக்கவில்லை. நிலைமையைக் குண்டையூர் கிழார் சுந்தரருக்குத் தெரிவித்தார். சுந்தரர் இப்பதிகத்தைப் பாட நெல் கிடைத்தது. |
| தம்மையே புகழ்ந்திச்சை…. | திருப்புகலூர் கோயிலுக்குச் சென்று பங்குனி உத்தர திருவிழாவிற்கு பொன் தேவைப்பட்டது. இறைவனை வணங்கித் தம் குறை சொல்லி இரந்தார். நித்திரை கொண்டு விழித்து எழுந்தபோது செங்கற்கள் எல்லாம் பொன் கட்டிகளாயின. |
| பொன் செய்த மேனியினர்…. | திருமுதுகுன்றத்து இறைவன் கொடுத்த பொன்னை மணிமுத்து ஆற்றிற் போட்டார். அது திருவாரூர் குளத்தில் கிடைத்தபோது இப்பதிகம் பாடப்பட்டது. |
| இத்தனையாமாற்றை…. | இறைவன் சுந்தரரைப் பார்த்து பசியாக இருக்கின்றீர், இப்பொதி சோற்றை உண்டு, தண்ணீரைப் பருகும் என்றார். சுந்தரர் சோற்றை உண்டு சற்று உறங்கினார். அவர் விழித்தபோது தண்ணீர் பந்தலையும் காணவில்லை. அந்தணரையும் காணவில்லை. அவர் இறைவன் திருவிளையாடலை உணர்ந்து பாடியது. |
| பிழையுளன பொறுத்திடுவீர்… | கண்கள் குருடாகிய சந்தர்ப்பத்தில் அடியார்கள் வழிகாட்ட சுந்தரர் திருவெண்பாக்கத்தைச் சென்றடைந்தார். அவர் துயர் பொறுக்க முடியாதவராய் இப்பதிகத்தைப் பாடினார். |
| மீளா அடிமை உமக்கே… | திருவாரூரை அடைந்த சுந்தரர் வன்மீகநாதரின் கோலத்தைக் காண்பதற்கு வலக்கண் பார்வையையும் தருமாறு இறைவனை வேண்டிப் பாடினார். வலக்கண் பார்வை கிடைத்தது. |
| ஏற்றான் மறக்கேன்.. | திருப்புளி கொளியூர் அவிநாசிப் பெருமானை நினைத்து முதலை உண்ட பிள்ளையை மீட்டுத் தா என்று இறைவனை வேண்டிப் பாடினார். |
| தலைக்கு தலைமாலை…. | உலக வாழ்க்கையை முடித்து முத்தி தரும்படி இறைவனை வேண்டி இப்பதிகத்தைப் பாடினார். வெள்ளை யானையில் ஏறிக் கைலைக்குச் சென்றார். |

**மாணிக்கவாசகர்**

31. மாணிக்கவாசகர் என்று அழைத்தமைக்கான காரணம் யாது?
    அவர் அருளிய திருப்பாடல்கள் யாவும் பொருள் பொதிந்த மணியான வாசகங்களாக அமைந்த காரணத்தினால் அவ்வாறு அழைக்கப்பட்டார்.

32. யாருக்கு முதலமைச்சராக மாணிக்கவாசகர் பணி ஆற்றினார்?
    அரிமர்த்தன பாண்டியனுக்கு

33. மாணிக்கவாசகரின் கலைத்திறன், கல்வி அறிவு, ஒழுக்கம் என்பவற்றைப் பாராட்டிய பாண்டியனால் அவருக்கு வழங்கப்பட்ட பட்டம் என்ன?
    தென்னவன் பிரமராஜன்

34. மாணிக்கவாசகர் அருட்குருவைச் சந்தித்த இடம் யாது?
    திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில்

35. அருட்குருவைச் சந்தித்த மாணிக்கவாசகரிடம் ஏற்பட்ட உடல் வெளிப்பாடுகள் எவை?
    உள்ளம் பாகாய் உருகியது. உடல் மயிர் பொடிப்ப விதிர்விதித்தது. ஆனந்தக் கண்ணீர் அருவியாக ஓடியது. ஆரா இன்பத்தால் ஆடிப் பாடினார்.

36. குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருள் யாவற்றையும் மாணிக்கவாசகர் என்ன செய்தார்?
    பாண்டியனின் பொருள் யாவற்றையும் குருநாதருக்கும், சிவனடியார்களுக்கும் செலவழித்தார்.

37. அருட்குரவர் மாணிக்கவாசகரிடம் மன்னனுக்குப் பரிசாகக் கொடுத்தனுப்பிய பொருள் யாது?
    மாணிக்கக்கல் ஒன்றை வழங்கினார்.

38. மாணிக்கவாசகருக்கு பாண்டிய மன்னன் அழித்த தண்டனைகள் யாவை?
- ➢ சிறையில் இட்டு வருத்தினார்.
- ➢ வைகை ஆற்று சுடுமணலில் நிறுத்தி நெற்றியில் கல்லெறிந்தார்.

39. மாணிக்கவாசகருக்கு இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்கள் எவை?
சிவபெருமான் கூலியாளாக வந்து அணைகட்டி பிரம்படி பட்டார்.

40. மாணிக்கவாசகருக்கு இறைவன் கூலியாளாக வந்தமையை உணர்த்தும் திருவாசகப் பாடல் அடியைக் குறிப்பிடுக?
''மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்''

41. மாணிக்கவாசகர் இயற்றிய பனுவல்கள் எவை?
சிவபுராணம், அம்மானை, திருவுந்தியார், திருவெம்பாவை, திருச்சாழல், திருப்பொன்னூஞ்சல், அன்னைப்பத்து

42. மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல அந்தணர் வடிவில் வந்த கூத்தப்பெருமான் எழுதிய நூல் எது?
திருக்கோவையார்

43. மாணிக்கவாசகர் திருக்கோவையாரை அருளிச்செய்த தலம் யாது? அந்நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?
- ➢ தில்லைச் சிற்றம்பலக் கோயில்
- ➢ தில்லைப் பெருமான்

44. பின்வரும் கூற்றுக்கள் கூறப்பட்ட சந்தர்ப்பத்தை விளக்குக?
''அடியேனை ஆட்கொண்டு உய்வித்து அருளுக.''
சிவபெருமான் தம்மை ஆட்கொள்ளும் பொருட்டு அருட்குரவராய் எழுந்தருளியுள்ளார், என்று வாதவூரர் உணர்ந்து அருட்குரவராகிய சிவனை வணங்கியபோது

45. ''நீ மதுரைக்குப் போ, ஆவணி மூல நாளில் குதிரைகள் வருமெனப் பாண்டியனிடம் தெரிவி''
குதிரைகள் வேண்ட வந்த செல்வம் அனைத்தையும் செலவழித்ததை அறிந்த மன்னன் மாணிக்கவாசகரை வருமாறு அழைத்தான். அப்போது அருட்குரவர் மாணிக்கவாசகரிடம் கூறினார்.

46. ''நீ இன்னும் சிறிது காலம் பூமியில் இருந்து மக்களுக்குச் சிவநெறியை அறிவுறுத்திய பின்னர் தில்லைக்கு வா''
பாண்டிய மன்னனுடைய அமைச்சுத் தொழிலில் இருந்து விடுவித்து திருப்பெருந்துறைக்குச் சென்று அருட்குரவராகிய இறைவனிடம், இறைவனோடு இரண்டறக் கலக்கும் பரமுத்தியை அருளுமாறு வேண்டியபோது

47. ''நீர் அருளிச்செய்த திருப்பாசுரங்களை ஓத விரும்பி அவற்றை உம்மிடம் கேட்டு எழுதும் பொருட்டே வந்தேன்.''
இறைவன் அந்தணர் வடிவில் வந்து மாணிக்கவாசகர் பாடிய பாடல்களை எழுதுவதற்காக வந்தபோது

48. திருச்சிற்றம்பலக் கோவையார் ஏட்டின் முடிவில் எவ்வாறு எழுதப்பட்டு ஒப்பமிடப்பட்டிருந்தது?
''அழகிய சிற்றம்பலமுடையான்'' என்று

49. தில்லைவாழ் அந்தணர்கள் நீ பாடிய பாடல்களுக்கு பொருள் யாது? என மாணிக்கவாசகரிடம் கேட்டபோது இவர் அப்பொருளாக யாரைச் சுட்டிக் காட்டினார்?
அம்பலத்திலுள்ள இறைவனை

50. மாணிக்கவாசகர் வாதவூரர் என அழைக்கப்படக் காரணம் யாது?
பாண்டி நாட்டிலே திருவாதவூரிலே பிறந்த காரணத்தினால் வாதவூரர் என அழைக்கப்பட்டார்.

1. அன்பு வழியில் நின்று பாடல்களைப் பாடி சைவத்தை வளர்த்த பெரியோர்களை எவ்வாறு அழைப்பர்?
   சமயகுரவர்

2. அறிவு வழியாலும் இறைவனை அடையலாம் எனக் காட்டியர்கள் யாவர்?
   சந்தான குரவர்

3. சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கம் செய்த பெரியோர்கள் நால்வரையும் எவ்வாறு அழைப்பர்?
   சந்தான குரவர்

4. சந்தானம் என்பதன் பொருள் யாது?
   பரம்பரை

5. சந்தான குரவர் என்பது யாது?
   தத்துவஞான பரம்பரையில் வந்த ஞானாசிரியர்களைக் குறிப்பதாகும்.

6. இரு வகையாகச் சுட்டப் பெறுகின்ற சந்தான குரவர்களை வகைப்படுத்தி எழுதுக?

| அகச் சந்தான குரவர் | புறச் சந்தான குரவர் |
|---|---|
| ➢ திருநந்திதேவர் | மெய்கண்டதேவர் |
| ➢ சனற்குமாரமுனிவர் | அருணந்தி சிவாச்சாரியார் |
| ➢ சத்தியஞானதரிசினிகள் | மறைஞானசம்பந்தர் |
| ➢ பரஞ்சோதிமுனிவர் | உமாபதி சிவாச்சாரியார் |

7. பரம்பொருளாகிய ஸ்ரீகண்ட பரமேஸ்வரனிடத்திலே உபதேசம் பெற்றவர் யார்?
   திருநந்திதேவர்

8. பரஞ்சோதிமுனிவரிடம் ஞான உபதேசம் பெற்றவர் யார்?
   மெய்கண்டதேவர்

9. புறச் சந்தான குரவர்களின் குருசீட முறையைக் குறிப்பிடுக?

| புறச் சந்தான குரவர் | குரு | சீடர் |
|---|---|---|
| ➢ மெய்கண்டதேவர் | பரஞ்சோதிமுனிவர் | அருணந்தி சிவாச்சாரியா |
| ➢ அருணந்தி சிவாச்சாரியார் | மெய்கண்டதேவர் | மறைஞானசம்பந்தர் |
| ➢ மறைஞானசம்பந்தர் | அருணந்தி சிவாச்சாரியார் | உமாபதி சிவாச்சாரியார் |
| ➢ உமாபதி சிவாச்சாரியார் | மறைஞானசம்பந்தர் | நமசிவாய தேசிகர் |

## மெய்கண்டதேவர்

10. மெய்கண்டதேவரின் பெற்றோர் எங்கே வாழ்ந்தனர்?
    திருமுனைப்பாடி நாட்டில் வாழ்ந்தனர்.

11. மெய்கண்டதேவரின் பெற்றோர் பெயரைக் குறிப்பிடுக?
    அச்சுதகளப்பாளர், மங்களாம்பிகை

12. மெய்கண்டதேவர் எவ் இறைவனது அருளினால் பிறந்தார்?
    திருவெண்காட்டு இறைவன்

13. மெய்கண்டதேவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் யாது?
    சுவேதனப் பெருமாள்

14. இவர் எத்தனை வயதினிலே பரஞ்சோதி முனிவரிடம் ஞான உபதேசம் கேட்ட சிறப்புடையவர்?
    மூன்று வயதினிலே

15. இவர் எத்தனையாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்?

கி.பி 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார்.

16. சுவேதனப் பெருமாளின் பரிபக்குவத்தை உணர்ந்து மெய்ஞ்ஞான உபதேசத்தை வழங்கிய பரஞ்சோதி முனிவரால் அவருக்கு வழங்கிய தீட்சா நாமம் யாது?
மெய்கண்டார்

17. மெய்கண்டதேவர் சைவத் திருமுறைகளிலே காணப்பெற்ற தத்துவக் கருத்துக்களை வகுத்தும், தொகுத்தும் எக்கோட்பாட்டை வழங்கினார்?
சைவ சித்தாந்தக் கோட்பாட்டை வழங்கினார்.

18. மெய்கண்டதேவர் அருளிய நூலைக் குறிப்பிடுக?
சிவஞானபோதம்

19. பதினான்கு சித்தாந்த சாஸ்திர நூல்களில் முதல் நூல் எனும் சிறப்புடையது எது?
சிவஞானபோதம்

20. சிவஞானபோதம் எத்தனை சூத்திரங்களால் ஆனது? எத்தனை இயல்களைக் கொண்டது?
4 சூத்திரங்கள் 12 இயல்கள்

21. மெய்கண்டதேவரிடம் எத்தனை மாணவர்கள் கல்வி கற்றனர்?
நாற்பது மாணவர்கள்

22. இம் மாணவர்களுள் தலைசிறந்தவர் யார்?
அருணந்தி சிவாச்சாரியார்

23. உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூலை அருளியவர் யார்?
மணவாசகம் கடந்தார்

24. மெய்கண்டதேவர் இறைதிருவடி அடைந்த தினத்தைக் குறிப்பிடுக?
ஐப்பசி மாத சுவாதி நட்சத்திரம்

## அருணந்தி சிவாச்சாரியார்

25. அருணந்தி சிவாச்சாரியார் எங்கே அவதரித்தார்?
திருத்துறையூரில்

26. இளமையிலேயே ஆகம நூல் அறிவு நிரம்பப் பெற்றமையினால் இவருக்கு வழங்கிய சிறப்புப் பெயர் யாது?
சலோகம பண்டிதர்

27. மெய்கண்டதேவரின் தந்தையான அச்சுதகளப்பாளரின் ஆசிரியராக விளங்கியவர் யார்?
அருணந்தி சிவாச்சாரியார்

28. ஆணவத்தின் சொரூபம் பற்றி அருணந்தி சிவாச்சாரியார் கேட்டதற்கு மெய்கண்டார் யாது செய்தார்?
அருணந்தி சிவாச்சாரியாரையே சுட்டிக் காட்டினார்.

29. சிவஞானபோதத்தின் வழிநூல் எது?
சிவஞானசித்தியார்

30. அருணந்தி சிவாச்சாரியார் அருளிய இரு நூல்களையும் குறிப்பிடுக?
சிவஞானசித்தியார், இருபா இருப∴து

31. சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை: சித்திக்கு விஞ்சிய நூல் இல்லை என்பது யாருடைய வாக்காக அமைந்துள்ளது?
ஆன்றோர் வாக்கு

Education கல்வி அධ්‍යාපන

32. சிவஞானசித்தியார் எத்தனை பகுதிகளை உடையது? அவற்றினைக் குறிப்பிட்டு அவற்றின் விளக்கங்களையும் எழுதுக?

- இரண்டு
- பரபக்கம், சுபக்கம்
- பரபக்கமானது பிற சமய தத்துவங்களின் பொருந்தாமைகளைக் கண்டிக்கும் பகுதியாகும்.
- சுபக்கமானது சைவசித்தாந்த அடிப்படைகளை விளக்கி நிற்கும் பகுதியாகும்.

33. இருபா இருப∴து எவ்வாறு சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கி நிற்கின்றது?
மாணவரின் வினா ஆசிரியரின் விடை என்ற அடிப்படையில் விளக்கி உரைக்கின்றன.

34. இவர் இறைவன் திருவடியை அடைந்த நாளைக் குறிப்பிடுக?
புரட்டாதி மாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்.

## மறைஞான சம்பந்தர்

35. இவர் எங்கே பிறந்தார்?
திருப்பெண்ணாகடத்தில்

36. "பட்ட கட்டையில் பகற்குருடு போகிறது" என யாரைப் பார்த்து யார் கூறினார்? எப்போது கூறினார்?

- உமாபதி சிவாச்சாரியாரைப் பார்த்து மறைஞான சம்பந்தர் கூறினார்.
- சோழ மன்னர் அவருக்கு அளித்த பல்லக்கிலேறி பகற் பொழுதில் தீவர்த்தி, ஆலவட்டம், குடை, சாமரை பரிசயைகள் புடைசூழ பெரிய ஊர்வலமாகச் சென்று கொண்டிருந்தபோது கூறினார்.

37. இவரது இயற்பெயர் யாது?
பரமானந்தசிவம்

38. இவரால் இயற்றப்பட்ட பிரமாண நூல் எது?
சதமணிக்கோவை அல்லது சதமணித் திரட்டு

39. சிதம்பரத்தை அடுத்து திருக்காளச்சேரியிலே சில ஆண்டுகள் மௌன விரதமிருந்தவர் யார்?
மறைஞான சம்பந்தர்

40. இவர் முத்தியடைந்த தினத்தைக் குறிப்பிடுக?
ஆவணி மாத உத்தர நட்சத்திரத்திலே முத்தியடைந்தார்.

## உமாபதி சிவாச்சாரியார்

41. தில்லை வாழ் அந்தணர்களில் ஒருவராக விளங்கிய புறச் சந்தான குரவர் யார்?
உமாபதி சிவாச்சாரியார்

42. கொற்றவன் குடி முதலியார் என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன் குடியில் வசித்தமையால் இவர் கொற்றவன் குடி முதலியார் என அழைக்கப்பட்டார்.

43. உமாபதி சிவாச்சாரியாரின் பக்குவநிலை எவ்வாறு வெளிப்பட்டது?
இவரின் குருவான மறைஞான சம்பந்தர் நெசவாளரிடம் கூழை வாங்கிப் பருகியபோது அவரது முழங்கை வழியே ஒழுகிய எச்சில் கூழை ஏந்தி பேரானந்தத்துடன் பருகினார். இதன் மூலம் அதிதீவிர பக்குவநிலை வெளிப்பட்டது.

44. சித்தாந்த அட்டகத்தில் எத்தனை நூல்கள் அடங்கியுள்ளன?
எட்டு நூல்கள்

45. சித்தாந்த அட்டகம் எனப்படுவது யாது?

மெய்கண்ட சாத்திரம் எனப்படும் பதினான்கு நூல்களுள் எட்டு நூல்கள் உமாபதி சிவாச்சாரியாரால் அருளப்பட்டவை. அந்நூல் தொகுதியே சித்தாந்த அட்டகம் எனப்படும்.

46. சித்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூல்களை எழுதுக?
   - சிவப்பிரகாசம்
   - சங்கற்பநிராகரணம்
   - வினாவெண்பா
   - உண்மைநெறி விளக்கம்
   - திருவருட்பயன்
   - போற்றிப்ப∴றொடை
   - கொடிக்கவி
   - நெஞ்சுவிடுதூது

47. சிவஞானபோதத்தின் சார்புநூல் எது?
   சிவப்பிரகாசம்

48. குறள் வெண்பா யாப்பில் சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் நூல் எது?
   திருவருட்பயன்

49. ஏனைய மதங்களின் கொள்கைகளைக் கண்டித்து சைவசித்தாந்தக் கருத்தை நிறுவுகின்ற நூல் எது?
   சங்கற்ப நிராகரணம்

50. இவர் சித்தாந்த அட்டக நூல்களைத் தவிர வேறு எந்நூல்களை எழுதியுள்ளார்?
   கோயிற்புராணம்
   திருமுறைகண்டபுராணம்
   திருத்தொண்டர்புராணம்
   திருப்பதிகக்கோவை
   சேக்கிழார் புராணம்

51. உமாபதி சிவாச்சாரியார் நிகழ்த்திய அற்புதங்களை எழுதுக?
   - சிதம்பரத்திலே மார்கழி மாதக் கொடியேற்றத் திருவிழாவிலே ஏறாது நின்ற கொடியை கொடிக்கவி பாடி ஏறச் செய்தார்.
   - இவர் எழுதிய கோயிற்புராணம் எனும் நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது.
   - பெற்றான் சாம்பான் என்னும் சிவபக்தனுக்கு நடராஜர் அருளினால் முத்தியை வழங்கினார்.
   - முள்ளிச்செடி ஒன்றுக்கு முத்தியை வழங்கினார்.

52. உமாபதி சிவாச்சாரியாரின் மாணவர் யார்?
   நமசிவாயதேசிகர்

53. திருவாவடுதுறை ஆதீனத்தைத் தாபித்தவர் யார்?
   நமசிவாயதேசிகர்

54. உமாபதி சிவாச்சாரியார் எத்தினத்தில் இறைவன் திருவடியை அடைந்தார்?
   சித்திரை மாத அத்த நட்சத்திரம்

55. சைவ சித்தாந்த உண்மைகளை விபரிக்கும் முகமாக உமாபதி சிவாச்சாரியார் எந்நூலை வடமொழியில் எழுதியுள்ளார்?
   பௌஷ்கரவிருத்தி

**அலகு : 15 திருமூலர், அருணகிரிநாதர் தரம் - 10,11**

## திருமூலர்

1. யோகியர் எனப்படுவோர் யாவர்?

அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்கள்

2. திருமூல நாயனாரின் வரலாற்றை விரிவாகக் கூறும் இலக்கியம் எது?
   பெரியபுராணம்

3. பசுக்கள் துயரடைந்தமைக்கான காரணம் யாது?
   பசுக்களை மேய்க்கும் மூலன் என்னும் இடையன் இறந்தமையினால்

4. பசுக்கள் துயர் நீக்க யோகியர் கையாண்ட உத்தி யாது?
   மூலனின் உடலுக்கு உயிர் கொடுக்க முடிவு செய்து தனது உடலை மறைவான இடத்தில் விட்டு கூடு விட்டுக் கூடு பாயும் சித்தின் மூலம் மூலனின் உடலில் புகுந்தார்.

5. திருமூலர் அடைந்த முத்தி யாது?
   சீவன்முத்தி

6. திருமூலர் இறைவனது திருப்பாதத்தில் ஒன்றித்த இடம் எது?
   திருக்கைலை

7. திருமந்திரத்தின் ஆசிரியர் யார்? எத்தனையாம் திருமுறையில் அடங்குகின்றது.
   - திருமூலர்
   - பத்தாந் திருமுறை

8. இந்து மதத்தின் தோத்திர நூலாகவும், சாத்திர நூலாகவும் விளங்கும் இலக்கியம் எது?
   திருமந்திரம்

9. திருமந்திரத்திலுள்ள தந்திரங்கள், பாடல்களின் எண்ணிக்கைகளைக் குறிப்பிடுக?
   - தந்திரங்கள் - 9
   - பாடல்கள - 3000

10. ஆகமக் கருத்துக்களைத் தமிழில் கூறுவதால் திருமந்திரத்திற்கு வழங்கப்படும் பெயர் யாது?
    தமிழாகமம்

11. திருமந்திரத்திற்கு வழங்கப்படும் மறுபெயர்கள் யாது?
    - திருமந்திரமாலை
    - சுந்தரணாகமம்
    - தமிழ்மூவாயிரம்
    - தமிழாகமம்

12. திருமந்திரத்தில் (தந்திரங்கள்) கூறப்பட்டுள்ள விடயங்கள் எவை?
    - உலக வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கங்கள்
    - உள்பொருள் பற்றிய விளக்கங்கள்
    - ஆன்மாக்கள் இறைவனை அடைவதற்கு உதவும் மார்க்கங்கள்
    - சிவசின்னங்களின் முக்கியத்துவம்
    - குருலிங்க சங்கம வழிபாடு
    - முத்தி பற்றிய விடயம்

13. ‘‘நடுவு நின்றார்க்கு அன்றி ஞானமும் இல்லை…’’ என்ற பாடல் அமைந்துள்ள இலக்கியம் எது?
    திருமந்திரம்

14. மேற்குறித்த பாடல் வலியுறுத்தும் விடயம் யாது?
    நீதி தவறாது நடுநிலைமையோடு வாழும் வாழ்வையே சமய வாழ்வாக வலியுறுத்துகின்றார்.

15. ‘‘அன்பே சிவம்’’ என்று கூறும் இலக்கியம் எது?
    திருமந்திரம்

16. ‘‘என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்..’’ என்ற பாடல் அமைந்துள்ள இலக்கியம் எது?

Education கல்வி அධ්‍යාපන

திருமந்திரம்

17. இறைவனை அடைவதற்கு திருமூலர் கூறும் வழி யாது?
உண்மையான அன்பினாலும், பக்தியினாலும் இறைவனை அடையலாம் என்றார்.

18. திருமந்திரத்தின் பகுதிகள் தந்திரம் என்ற பெயரினால் சுட்டப் பெறுவதன் காரணம் யாது?
தந்திரம் என்பது ஆகமத்தைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். ஒன்பது ஆகமங்களின் சாராம்சமாய் அமைந்துள்ளதால் இப்பெயர் ஏற்பட்டுள்ளது.

## அருணகிரிநாதர்

19. இந்து மதத்தைத் தாக்கத்துக்குள்ளாக்கிய அவைதிக நெறிகள் இரண்டைக் குறிப்பிடுக?
   - சமணம்
   - பௌத்தம்

20. அருணகிரிநாதர் வாழ்ந்த காலம் எது?
விஜயநகர நாயக்கர் காலம் (கி.பி.15 ஆம் நூற்றாண்டு)

21. முருகனடியார்களில் முதன்மையானவராக விளங்கியவர் யார்?
அருணகிரிநாதர்

22. முருகப்பெருமான் அருணகிரிநாதரை எவ்வாறு ஆட்கொண்டார்?
அருணகிரிநாதர் திருவண்ணாமலைக் கோபுரத்திலிருந்து குதித்து தனது வாழ்வை முடித்துவிட முயன்றவேளை, முருகப்பெருமான் தனது திருக்கோலத்தைக் காட்டி அவரைக் காப்பாற்றி அவரது கனவிலே "சரவணபவ" என்னும் ஆறெழுத்து மந்திரத்தைப் பொறித்து மெய்ஞ்ஞான உபதேசம் செய்தருளினார்.

23. அருணகிரிநாதர் எம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தார்?
பிரபுடதேவராஜன்

24. சம்பந்தாண்டானின் போட்டியிலே முருகப்பெருமான் சபைமுன் தோன்றிக் காட்சி கொடுப்பதற்காக அருணகிரிநாதர் பாடிய பாடல் எது? அவ்வேளை முருகப்பெருமான் காட்சி கொடுத்த இடம் எது?
"அதலசேடனார் ஆட அகிலமேரு மீதாட…"
திருவண்ணாமலைக் கோயில் வாசலுக்கு அருகேயுள்ள தூணில்

25. சம்பந்தாண்டானின் போட்டியிலே முருகப்பெருமான் அருணகிரிநாதருக்காகக் காட்சி கொடுத்த இடம் இன்று எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
கம்பத்து இளையனார் சந்நிதி

26. அருணகிரிநாதர் பாடிய இலக்கியங்கள் எவை?
   - வேல் விருத்தம் மயில் விருத்தம்
   - கந்தரலங்காரம் கந்தரந்தாதி
   - சேவல் விருத்தம் திருவகுப்பு
   - கந்தரனுபூதி திருப்புகழ்

27. அருணகிரிநாதர் பாடிய இலக்கியங்களுள் சிறப்பு வாய்ந்தது எது?
திருப்புகழ்

28. திருப்புகழைப் பாட முருகப்பெருமான் எடுத்துக் கொடுத்த அடி யாது?
"முத்தைத் தரு பத்தித் திருநகை.."

29. சந்தப்பாக்களைக் கொண்டமைந்த இலக்கியம் எது?
திருப்புகழ்

30. திருப்புகழ் என்பதன் பொருள் யாது?
முருகப்பெருமானின் திருத்தக்க புகழைக் கூறும் நூல் என்பது பொருளாகும்.

31. பஞ்சபுராணங்கள் பாடிய பின்னர் ஓதப்படும் இலக்கியம் எது?
திருப்புகழ்

32. அருணகிரிநாதர் திருப்புகழில் போற்றிய ஈழத்துத் திருத்தலங்கள் எவை?
- கதிர்காமம்
- திருகோணமலை
- நல்லூர்
- கந்தவனக்கடவை

33. "இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி.." என்ற பாடலில் போற்றப்பட்ட இலங்கைத் திருத்தலம் எது?
கதிர்காமம்

34. விரதங்களில் ஓதப்பெறுகின்ற பாராயணச் சிறப்பாலும், தத்துவஞானச் செறிவாலும் முருக பக்தர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுகின்ற அருணகிரிநாதரின் இலக்கியங்கள் எவை?
- கந்தரலங்காரம்
- கந்தரனுபூதி

35. கந்தரலங்காரம், கந்தரனுபூதி என்பவற்றிலுள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது?
- கந்தரலங்காரம் - 101
- கந்தரனுபூதி - 51

36. அநுபூதி என்றால் என்ன?
பக்தி, அனுபவம், பூரிப்பைச் சுட்டுகின்றது.

37. அருணகிரிநாதர் "வாக்குக்கு அருணகிரி" எனச் சிறப்பிக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
சொற்களை ஆளும் திறம் பெற்றமையினால்

## அலகு : 16 சுவாமி விபுலானந்தர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தரம் - 10,11

1. சுவாமி விபுலானந்தர் தொடர்பாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக?

| | |
|---|---|
| பிறப்பிடம் | :- மட்டக்களப்பில் காரைதீவு |
| பெற்றோர் பெயர் | :- சாமித்தம்பி, கண்ணம்மை |
| பிறந்த காலம் | :- 03.05.1892 |
| இயற்பெயர் | :- மயில்வாகனம் |
| பிரமச்சரியநாமம் | :- பிரபோதசைதன்யர் |
| துறவுநாமம் | :- சுவாமி விபுலானந்தர் |

2. சுவாமி விபுலானந்தர் கல்வி கற்ற பாடசாலைகள் எவை?
கல்முனை மெதடிஸ்த ஆங்கில பாடசாலை
மட்டக்கயப்பு புனித மைக்கேல் கல்லூரி

3. சுவாமி விபுலானந்தர் "பண்டிதர் விபுலானந்தர்" என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றி சிறப்புச்சித்தி எய்தியமையினால்

4. சுவாமி விபுலானந்தர் விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்ற பல்கலைக்கழகம் எது?
இலண்டன் பல்கலைக்கழகம்

5. மயில்வாகனனார் துறவில் நாட்டம் கொள்ளத் தூண்டிய சம்பவம் எது?
- இராமகிருஷ்ண சங்கத்தில் இணைந்தமையும், அச்சங்கத் துறவிகளின் போதனையும்.
- மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபரும், விபுலானந்தரின் நண்பருமான திருவிளங்கம் என்பவரின் இறப்பு அவரிடம் தீவிர துறவு நாட்டத்தை ஏற்படுத்தியது.

6. விபுலானந்தர் ஆன்மீக அறிவைப் பரப்புவதற்கு ஆசிரியராக இருந்து வெளியிட்ட பத்திரிகை எது?

விவேகானந்தன்

7. விபுலானந்தர் ஆன்மீக அறிவைப் வளர்ப்பதற்கு ஆசிரியராக இருந்து வெளியிட்ட சஞ்சிகைகள் எவை?
   - இராமகிருஷ்ண (தமிழ்)
   - வேதாந்த கேசரி (ஆங்கிலம்)

8. மயில்வாகனனாருக்கு விபுலானந்த எனும் துறவு நாமம் யாரால் எத்தனையாம் ஆண்டு வழங்கப்பட்டது?
   - சுவாமி விவேகானந்தரால்
   - 1924 ஆம் ஆண்டு

9. உலகின் முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கியவர் யார்?
   சுவாமி விபுலானந்தர்

10. விபுலானந்தர் தமிழ்த்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றிய பல்கலைக்கழகம் எது?
    அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

11. விபுலானந்தர் எழுதிய நாடக நூல் எது?
    யாழ்நூல்

12. விபுலானந்தர் எழுதிய இசை நூல் எது?
    மதங்கசூளாமணி

13. இராமகிருஷ்ணமிசன் வெளியிட்ட "பிரபுட்ட பாரத" இதழின் ஆசிரியர் யார்?
    சுவாமி விபுலானந்தர்

14. "வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ…" என்ற பாடலைப் பாடியவர் யார்?
    சுவாமி விபுலானந்தர்

15. சுவாமி விபுலானந்தர் தமிழ் நாட்டில் வசித்த காலத்தில் பணியாற்றிய நிறுவனங்கள் எவை?
    - மதுரைத் தமிழ்ச் சங்கம்
    - கரந்தைத் தமிழ்ச் சங்கம்
    - சென்னை மாகாணத் தமிழர் சங்கம்
    - சைவசித்தாந்த மகாசமாசம்
    - சென்னைப் பல்கலைக்கழகம்

16. விபுலானந்தர் இறைபதம் அடைந்த நாள் எது?
    1947.யூலை.19

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

17. ஆறுமுகநாவலர் தொடர்பாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக?
    பிறப்பிடம் :- யாழ்ப்பாணத்தில் நல்லூர்
    பெற்றோர் பெயர் :- கந்தப்பிள்ளை, சிவகாமி
    பிறந்த காலம் :- 18.12.1822
    இயற்பெயர் :- ஆறுமுகம்

18. இலங்கையில் யாருடைய ஆட்சிக் காலத்தில் ஆறுமுகநாவலர் பிறந்தார்?
    ஆங்கிலேயர்

19. கிறிஸ்தவ மதம் பற்றிய அறிவு நாவலருக்கு எவ்வாறு கிடைத்தது?
    கிறிஸ்தவ வேதாகமத்தைத் தமிழிலே மொழி பெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட பார்சிவல் பாதிரியார் நாவலரின் உதவியைப் பெற்றுக் கொண்டமையால்

20. நாவலர் தனது முதலாவது பிரசங்கத்தினைத் தொடங்கிய ஆலயம் எது?
    வண்ணார் பண்ணைச் சிவன்கோயில் 1847 ஆம் ஆண்டில்

21. நாவலர் உருவாக்கிய பாடசாலை எது? எத்தனையாம் ஆண்டு உருவாக்கப்பட்டது?
சைவப்பிரகாச வித்தியாசாலை
1848 ஆம் ஆண்டு

22. ஆறுமுக நாவலருக்கு நாவலர் என்ற பட்டத்தைச் சூட்டிய நிறுவனம் எது?
திருவாவடுதுறை ஆதீனம்

23. நாவலர் தமிழ் நாட்டிலே பதிப்புச் செய்த இலக்கியங்கள் எவை?
சூடாமணி உரை சௌந்தர்யலகரி உரை

24. தமிழ்ப் பதிப்புத் துறையில் முன்னோடியாக விளங்கியவர் யார்?
ஆறுமுக நாவலர்

25. ஆறுமுக நாவலர் நிறுவிய அச்சகத்தின் பெயர் யாது?
வித்தியானுபாலன யந்திரசாலை

26. மாணவர்களுக்காக ஆறுமுக நாவலர் எழுதிய இலக்கியங்கள் எவை?
- முதலாம், இரண்டாம், நான்காம் பாலபாடங்கள்
- சைவ வினாவிடைகள்
- நீதி நூல்கள்

27. வசனநடை இலக்கியங்களச் சிறப்பாக எழுதியமையினால் நாவலர் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றார்?
- தமிழ் வசனநடையின் தந்தை
- வசனநடை கைவந்த வல்லாளர்

28. நாவலர் பிரசங்கம் செய்யத் தொடங்கியதன் நோக்கங்கள எவை,
நாடு முழுவதும் அரச ஆதரவோடு மேற்கொள்ளப்பட்டு வந்த கிறிஸ்தவ மதப்பிரசாரங்களுக்கு எதிரான கண்டனத்தைத் தெரிவிப்பதற்கும், சைவத்தின் உண்மையை நிலைநிறுத்துவதற்கும்

29. நாவலர் அச்சியந்திரத்தை நிறுவியதன் பிரதான நோக்கங்கள் எவை?
- சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்களை எழுதி வெளியிடல்.
- உரை நூல்களை வெளியிடல்.
- துண்டுப் பிரசுரங்களை வெளியிடல்.
- பதிப்பு முயற்சிகளை மேற்கொள்ளல்.

30. நாவலர் புரிந்த சமயப் பணிகள் சில குறிப்பிடுக?
- பிரசங்கம் மேற்கொண்டமை.
- சமய இலக்கியங்கள் வெளியிட்டமை.
- கண்டன இலக்கியங்கள் வெளியிட்டமை.
- ஆலயங்களைப் புனரமைப்புச் செய்தமை.
- புராணபடனங்களை மேற்கொண்டமை.

31. நாவலர் எழுதிய கண்டன இலக்கியங்கள் எவை?
- சைவதூஷண பரிகாரம்
- வச்சிரதண்டம்
- சுப்ரபேதம்

32. நாவலர் கண்டனங்கள் மேற்கொண்ட விடயங்கள் சில குறிப்பிடுக?
- மதமாற்றம்
- வசன நடைகளில் காணப்பட்ட குறைபாடுகள்
- கோயில்களில் நிகழ்ந்த உயிர்ப்பலி
- சிற்றின்ப நோக்கிலான நிகழ்ச்சிகள்
- குருமார்கள், கோயிலதிகாரிகள் என்போரிடம் காணப்பட்ட குறைபாடுகள்

33. நாவலர் புனரமைப்புச் செய்த ஆலயங்கள் எவை?
- நல்லூர் கந்தசுவாமி கோயில்
- கீரிமலை நகுலேஸ்வரம்
- திருக்கேதீஸ்வரம்

34. நாவலர் ஆற்றிய சமூகப் பணிகள் எவை?
- கொடிய பஞ்சம் ஏற்பட்டவேளை மகாசபை ஒன்றை உருவாக்கி, பொருள் சேர்த்து ஏழைகளின் பசிபோக்கிப் பணியில் ஈடுபட்டார்.
- கரையூரில் வாழ்ந்த கத்தோலிக்க மக்கள் பேதிநோயினால் மடிவது கண்டு, மனம் வருந்தி, அரசாங்கத்திற்கு கடுமையான முறைப்பாட்டினைச் செய்தார்.
- வேளாண்மைச் சங்கங்களை நிறுவியமை.
- அரசாங்க ஊழியர்களின் ஊழல்கள் குறித்து துணிந்து எழுதி மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்தார்.

35. நாவலர் செய்யுள் இலக்கியங்களை வசனநடையில் எழுதியமைக்கான காரணம் யாது?
சைவ இலக்கியங்களை சாதாரண கல்வியறிவற்றவர்களும் படித்து விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில்

36. நாவலர் புரிந்த கல்விப் பணிகள் எவை?
- அச்சியந்திரத்தை நிறுவியமை.
- பாடநூல்களையும், வினாவிடைகளையும் எழுதியமை.
- பாடசாலைகளை நிறுவியமை.
- ஆசிரியராகப் பணிபுரிந்தமை.

37. 19 ஆம் நூற்றாண்டில் சைவத்தையும், தமிழையும் காக்க எழுந்த விடிவெள்ளி என்று குறிப்பிடப்பட்ட இந்து சமய மறுமலர்ச்சியாளர் யார்?
ஆறுமுக நாவலர்

38. நாவலர் இறைபதம் அடைந்த காலம் எது?
1879.12.05

39. நாவலரின் குருபூசைத் தினம் எது?
கார்த்திகை மாத மக நட்சத்திரம்

**அலகு : 17 இறைவனும், ஆன்மாவும், மும்மலம் தரம் - 10,11**

1. ஆன்மாக்களுக்கு மலத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது எது?
தீட்சை

2. தீட்சை பெற்ற ஒருவர் வீபூதி தரிக்கவேண்டிய இடங்கள் எத்தனை?
16

3. சைவசமயத்தைச் சார்ந்த ஒருவரை "சிவபுத்திரன்" என்னும் தகுதிக்கு இட்டுச் செல்லும் தீட்சை எது?
விசேட தீட்சை

4. ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களை உடையோர் எவ்வாறு அழைக்கப்படுவார்?
பிரளயாகலர்

5. குருவின் திருநோக்கினால் மாணவருக்கு பாசத்தை அழிக்கும் தீட்சை எது?
சாம்பவ தீட்சை

6. விஞ்ஞானகலருக்கும், பிரளயாகலருக்கும் பரமசிவன் அருளும் முத்தி தீட்சை எது?
நிராதார தீட்சை

7. சைவ நாற்பாதங்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
சைவமார்க்கங்கள்

Education கல்வி අධ්‍යාපන

8. மும்மலங்களை உடையவர்களுக்கு வழங்கப்படும் தீட்சை எது?
சாதாரண தீட்சை

9. குருவின் தீண்டுதலால் அளிக்கப்படும் தீட்சை எது?
ஸ்பரிச தீட்சை

10. குருவின் அருள்நோக்கினால் கிடைக்கும் தீட்சை எது?
நயன தீட்சை

11. சரியை நெறியில் நின்று முத்தியடைந்த நாயனார் யார்?
திருநாவுக்கரசு நாயனார்/அப்பர்

12. சிவனின் உருவத்திருமேனியை நோக்கி உடம்பினால் செய்யும் வழிபாடு யாது?
சரியை வழிபாடு

13. சைவ சாதனங்களுள் முதல்படி எது?
சரியை

14. சாதகன் தன்னை அடிமையாகவும், சிவனை ஆண்டானாகவும் கொண்டு வழிபடும் மார்க்கம் எது?
தாசமார்க்கம்

15. தாசமார்க்கத்தில் நிற்போர் அடையும் முத்தி எது?
சாலோக முத்தி

16. உழவாரப்படையாளி எனச் சிறப்பிக்கப்படும் நாயனார் யார்?
திருநாவுக்கரசு நாயனார்

17. அகத்தொழிலாலே அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யப்படும் வழிபாட்டுநெறி எது?
கிரியைநெறி

18. “மகன்மைநெறி “ எனப்படும் நெறி யாது?
கிரியைநெறி

27. ஆன்மா உடலோடு கூடியிருக்கும் முத்தி நிலை எது?
சீவன் முத்தி

28. “சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட….” என்ற பாடலைப் பாடியவர் யார்?
மாணிக்கவாசகர்

**அலகு : 18 திருவருட்பயன் தரம் - 10,11**

1. திருவருளின் இயல்பு யாது?
இருளைக் கெடுக்கும் ஒளியாகக் காணப்படும்.

2. உலகத்தில் உயிர்கள் பெறுகின்ற பொருட்களில் மேலானது எது?
திருவருள்

3. திருவருளின் சிறப்பு யாது? திருவருள் ஏன் சூரியனுக்கு ஒப்பிடப்படுகின்றது?
உலகத்திலுள்ள உயிர்த்தோற்றங்களுக்கு வேண்டிய ஆகாரம், ஒளி முதலியவைகளைக் கொடுத்தும், ஆன்மாவின் ஞானசக்தியாகிய ஒளியை லேமலாக விளக்குவதால் திருவருள் சூரியனைப் போலக் காணப்படுகின்றது.

4. உடலின் இயல்பு எத்தகையது?
ஐம்பூதங்களின் சேர்க்கையாலானதும், சடத்துவமானதும், ஒன்றையும் அறியமாட்டாததுவுமானது.

Education கல்வி அධ්‍යාපන

5. ஆன்மாவின் இயல்பு எத்தகையது?
   ஆன்மா பந்திக்கப்பட்டிருப்பதால் ஒன்றையும் தானாக அறியமாட்டாது. அறிவிக்கவே அறியும்.

6. திருவருளின் இயல்பு எத்தகையது?
   திருவருள் புதிதாக ஒன்றையும் அறிய வேண்டியதில்லை. அறிவைப் பெறக்கூடிய ஆன்மாக்கு அறியச் செய்து திருவருளே.

7. திருவருளைப் பெறாத ஆன்மாக்களின் நிலை எத்தகையது எனக் கூறப்படுகின்றது?
   பாற்சமுத்திரத்தில் இருக்கும் மீன்கள், அங்கே நிறைந்துள்ள பாலைப் பருகாமல் இழிவான பிராணிகளைத் தேடி உண்ணும் முறையைப்போல், ஆன்மாக்களும் அனுபவிக்க வேண்டிய திருவருளைத் தவிர்த்து, மயக்கத்தைக் கொடுக்கும் உலக விஷமாகிய பிறவிக் கடலில் ஆழ்ந்து நிற்கிறது. மேலும் தனக்குப் பின்னே சமீபத்திலே துணையாக வருபவனை அறியாத வழிப்போக்கனைப் போலவும், தம்முடைய காட்சிக்கு துணையாக நிற்கும் ஆன்மாவை அறியாத ஐம்பொறிகளைப் போலவும், ஆன்மா தனக்குத் துணையாக நிற்கும் ஞானமாகிய அருளை உணர்த்துவதில்லை.

8. பூமியிலுள்ள ஆன்மாக்களின் நிலை எத்தகையது?
   தம்மைத் தாங்குகின்ற பூமியை உணராமல், தாமே தமக்கு ஆதாரமானாற் போல, பூமியிலுள்ள ஆன்மாக்களின் திருவருளைத் தமக்காதாரம் என்று அறியாமல், தமக்குத் தாமே ஆதாரம் என்று மயங்கும் அறிவீனத்தை உடையவர்களாய் உள்ளனர்.

9. தம்மைக் காணாமல் தம்மைத் தேடும் அறிவிலிகள் எவரைப் போன்றவர்?
   மலையின் மேல் நின்று கொண்டு, மலையைத் தேடுபவரும்
   நிலத்திலே நின்று நிலத்தைத் தேடுபவரும்
   தாம் உலாவும் இடமாகிய ஆகாயத்தில் நின்று ஆகாயத்தைத் தேடுபவரைப் போலக் காணப்படுவர்.

10. திருவருளைப் பெறாதோரின் நிலை எத்தகையது?
    திருவருளைப் பெறாதோர் தம்மை அறியார்.
    தம்மையன்றித் திருவருளையும், அதனுடைய சிவத்தையும் இழப்பர்.

11. பொய் வழியில் தலைமை பெற்று நிற்கும் ஆன்மாக்களுடைய தன்மை எவ்வாறிருக்கும்?
    நிறைந்த நல்ல நீரிலே செல்லும்போது பிற பொருளிலே நாட்டமுள்ளவன் அதைப் பருகாது நா வறண்டு செல்வதையும், எவ்விடத்திலும் இருள் நீங்கி விடிந்த பின்பும் கண்ணைப் பயன்படுத்தாது தடுமாறி நிற்பதைப் போன்றதாகும்.

12. திருவருளை நாடாது வேறு பொருளை நாடுவோரது நிலை எத்தகையது?
    திருவருளே ஆன்மாவின் நுகர்ச்சிக்குரிய இன்பப்பொருள். எனவே அதை விடுத்து வேறு பொருளில் நாட்டம் கொள்வதென்பது உறியிலுள்ள பாற்குடத்து மேல் நிற்கும் பூனையானது ஓடும் கரப்பான் பூச்சியைத் தின்பதற்காக பாற்குடத்தில் நின்றும் பாய்ந்தோடும். அதைப் போலன்றி ஞானநூல்களைக் கேட்கும்போது பரபரப்பில்லாமல் நிறைந்த ஊக்கத்தோடு அவதானித்துக் கேளுங்கள். அப்படியன்றி வேறு விடயங்களில் மனதை விட்டால் மாறுபாடாக விளங்கித் துன்பத்தை அடைவீர்கள் எனக் கூறப்படுகின்றது.

13. திருவருளை உணராத ஆன்மாவின் நிலை யாது?
    திருவருளோடு கலந்து நின்றும் அதனைச் சற்றேனும் உணரமாட்டாத அறிவற்றதான ஆன்மாவுக்கு வீடுபேறு பகையாகி அதனை அடைய முடியாது. எனவே ஆன்மா வீடுபேறு அடைவதற்கு திருவருளை விரைந்து பெறுதல் வேண்டும்.

## ஆ – அருளுரு நிலை

14. ''அருளுரு நிலை'' என்பது யாது?
    திருவருள் வெளிப்பட்டுப் பிரகாசிக்கின்ற அருள் வடிவமாகிய அருட்குருவின் இயல்பு ஆகும்.

15. ''அருட்குரு'' என்பது யாது?

பக்குவப்பட்டவர்களது சுட்டுணர்வுக்கு விடயமாகி உபகரிக்கும் திருவருளே அருட்குரு எனப்படும்.

16. திருவருளின் நிலை எவ்வாறு காணப்படுகின்றது?
சுட்டிக் காட்டுவதற்குரிய வடிவமான அருட்குரு வடிவாயும், எக்காலத்திலும் விட்டுப்பிரியாத ஞான வரவாக திருவருள் காணப்படுகின்றது.

17. ஆன்மாக்கள் திருவருளை உணராதிருந்த சந்தர்ப்பம் யாது?
அறியாமையாகிய இருள் மலம் மேலிட்ட காலத்திலும், ஆன்மாக்களை விட்டுப் பிரியாமல் உபகரித்து நின்று திருவருள் புரிந்ததே "அறியாமையுள் நின்று அளித்ததே"அதனை அப்பொழுதும் ஆன்மாக்கள் உணரவில்லை.

18. "அருட்குருவே நோய் நீக்கவல்லார்" எனக் கூறப்படுவதற்குரிய காரணம் யாது?
ஒரு வீட்டிலிருப்பவனுக்கு வந்த நோயை அவ்வீட்டில் உள்ளவர் அறிவரேயன்றி அந்த நோயை உலகத்திலுள்ளவரும் அறிவாரோ? அறிய மாட்டார். அதுபோல ஆன்மாவிலுள்ள மலமாகிய நோயை ஆன்மாவோடு கலந்து நிற்கும் அருள் அறிவதன்றி வேறொன்றும் அறியமாட்டாது என்பதாகும்.

19. பூமியிலுள்ளவர்கள் அருட்குருவாகிய திருவருளை அறியாமைக்குரிய காரணம் யாது?
உலக சுகத்தைக் கொடுக்கும் உபாயத்தினால்
தன்னிலையாகிய சிவத்துவத்தை உபகரிக்கும்படி குரு வடிவிலே வெளிப்பட்ட மெய்ப்பொருளை பூமியில் உள்ளவர்கள் யாவரும் அறியார். மேலும் நிலையில்லாததாகிய உலக இன்பத்திலே கருத்துடையவராய் ஆணவ மலத்தால் மறைக்கப்பட்ட அறிவினை உடைய, ஞானமாகிய ஒளியைக் காணும் நற்பொறி இல்லாதவர்கள், அறிவுமயமாகிய அருளையும், அவ்வருள் அதிட்டித்து நிற்கும் குருவடிவத்தையும் சிறிதும் அறியமாட்டார்.

20. திருவருள் மனிதனை நேர் நின்று வசப்படுத்தி எவ்வாறு ஆட்கொள்ளுகின்றது?
இந்தப் பூமியிலுள்ள அஞ்ஞானிகள், அவ்வவ் இனத்துப் பழக்கப்பட்ட விலங்குகளின் துணையைக் கொண்டு அவ்வின விலங்குகளைப் பிடிப்பதுபோல திருவருளும் மனித உருவமாகிய குரு வடிவத்தை எடுப்பது மனிதரை நேர் நின்று வசப்படுத்தி ஆட்கொள்ளுகின்றது.

21. குருவினால் எமக்கு என்ன பயன்?
எவனுக்கு ஞானநூற் பொருள்கள் உள்ளபடி தெரியுமோ அந்நூற் பொருள்கள் தமக்குஅவகை குருவாகவேண்டி நிற்றல். எனவே குருவின் தேவையை உணர்வதால் குரு பயனுடையவர்.

22. குரு ஆன்மாவின் மலத்தை எவ்வாறு நீக்கும்?
ஒருவன் பாம்பினால் தீண்டப்பெற்றால் அந்த நஞ்சானது கீரி நேரே வந்து நிற்பினும் நீங்காது. கீரியாகத் தன்னைப் பாவிக்கும் மாந்திரிகளால் நீங்கும். இந்த முறையைப் போல திருவருளானது நேரே நின்றும் மலங்களைப் போக்காது தான் அதிட்டித்தற்கு ஒரு குருவடிவைக் கொண்டு பார்வையாலும், பாவனையாலும் ஆன்மாவிடமிருந்து மலத்தை நீக்குகின்றது.

23. சிவபெருமான், மும்மலத்தாருக்கும் எவ்வாறு அவர்களது மலத்தை நீக்குகின்றார்?
- விஞ்ஞானகலரில் பக்குவமுடையாருக்கு அவர்களது அறிவிலே நின்று அருள் செய்து மலத்தை நீக்குவார்.
- பிரளயாகலரில் பக்குவர்க்கு அவர்களைப் போல முன்னிலையாய் நின்று கர்மத்தை நீக்குவார்.
- சகலரில் பக்குவருக்கு குருவடிவாய் வந்து மலங்களை நீக்கியருளுவார்.

24. சிவபெருமானின் இயல்பு எத்தகையது?
எல்லாப் பற்றுக்களையும் கடந்தவர்.

25. சிவபெருமான் ஆன்மாக்களுக்கு எவ்வடிவாய் வந்து வீடுபேற்றை அருளுகின்றார்?
குருவடிவில்/ குருமூர்த்தத்தில் வந்து அருளுகின்றார்.

26. ஆன்மாவிடம் குரு இல்லாமல் தத்துவஞானம் தோன்றாது. காரணம் தருக?

சூரிய ஒளி இல்லாமல் சூரிய காந்தக் கல்லில் அக்கினி தோன்றாது என்பது எப்படி பிரசித்தமான உண்மையாகுமோ, அப்படியே குரு இல்லாமல் ஆன்மாவில் தத்துவஞானம் தோன்றாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**அலகு : 19 குருலிங்க சங்கம வழிபாடு, சைவநாற்பாதங்கள் தரம் - 10,11**

## குருலிங்க சங்கம வழிபாடு

1. தீட்சை அழிப்பவரையும், கல்வி போதிப்பவரையும் எவ்வாறு அழைப்பர்?
   குரு

2. சிவபெருமானின் அருவுருவத் திருமேனி எது?
   சிவலிங்கம்

3. தீட்சை வழங்குபவரை எவ்வாறு அழைப்பர்?
   தீட்சாகுரு

4. சங்கம வழிபாட்டின் சிறப்பை "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்.."என்னும் பாடலில் வெளிப்படுத்திய நாயனார் யார்?
   அப்பர் பெருமான்

5. சங்கமம் என்றால் என்ன?
   சிவனடியார் திருக்கூட்டம்

6. திருக்கோயில்களில் நிலையாகத் தாபிக்கப்படும் லிங்கம் எது?
   பரார்த்தலிங்கம் அல்லது தாவரலிங்கம்

7. ஆயுட்காலம் முழுவதும் செய்வதற்குரிய பூசை யாது?
   ஆன்மார்த்த பூசை

8. சிவலிங்கத்தின் பீடம் எதனைக் குறிக்கும்?
   சக்தியை

9. சிவலிங்கத் திருமேனியைத் தீண்டி வழிபடத் தகுதி பெறப் பெற்றுக்கொள்ளும் தீட்சை எது?
   விசேட தீட்சை

10. கல்வியைப் போதிக்கும் குரு எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
    வித்தியாகுரு

## சைவநாற்பாதங்கள்

11. முத்தியடைவதற்குச் சாதாரணமாக சைவாகமங்கள் எவற்றைக் குறிப்பிடுகின்றன?
    - ➢ சரியை
    - ➢ கிரியை
    - ➢ யோகம்
    - ➢ ஞானம்

12. சைவநாற்பாதங்களை எவ்வாறு படிநிலைப்படுத்தியுள்ளனர்?
    - ➢ சரியை - அரும்பு
    - ➢ கிரியை - மலர்
    - ➢ யோகம் - காய்
    - ➢ ஞானம் - கனி

13. சரியை என்றால் என்ன?
    உடம்பு சார்ந்த புறத்தொழிலால் சிவனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு சரியை ஆகும்.

அதியாபன Education கல்வி

14. இந்நெறியில் சாதகன் தன்னை எவ்வாறு பாவணை செய்கிறான்?
தன்னை அடிமையாகவும், சிவனை ஆண்டானாகவும் பாவணை செய்கிறான்

15. சரியைத் தொண்டுகள் எவை?
- கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்தல்
- மெழுகுதல்
- பூ எடுத்தல்
- பூமாலை தொடுத்தல்.
- இறைவனைப் புகழ்ந்து பாடுதல்.
- கோயிலில் விளக்கேற்றுதல்.
- நந்தவனம் அமைத்தல்.
- சிவனடியாருக்குப் பணிவிடை செய்தல்.

16. கிரியைநெறி என்பது யாது?
அகத்தொழிலாலே சிவனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு கிரியை ஆகும்.

17. இந்நெறியில் சாதகன் இறைவனை எவ்வாறு வழிபடுகின்றான்?
தன்னை மகனாகவும், இறைவனை தந்தையாகவும் பாவணை செய்து வழிபடுகின்றான்

18. சற்புத்திர மார்க்கத்திற்குரிய ஒழுக்கங்கள் எவை?

| | |
|---|---|
| சிவலிங்க பூசை செய்தல். | முக்கரணங்களையும் தூய்மையாக வைத்திருத்தல். |
| திருமுறைகளை ஓதுதல். | பிற உயிர்களிடம் அன்பும், பரிவும் காட்டல். |
| துதித்தல். | அன்னதானம் செய்தல். |
| திருவைந்தெழுத்தைச் செபித்தல். | ஆன்ம சுத்தி செய்தல். |
| விரதங்கள் அநுட்டித்தல். | உண்மை பேசுதல். |

19. யோகநெறி என்றால் என்ன?
அகத்தொழிலாலே சிவனுடைய அருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு யோகநெறி ஆகும்.

20. யோகம் என்பதன் பொருள் யாது?
சேர்க்கை
உயிரானது இறைவனோடு சேர்தல்

21. யோகத்தின் எட்டு அங்கங்களும் எவை?
- இயமம்
- நியமம்
- ஆசனம்
- பிராணாயாமம்
- பிரத்தியாகாரம்
- தாரணை
- தியானம்
- சமாதி

22. ஞான மார்க்கத்தின் படிநிலைகள் எவை?
- கேட்டல்
- சிந்தித்தல்
- தெளிதல்
- நிட்டை கூடல்

23. சன்மார்க்கம் என்பதை விளக்குக?
அன்பு மேலீட்டால் தன்னை மறந்து தன் நாமம் தொட்டு தலைவனைத் தலைப்படும் தலைவி போல், ஆன்மா பதியை அடையும் மார்க்கம் சன்மார்க்கம் ஆகும்.

24. சீவன் முத்தி என்றால் என்ன?

Education கல்வி අධ්‍යාපන

ஆன்மா முத்தி நிலையிலே சத்தைச் சார்ந்து, உயர்ந்த நிலையடைந்து உடலோடு கூடியிருக்கும் நிலை சீவன் முத்தி எனப்படும்.

**அலகு : 20 நாட்டார் வழிபாடு தரம் - 10,11**

1. ஆகம அடிப்படையின்றி மரபு ரீதியில் வழிபடும் வழிபாடு யாது?
   கிராமிய/நாட்டார் வழிபாடு

2. சடங்கு என்னும் சொல்லின் பொருள் யாது?
   செயல்

3. மகாபாரதத்தின் நாயகியாக விளங்கும் தெய்வம் எது?
   திரௌபதை

4. பாஞ்சால நாட்டு மன்னனின் யாக அக்கினியிலிருந்து தோன்றிய பெண் தெய்வம் எது?
   திரௌபதை

5. கிழக்கில் பிரசித்தி பெற்ற திரௌபதை அம்மன் ஆலயம் எது?
   பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயம்

6. பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வரலாற்றை அறிய உதவும் கல்வெட்டு எது?
   நாதன் கல்வெட்டு

7. பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய சடங்குகள் எத்தனை நாட்கள் இடம்பெறும்?
   பதினெட்டு நாட்கள்

8. உடப்பு திரௌபதை அம்மன் ஆலயம் தற்காலத்தில் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?
   ஸ்ரீ சத்தியபாமா ருக்மணி சமேத பார்த்தசாரதி கோயில்

9. திரிசூல வடிவில் வழிபடப்படும் தெய்வம் எது?
   வைரவர்

10. பிரம்மனின் தலையைக் கொய்து ஆணவத்தை அடக்கிய தெய்வம் எது?
    வைரவர்

11. “பிரம்மன்தன் சிரம் அரிந்த பெரியோய் போற்றி” எனத் துதிக்கப்படும் தெய்வம் எது?
    வைரவர்

12. “சேத்திரபாலகர்” எனப் போற்றப்படும் தெய்வம் எது?
    வைரவர்

13. ஆகம நிலையில் வழிபடப்படும்போது வைரவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
    ஞானவைரவர்

14. “சேத்திரம்” என்பதன் பொருள் யாது?
    தலம்

15. மக்களின் அச்சத்தைப் போக்கும் காவல் தெய்வம் எது?
    வைரவர்

16. “தருமர் பட்டாபிஷேகம்” பத்தொன்பதாம் நாள் நடைபெறும் தலம் எது?
    மட்டக்களப்பு திரௌபதை அம்மன் ஆலயம்

**நாட்டார் கலைகள்**

17. உடுக்கு, மத்தளம், சல்லாரி போன்ற இசைக்கருவிகள் இடம்பெறும் வழிபாடு எது?
    நாட்டார் வழிபாடு

18. இயற்கையோடு இணைந்த கலைகள் இடம்பெறும் வழிபாடு எது?
கிராமிய வழிபாடு

19. கூத்து, இசை, அலங்காரம் போன்ற கலைகள் இடம்பெறும் வழிபாடு எது?
நாட்டார் வழிபாடு

20. நாட்டார் வழிபாட்டில் பிரதான இடம் வகிக்கும் கலை எது?
கூத்துக்கலை

## அலகு : 21 ஈழத்தில் சைவத்தின் தொன்மை, ஈழத்தில் சைவம் தரம் - 10,11

### ஈழத்தில் சைவத்தின் தொன்மை

1. இலங்கையைச் சிவபூமி எனச் சிறப்பித்தவர் யார்?
திருமூலர்

2. இலங்கையின் பூர்வீகக் குடிகள் யாவர்?
இயக்கர், நாகர்

3. புராதன காலத்தில் நாகர்களது பிரதான வழிபாட்டுத் தலமாக அமைந்த தலம் எது?
திருக்கேதீஸ்வரம்

4. இலங்கையில் இந்துசமயத்தின் தொன்மை பற்றிய ஆதாரங்களை வெளிப்படுத்துபவை எவை?
   - புராதன ஈச்சரங்கள்
   - மகாவம்சம்
   - பிராமிக் கல்வெட்டுக்கள்
   - இந்திய இதிகாசங்கள்
   - பிறநாட்டார் குறிப்புக்கள்

5. கி.மு 2000 ஆண்டளவில் இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் நிலவிய பண்பாடு எது?
பெருங்கற் பண்பாடு

6. புராதன இலங்கையில் முருக வழிபாடு இடம்பெற்றதை வெளிப்படுத்தும் ஆதாரங்கள் எவை?
   - புத்தளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்
   - மாதோட்டம், கந்தரோடை ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட வேலாயுதங்கள், சேவற்சிலை, காவடிச் செதில்
   - கதிர்காம ஆலய வழிபாடு

7. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடக்கம் சைவசமயமே நிலைபெற்றது என்பதைக் கூறும் இலக்கியங்கள் எவை?
   - இலங்கையில் பௌத்த வரலாறு – வண.வலபொல இராகுல
   - இலங்கைச் சரித்திர – திரு.ஜே.டபிள்யூ.ரெனற்
   - இலங்கைச் சரித்திரம் - குவைறோஸ்

8. திருக்கோணேஸ்வர ஆலயம் கட்டப்பட்ட காலப்பகுதி எது?
கி.மு 1300 இல்

9. "சிவநகர்" என்ற பெயர் குறிப்பிடப்பட்ட கல்வெட்டு காணப்பட்ட இடம் எது?
உருகுணைத் தேசிய பூங்கா

10. அனுராதபுர காலப்பகுதியை வரையறை செய்க?
கி.மு 4ம் நூற்றாண்டு - கி.மு 10ம் நூற்றாண்டு

11. அனுராதபுரம் யாரால், எப்போது இராசதானியாக்கப்பட்டது?
பண்டுகாபய மன்னனால் கி.மு 4ம் நூற்றாண்டில்

Education கல்வி அධ්‍යාපන

12. அனுராதபுர காலத்தில் இந்துசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதற்கான ஆதாரங்கள் எவை?
    - விஜயனுக்குப் பின் அனுராதபுரத்தை ஆட்சி செய்த பண்டுவாசுதேவன், அபயன், பண்டுகாபயன் ஆகியோர் சைவர்களாக இருந்தனர்.
    - பண்டுகாபயன் தனது இராசதானியில் அந்தணர்களுக்கு என ஒரு பகுதியை அமைத்தான் என்றும், சிவன் கோயில் ஒன்றைக் கட்டினான் என்றும் ''மகாவம்சம்'' கூறுகிறது.
    - தேவநம்பியதீசனுக்கு முற்பட்ட மன்னர்களின் பெயர் ''சிவன்'' என்று முடிவடைந்தமை. (உ.ம் :- கிரிகண்டசிவன், மகாசிவன், மூத்தசிவன்)
    - ''பிராமணர்கள்'' அரச சபையில் புரோகிதராகவும், ஆலோசகராகவும், வைத்தியராகவும் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.
    - அனுராதபுரத்தை ஆட்சி செய்த எல்லாளன் தமிழ் மன்னன் என்றும்
    - துட்டகைமுனு கதிர்காமத்தில் நேர்த்திக்கடன் செய்தான் என்றும் மகாவம்சம் கூறுகின்றது.
    - கஜபாகு மன்னன் சேரநாட்டிலிருந்து பத்தினித் தெய்வ வழிபாட்டை இலங்கையில் அறிமுகம் செய்தான்.

13. ''கோகர்ணம்'' எனச் சிறப்பிக்கப்படும் ஆலயம் எது?
    திருக்கோணேஸ்வரம்

14. அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வர ஆலயத்தை மீண்டும் கட்டிய மன்னன் யார்? காலப்பகுதி எது?
    குளக்கோட்டன் கி.பி 5ம் நூற்றாண்டு

15. பொலநறுவைக் காலத்தினை வரையறை செய்க?
    கி.பி 1017 – கி.பி 13ம் நூற்றாண்டு வரை

16. பொலநறுவை இராசதானியின் மறுபெயர் என்ன?
    ஜனநாத மங்கலம்

17. ''இரண்டாம் சிவாலயம்'' எனும் சிறப்பிற்குரிய ஆலயம் எது?
    வானவன் மாதேவி ஈச்சரம்

18. சோழர்கால ''கற்றளி'' என அழைக்கப்படும் ஆலயம் எது?
    வானவன் மாதேவி ஈச்சரம்

19. ''இரவிகுல மாணிக்க ஈஸ்வரம்'' யாரால் எங்கே அமைக்கப்பட்டது?
    - இராஜராஜ சோழனால்
    - வடமாகாணத்தின் ''பதவியா'' என்னும் இடத்தில்

20. கந்தளாய்ப் பிரதேசத்தில் பிராமணர்கள் வசித்த இடம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
    ''சதுர்வேதி மங்கலம்''

21. சோழர்கள் இலங்கையில் அமைத்த ஆலயங்கள் எவை?
    - வானவன் மாதேவி ஈச்சரம்
    - இரவிகுல மாணிக்க ஈஸ்வரம்
    - உத்தம சோழேஸ்வரம்

22. விஜயபாகு மன்னன் அமைத்த ஆலயம் எது?
    விஜயராஜ ஈஸ்வரம்

23. விக்கிரமபாகு மன்னன் அமைத்த ஆலயம் எது? எங்குள்ளது?
    விக்கிரம சலாமேக ஈஸ்வரம் குருநாகல்

24. மகாபராக்கிரமபாகு அமைத்த ஆலயங்கள் எத்தனை?
    13

25. பொலனறுவையில் கண்டெடுக்கப்பட்ட செப்புப் படிமங்கள் எவை?
சோமாஸ்கந்தமூர்த்தி, நடராஜர், சிவகாமி, விநாயகர் மற்றும் காரைக்காலம்மையார், சுந்தரமூர்த்தி நாயனார்

26. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தை வரையறை செய்க?
கி.பி 13 – கி.பி 16 ம் நூற்றாண்டு வரை

27. கி.பி 13 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சைவசமய வளர்ச்சிக்கு உதவிய மன்னர்கள் யாவர்?
- இரண்டாம் பராக்கிரமபாகு
- 4ம் கஜபாகு
- 4ம் பராக்கிரமபாகு
- அழகக்கோணர்

28. பெந்தோட்டையில் காளி கோயிலைக் கட்டுவித்த மன்னன் யார்?
2ம் பராக்கிரமபாகு

29. ஜயவர்த்தன கோட்டையை நிறுவியவர் யார்?
அழகக்கோணர்

30. யாழ்ப்பாண அரசின் தலைநகராக விளங்கிய இடங்கள் எவை?
- சிங்கைநகரம் (வல்லிபுரம்)
- நல்லூர்

31. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தை அமைத்த மன்னன் யார்?
6ம் புவனேகபாகு (செண்பகப் பெருமாள்)

32. இக் காலத்தில் தோற்றம் பெற்ற ஆலயங்கள் எவை?
- நல்லூர் வெயிலுகந்தப் பிள்ளையார் ஆலயம்
- இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம்
- உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம்
- நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்
- நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம்
- அரியாலை சித்திவிநாயகர் ஆலயம்

33. இக்காலத்தில் தோற்றம் பெற்ற சைவப் பிரபந்தங்கள் எவை?
- தட்சிணகைலாச புராணம்
- கோணேசர் புராணம் (கோணேசர் கல்வெட்டு)
- கதிரைமலைப்பள்ளு

34. ஐரோப்பியர் எனப்படுவோர் யாவர்?
- போர்த்துக்கேயர் (1505 – 1658)
- ஒல்லாந்தர் (1658 – 1796)
- ஆங்கிலேயர் (1796 – 1948)

35. போர்த்துக்கேயர் இலங்கை வந்தபோது இலங்கையில் காணப்பட்ட இராச்சியங்கள் எவை?
கோட்டை கண்டி யாழ்ப்பாணம்

36. சீதாவாக்கையிலுள்ள கருங்கல்லிலான ஆலயம் எது?
பெறண்டி கோயில்

37. போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயங்கள் எவை?
- திருக்கேதீஸ்வரம்
- திருக்கோணேஸ்வரம்
- முன்னேஸ்வரம்
- பெறண்டி கோயில்

38. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் சைவ மக்களிடையே நிலவிய வழிபாட்டு முறை எது? வழிபடப்பட்ட பொருட்கள் எவை?

- வைரவர் வழிபாடு
- சூலம், கல்

39. பசுவதைக்கு அஞ்சி நாட்டை விட்டு தமிழகம் சென்றவர் யார்?
ஞானப்பிரகாச சுவாமிகள்

40. ஒல்லாந்தத் தளபதியின் மனைவியின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட ஆலயம் எது? எத்தனையாம் ஆண்டு அமைக்கப்பட்டது?

- வண்ணார் பண்ணைச் சிவன் கோயில்
- 1787ம் ஆண்டு

41. ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த நூல்கள் எவை?

- பறாளை விநாயகர் பள்ளு
- மறையசையந்தாதி
- கல்வளையந்தாதி
- நல்லைக் குரவஞ்சி
- வண்ணை வைத்தியலிங்கக் குறவஞ்சி
- நல்லைக் கலிவெண்பா
- சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ்
- வெருகல் சித்திர வேலாயுதர் காதல்

42. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சைவமும், தமிழும் வளரப் பாடுபட்டவர் யார்?
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## ஈழத்தில் சைவம்

43. ஸ்ரீ தட்சிண கைலாச புராணம் எத்தலம் பற்றிக் கூறுகின்றது?
திருக்கோணேஸ்வரம்

44. இலங்கையில் சிவலிங்க வழிபாடு பரவுவதற்குக் காரணமானவர்கள் யார்?
நாகர்

45. நாகரினால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் எவை?

- திருக்கேதீஸ்வரம்
- திருக்கோணேஸ்வரம்
- முன்னேஸ்வரம்
- திருக்கரசை
- நகுலேஸ்வரம்

46. பல அடுக்குகளில் அமைந்த பெரும் கல் விளக்கு ஒன்று காணப்படும் ஆலயம் எது?
முன்னேஸ்வரம்

47. தாண்டவக் கோலத்திலுள்ள சிவபெருமானின் படிமம் காணப்படும் இடம் எது?
கண்டி மாவட்டத்தில் கடலாதெனிய எனும் ஊரில்

48. கிழக்கிழங்கையின் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகக் கருதும் ஆலயம் எது?
திருக்கோயில்

49. இலங்கையில் சிவபக்தனாக அரசாண்டவன் என்று இதிகாசங்களில் குறிப்பிடப்படுபவன் யார்?
இராவணன்

50. நாகர்கள் கற்றளிக் கோயில்களை அமைத்த இடங்கள் எவை?
முன்னேஸ்வரம் திருக்கரசை நவாலி

51. இலங்கையில் மிகப் பழமையான சிவலிங்கங்கள் காணப்படும் இடங்கள் எவை?

Education கல்வி

வந்தாறுமூலை, பனங்காமம், கீரிமலை, இணுவில் (காரைக்கால்), வவுனியா

52. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கையில் இந்துசமயம் நிலைபெற்றுள்ளதெனக் கூறும் வரலாற்று ஆய்வாளர்கள் யாவர்?

- வண.வலபொல இராகுல
- திரு.ஜே.டபிள்யூ.ரெனற்
- குவைறோஸ்

**அலகு : 22** **ஈழத்து ஆலயங்கள்** **தரம் - 10,11**

## களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்

1. களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் பற்றிக் கூறும் நூல் எது?
களுதேவாலயக் கல்வெட்டு

2. களுதேவாலயம் என்பதன் பொருள் யாது?
வேடுவத் தலைவனான களுவன் வழிபட்ட இடம் களுதேவாலயம் எனப்படும்.

3. சிவலிங்கத்தில் பிள்ளையார் அம்சம் இருப்பதைக் கண்டவர் யார்?
மணியாள் பூபால வன்னிமை

4. சுயம்புலிங்கப் பிள்ளையார் என அழைக்கப்படக் காரணம் யாது?
சிவலிங்கத்தில் பிள்ளையார் அம்சம் இருந்தமையினால்

5. களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்தின் தலவிருட்சம் எது?
வில்வமரம்

6. இவ் ஆலயத்தின் தீர்த்தோற்சவ தினம் எது?
ஆனி உத்தரம்

7. இவ் ஆலயம் அமைந்துள்ள இடம் எது?
மட்டக்களப்பின் தெற்கே களுதாவளை எனும் இடம்

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

8. கொக்கட்டிச்சோலை என அழைக்கப்படக் காரணம் யாது?
கொக்கட்டி மரங்கள் நிறைந்து காணப்படுவதால்

9. இவ் ஆலயத்தோடு மட்டக்களப்பில் காணப்படும் இன்னும் சில ஆலயங்களும் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
தேசத்துக் கோயில்கள்

10. இவ் ஆலயம் பற்றிக் கூறும் நூல் எது?
மட்டக்களப்பு மான்மியம்

11. மட்டக்களப்பு மன்முனைப் பகுதியில் ஆட்சி செய்த அரசி யார்?
உலகநாச்சி

12. இவ் ஆலயத்திற்கு திருப்பணிகள் புரிந்தோர் யார்?
குளக்கோட்ட மன்னன் கலிங்கமாகன்

13. இவ் ஆலய இறைவன், இறைவி, தலவிருட்சம் என்பன எவை?
இறைவன் - தான்தோன்றீஸ்வரர்
இறைவி - பார்வதி
தலவிருட்சம் - கொக்கட்டிமரம்

14. இலங்கையில் மிக உயரமான கொடித்தம்பம் காணப்படும் ஆலயம் எது? அதன் உயம் என்ன?

Education கல்வி அධ්‍යාපන

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 60 அடி உயம்

15. இவ் ஆலய "பரிபாலகர்" எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
    வண்ணக்கர்

16. இவ் ஆலயத்தில் பூசை செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
    சங்கமர்

17. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய மகோற்சவம் இடம் பெறும் காலம் எது?
    ஆவணி வளர்பிறை முதலாம் நாள் (15 நாட்கள்)

18. இவ் ஆலயத் தேர்த்திருவிழா எவ்வாறு அழைக்கப்படும்?
    தேரோட்டம்

19. இவ் ஆலயத் தேர்த்திருவிழா அன்று இரவு இடம் பெறும் நிகழ்வு என்ன?
    திருச்சூகரவேட்டை (சூகரம் - பன்றி)

20. குடுக்கை கூறுதல் நிகழ்வு ஏன் இடம் பெறுகின்றது?
    திருவிழாவில் பங்குகொண்ட அனைவரையும் கௌரவிக்கும் முகமாக

## நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

21. நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தை அமைத்த மன்னன் யார்?
    செண்பகப் பெருமாள்

22. சிங்கைப் பரராசசேகரன் இவ் ஆலயத்திற்குச் செய்த பணிகள் எவை?
    - நான்கு கோயில்களை நாற்திசையிலும் அமைத்தான்.
    - யமுனாரி எனும் ஏரியை அமைத்தான்.

23. இவ் ஏரி "யமுனாரி" என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
    யமுனா நதியின் திவ்விய தீர்த்தம் கலக்கப்பட்டமையால் "யமுனாரி" என அழைக்கப்படுகின்றது.

24. போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட இவ் ஆலயத்தை மீண்டும் புதிதாக அமைத்தவர் யார்?
    இரகுநாதமாப்பாண முதலியார்.

25. இவ் ஆலயத்தின் மூலமூர்த்தியாக விளங்குவது எது?
    வேல்

26. இவ் ஆலய மகோற்சவம் எப்போது, எத்தனை நாட்கள் இடம் பெறும்?
    ஆவணி மாத அமாவாசை 25 நாட்கள்

## நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்

27. நயினாதீவின் மறுபெயர்கள் எவை?
    நாகதீபம், மணிபல்லவம், மணித்தீவு, பிராமணத்தீவு

28. அறுபத்துநான்கு சக்திபீடங்களில் ஒன்றாக விளங்கும் ஆலயம் எது?
    நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்

29. இவ் ஆலய இறைவியின் பெயர் என்ன?
    நாகபூசணி, நாகம்மாள், நாகேஸ்வரி

30. இவ் ஆலயத்தை அமைத்தவர்கள் யார்?
    நாகர்கள்

31. இக் கோயிலின் மூலமூர்த்தியின் தோற்றம் என்ன?

ஐந்து தலை நாகபடக் குடையின் கீழ் வீற்றிருக்கும் அம்மன்

32. இவ் ஆலயத்தின் தீர்த்தம், தலவிருட்சம் என்பன யாவை?
    தீர்த்தம் - சித்தாமிர்த புட்கரணி
    தலவிருட்சம் - வன்னி மரம்

33. இவ் ஆலய மகோற்சவ தினம் எது?
    ஆனிப் பூரணை

34. ஆனிப் பூரணை நாளில் அம்பாள் கடலின் மத்தியில் தெப்பத்தில் எழுந்தருளும் ஆலயம் எது?
    நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்

35. இங்கு அமைந்துள்ள அன்னதான மடத்தின் பெயர் என்ன?
    அமுதசுரபி

## புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்

36. இவ் ஆலயத்தின் கருவறைக் கதவு எப்போது திறக்கப்படும்?
    ஆனி மாதம் (6 நாட்கள்)

37. இவ் ஆறுநாள் சடங்கின் முக்கியமான சடங்கு எது?
    தீமிதிப்பு

38. இக் கோயிலில் இடம்பெறும் சடங்குகள் எவை?
    திருக்கதவு திறத்தல், அம்மனை எழுந்தருளப் பண்ணுதல், கன்னிமார் பிடித்தல், கலியாணக்கால் நடுதல், எரிக்குளை வெட்டுதல், நெல்லுக் குற்றுதல்

39. இவ் ஆலய தோற்றத்திற்குக் காரணமாக இருந்தவர் யார்?
    பெரியார்

40. இவ் ஆலயத்தின் இறைவி யார்?
    ஸ்ரீ பத்திரகாளி அம்மன்

## மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் (மாமாங்கேஸ்வரம்)

41. இவ் ஆலயம் அமைந்துள்ள இடம் எது?
    மட்டக்களப்பில் அமிர்தகழி எனும் ஊரில்

42. இவ் ஆலயத்தின் மூர்த்தியின் சிறப்பு யாது?
    சிவபெருமானுக்கு விநாயகர் அங்கி சாத்தப்பட்டுள்ளமை.

43. மாமாங்கேஸ்வர ஆலயம் என அழைக்கப்படுவதன் காரணம் யாது?
    மூலமூர்த்தியான சிவலிங்கப் பெருமானுக்கு விநாயகர் அங்கி அணிந்து அடியவர்கள் வழிபடுகின்றதால்

44. ‘‘பஞ்சவடி’’ என்னும் சொல்லின் பொருள் என்ன?
    ஐவகை மரங்களும் ஒன்றாக வளர்ந்து குளிர்ச்சி தருதல்

45. ஐவகை மரங்களும் எவை?
    ஆல், அரசு, திருவாத்தி, நெல்லி, கொக்கட்டி

46. இவ் ஆலய லிங்கம் ‘‘முள்ளாலலிங்கம்’’ எனப் பெயர் பெறக் காரணம் என்ன?
    முள் ஆலமரத்தடியில் கிடைக்கப்பட்டதால்

47. இவ் ஆலயத்தின் தீர்த்தம் எது?
    மாமாங்கத் தீர்த்தம்

48. மாமாங்கத் தீர்த்தத்தின் சிறப்புகள் எவை?
   - இராமபிரானால் உருவாக்கப்பட்டது
   - தீராத நோய்களைத் தீர்க்கும் சந்தனச் சேறு (அமிர்தகளி) உள்ளது.

49. இத் தீர்த்தத்தின் மறுபெயர் என்ன?
   மாமங்கைத் தீர்த்தம்

50. மாமங்கைத் தீர்த்தம் எனப் பெயர் பெறக் காரணம் என்ன?
   கங்கை, யமுனா, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிரபரனி, கன்யாகுமாரி ஆகிய ஒன்பது பெரிய மங்கையரின் தீர்த்தம் கலக்கப்பட்டமையால்

51. இவ் ஆலயத்தில் பிதிர்க்கடன் செய்யும் காலங்கள் எவை?
   ஆடி அமாவாசை புரட்டாதி மாத மகாளய பட்சம்

52. இவ் ஆலய தலவிருட்சம் எது?
   குருந்தமரம்

53. இத் தலத்தின் தீர்த்தோற்சவ தினம் எது?
   ஆடி அமாவாசை

## திருக்கேதீஸ்வரம்

54. இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் எவை?
   திருக்கேதீஸ்வரம் திருக்கோணேஸ்வரம்

55. திருக்கேதீஸ்வரத்தின் அமைவிடம் எது?
   மன்னார் மாவட்டத்தின் மாதோட்டத்தில் (மாந்தை)

56. இத் தலத்தின் இறைவன், இறைவி, தீர்த்தம், தலவிருட்சம் என்பன எவை?
   - இறைவன் - கேதீஸ்வரநாதர்
   - இறைவி - கௌரி அம்பாள்
   - தீர்த்தம் - பாலாவி
   - தலவிருட்சம் - வன்னி மரம்

57. இத்தலம் கேதீஸ்வரம் என அழைக்கப்படுவதன் காரணம் யாது?
   நவக்கிரகங்களில் ஒன்றான கேது வழிபட்ட காரணத்தினால்

58. திருக்கேதீஸ்வரப் பெருமான் "நாகநாதர்" என அழைக்கப்படக் காரணம் யாது?
   நாகர் வழிபட்ட தலம் என்பதால்

59. இத் தலம் மீது தேவாரம் பாடியோர் யாவர்?
   திருஞானசம்பந்தர், சுந்தரர்

60. போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பின் இவ் ஆலயத் தோற்றத்திற்கு வித்திட்டவர் யார்?
   ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

61. இவ் ஆலய மகோற்சவம் இடம் பெறும் நாள் எது?
   வைகாசி மாதம்

62. இங்கு காணப்படும் மடங்கள் எவை?
   திருஞானசம்பந்தர் மடம், திருவாசக மடம், நாவலர் மடம், சிவராத்திரி மடம், கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபை மடம்

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்

63. இவ் ஆலயத்தின் அமைவிடம் எது?
   முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை எனும் ஊரில்

64. ''பத்தாம்பளை'' என்பதன் பொருள் விளக்கம் யாது?
மதுரையை எரித்த கண்ணகி ஈழத்திற்கு வந்து தங்கிய பத்தாம் இடம் என்பதால்

65. இவ் ஆலயத்தில் இடம் பெறும் மிகவும் சிறப்பான விழா எது?
வைகாசிப் பொங்கல்

66. ''நோற்புக்காரர்'' எனப்படுவோர் யார்?
தொண்டு செய்யும் பணியில் ஈடுபடும் ஓர் சமூகத்தவர்.

67. வைகாசிப் பொங்கலின் சடங்கு முறைகள் எவை?
பஞ்சாங்கம் ஆளல், பாக்குத் தெண்டல், தீர்த்தமெடுத்தல், கடல்நீரில் தீபமேற்றல், மடைப்பண்டம் எடுத்தல்.

68. இவ் ஆலய பஞ்சாங்கம் எடுத்தல் நிகழ்வு எப்போது இடம் பெறும்?
சித்திரை வருடப்பிறப்பு அன்று

69. பொங்கல் தினத்தில் இவ் ஆலயத்தில் இடம் பெறும் கூத்து எது?
கோவலன் கூத்து

70. ''பாக்குத் தெண்டல்'' என்னும் சடங்கின் பொருள் யாது?
பொங்கல் தினம் பற்றி ஊர் மக்களுக்கு தெரிவிக்கும் நிகழ்வு

## மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

71. இவ் ஆலய கருவறையில் காணப்படும் பொருள் எது?
வேல்

72. இத்தலம் பற்றிக் கூறும் நூல் எது?
சீர்பாதன் வரைமுறைக் கல்வெட்டு

73. இவ் ஆலயம் சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படக் காரணம் யாது?
கதிர்காமம் முருகன் கோயிலில் இடம்பெறும் சடங்குகள் இங்கும் நடைபெறுவதால்

74. மண்டூர்க் கந்தசுவாமி கோயிலில் பூசை செய்பவர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
கப்புகனார்

75. இவ் ஆலயத்தின் உற்சவ காலம் எப்போது?
ஆவணி மாத பௌர்ணமி

## இணுவில் கந்தசுவாமி கோயில்

76. இவ் ஆலயத்தை அமைத்தவர் யார்?
பேராயிரமுடையோன் முதலி

77. இத்தலத்தின் மறுபெயர் யாது?
இணுவைக் காஞ்சி, கந்தகோட்டம்

78. இவ் ஆலயத்தின் இறைவன் பெயர் என்ன?
வள்ளி தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி

79. போர்த்துக்கேயரால் இவ் ஆலயம் அழிக்கப்பட்ட பின் மீண்டும் அமைத்தவர் யார்?
அருணாச்சலம்

80. இவ் ஆலயத்தின் தலவிருட்சம் எது?
நொச்சி மரம்

81. இங்கு இடம் பெறும் விசேட உற்சவங்கள் எவை?
தைப்பூசம், கந்தசஷ்டி

82. இவ் ஆலயத்தின் மகோற்சவ தினம் எப்போது?
ஆனி மாத அமாவாசை

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்

83. இவ் ஆலய இறைவன், இறைவி, தீர்த்தம், தலவிருட்சம் என்ன?
- இறைவன் - ஸ்ரீ வரதராஜப் பெருமாள்
- இறைவி - ஸ்ரீதேவி, பூதேவி
- தீர்த்தம் - திருவடிநிலை
- தலவிருட்சம் - வன்னிமரம்

84. இவ் ஆலயத்தின் மறுபெயர் என்ன?
சதுரங்க ஷேத்திரம்

85. இவ் ஆலயம் பற்றிக் கூறும் நூல்கள் எவை?
- தட்சிண கைலாச புராணம்
- கோகில சந்தேசய
- யாழ்ப்பாண சமயநிலை

86. இக் கோயிலில் அனுஸ்டிக்கப்படும் விரதங்கள் எவை?
ஏகாதசி விரதம், வரலட்சுமி நோன்பு, இராம நவமி, தீபாவளி, நவராத்திரி

87. இவ் ஆலயத்தில் இடம் பெறும் மகோற்சவ தினங்கள் எவை?
ஆவணி, மார்கழி

88. இங்கு இடம் பெறும் சடங்குகள் எவை?
கருடசேவை, சப்பரம், வெண்ணை திருடல், வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா, திருக்கல்யாணம்

## அலகு : 23 பிள்ளையார் கதை, சித்திர புத்திரனார் கதை தரம் - 10,11

## பிள்ளையார் கதை

1. வரதபண்டிதர் வாழ்ந்த இடம் எது?
யாழ்ப்பாணத்தில் சுன்னாகம் என்னும் ஊரில் வாழ்ந்தார்.

2. வரதபண்டிதர் இயற்றியுள்ள நூல்கள் எவை?
பிள்ளையார் கதை, சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம்

3. பிள்ளையார் கதை எத்தனை அடிகளால் ஆக்கப்பட்டது? பா வடிவம் யாது?
744 அடிகள் ஆசிரியப்பா

4. விநாயக சஷ்டி விரதம் வேறு எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
பெருங்கதை விரதம்

5. பிள்ளையார் கதையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் எவை?
- உமாதேவியின் பூமியிலே பிறந்து தவம் செய்து சிவனைத் திருமணம் செய்தமை.
- இருவரும் யானை வடிவம் பெற்று விநாயகரை ஈன்றருளியமை.
- கொடுமை புரிந்த கஜமுகாசுரனை மூசிக வாகனமாக்கிக் கொண்டமை.
- தேவர்கள் முன் நடனமாடியதைப் பார்த்துச் சிரித்த சந்திரனுக்கு விநாயகர் சாபமிட்டமை.

6. பிள்ளையார் கதை எந்த விரத காலத்தில் பாராயணம் செய்யப்படுகின்றது?

விநாயக சஷ்டி விரத காலத்தில்

7. விநாயக சஷ்டி விரதத்தை அனுட்டித்து நன்மை அடைந்தவர்களாகக் குறிப்பிடப்படுவோர் யாவர்?
   திருமால், வச்சிரமாலி, இலக்கண சுந்தரி

8. இலக்கண சுந்தரிக்கு துன்பம் ஏற்பட்டதற்கான காரணம் யாது?
   கவனக் குறைவினால் விரதக் காப்பை அவிழ்த்து காய்ந்த கொல்லைக்கொடி மீது போட்டு மறந்தமை.

9. பிள்ளையார் பெருங்கதையைக் கேட்போர் பெறும் பயன்களாகக் கூறிப்பிடப்படுபவை யாவை?
   - பொன், பொருள், கல்வி, புத்திர பாக்கியம் முதலான செல்வம் கிடைக்கும்.
   - சிறந்த வாழ்வு அமையும்.

## சித்திர புத்திரனார் கதை

10. யாழ்ப்பாணக் கலாசாரத்தினை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் எவ்வாறு சிறப்பிக்கின்றார்?
    கந்தபுராணக் கலாசாரம்.

11. மண்டூரில் பரவிக் காணப்படும் கலாசாரம் புலவர்மணி சி.பெரியதம்பிப்பிள்ளை அவர்களால் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றது?
    திருச்செந்தூர் புராணக் கலாசாரம்.

12. சித்திர புத்திரனார் கதை, நூலின் அமைப்பு முறைகளில் அடங்குபவை எவை?
    அ) விநாயகர் காப்பு ஆ) சித்திர புத்திரனார் கதை
    இ) மார்க்கண்டேயர் கதை ஈ) அமராவதி கதை

13. சித்திர புத்திரனார் கதையைத் தமிழில் பாடியவர் யார்?
    புகழேந்திப்புலவர்

14. சித்திர புத்திரனார் கதை பாடப்பட்ட பா வகைகள் எவை?
    வெண்பா, விருத்தப்பா

15. சித்திர புத்திரனாரை சிவன் யாருடைய வேண்டுகோளுக்கு இணங்க தோற்றுவித்தார்?
    யமதர்மராஜாவின்

16. சித்திர புத்திரனார் எனப் பெயர் வரக் காரணம் யாது?
    சிவனால் வரையப்பட்ட சித்திரத்தில் இருந்து தோன்றியதால்

17. சித்திர புத்திரனார் ஆற்றும் கடமை யாது?
    உயிரினங்களின் பாவ புண்ணியக் கணக்குகளைக் கணக்கிடுதல்.

18. சித்திர புத்திரனாரது கையில் இருப்பவை யாது?
    ஏடும், எழுத்தாணியும்

19. தேவேந்திரனுக்குச் சாபம் அளித்த முனிவர் யார்?
    கௌதம முனிவர்

20. கௌதம முனிவர் தேவேந்திரனுக்குச் சாபம் அளிக்கக் காரணம் யாது?
    கௌதம முனிவரின் மனைவி அகலிகை மீது தேவேந்திரன் ஆசை கொண்டமையால்

21. தேவேந்திரன் குழந்தை வரம் வேண்டி யாரை நோக்கித் தவமிருந்தான்?
    சிவபெருமானை

22. தேவேந்திரனது இல்லத்தில் சித்திர புத்திரனார் அவதரித்த காலம் யாது?
    சித்திரை மாத சித்ரா பௌர்ணமி தினத்தன்று

Education கல்வி அධ්‍යාපන

23. சித்திர புத்திரனார் தெய்வீகப் பசுவான காமதேனுவின் வயிற்றிலிருந்து எவ்வாறு அவதரிக்கின்றார்?
ஏடும், எழுத்தாணியுடன்

24. உலகிலுள்ள ஜீவராசிகள் செய்யும் பாவங்களுக்கு நரகலோகத்தில் வழங்கப்படும் தண்டனைகள் யாவை?
- உயிரினங்களை வதைப்பவர்களுக்கு மாட்டுக்குப் பதிலாக வண்டியைத் தாமே இழுப்பர்.
- பிறர் சொத்தைக் களவெடுப்பவர்களுக்கு சுழலும் செக்கிலிட்டு ஈட்டியில் குத்தப்படுவர்.
- தகாத உறவில் ஈடுபடுபவர்கள் தீக்கிடங்கில் தள்ளி விடப்படுவர்.
- வரி செலுத்தாதவர்களுக்கு அரிவாளால் உடல் அறுக்கப்படும்.
- மது அருந்துதல், புகைத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கொடிய நச்சுப் பாம்புகள் தீண்டுதல்.

25. சித்திர புத்திரனாரால் புண்ணியங்களுக்கு வழங்கப்படும் சுகபோகங்கள் யாவை?
- திருக்கைலாயத்துக்கு அழைத்துச் செல்லப்படுவோர் அங்கு அமைக்கப்பட்டுள்ள இனிய நறுங்கனிச் சோலைகளில் அமர்ந்திருந்து எந்நாளும் சிவபூசை செய்து இன்பமாக வாழலாம்.
- வைகுண்டத்துக்கு அழைத்துச் செல்லப்படுவோர் அங்கே தேவர்களைப்போன்று சிறப்பாக உபசரிக்கப்படுவர்.

26. சித்திர புத்திரனார் கதையில் இடம்பெறும் கிளைக்கதைகள் எவை?
மார்க்கண்டேயர் கதை, அமராவதி கதை

27. மார்க்கண்டேயரது தந்தை பெயர் யாது?
மிருகண்டர்

28. மிருகண்டர் சிவனை நோக்கி எத்தனை வருடங்கள் தவம் இருந்தார்?
16 வருடங்கள்

29. மார்க்கண்டேயர் எந்நூல்களைக் கற்று அறிவுடையவராக விளங்கினார்?
வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள்

30. "வேத நாயகனே போற்றி, விண்ணவர் தலைவா போற்றி.." எனப் பாடியவர் யார்?
புகழேந்திப் புலவர்

31. மார்க்கண்டேயருக்கு வழங்கப்பட்ட ஆயுட்காலம் யாது?
16 வயது

32. மார்க்கண்டேயரது 16 வயதில் உயிரை எடுக்க வந்த யமனைச் சங்காரம் செய்தவர் யார்?
சிவன்

33. மார்க்கண்டேயர் யமனிடமிருந்து எவ்வாறு தப்பித்துக் கொண்டார்?
தாம் பூசை செய்யும் சிவலிங்கத்தை இறுகக் கட்டிப் பிடித்தார்.

34. சிவனால் யமன் சங்கரிக்கப்பட்டபின் பூமியில் நிகழ்ந்த மாற்றம் யாது?
உயிரினங்கள் அதிகரித்தமை.

35. மீண்டும் யமன் தோற்றம் பெறக் காரணமானவர்கள் யார்?
பூமாதேவி, பிரம்மன்

36. சித்திர புத்திரனார் அமராவதியை எமலோகம் அழைத்தமைக்கான காரணம் யாது?
விரதங்கள் நோற்காமை.

37. அமராவதி இறக்கக் காரணம் யாது?
பால் கறக்கும் போது பசுவின் கொம்பு முட்டி

Education கல்வி அධ්‍යාපන

38. அமராவதி பூலோகத்திலும், வானுலகிலும் ஆற்றிய நற்செயல் யாது?
தானதர்மம் செய்தல்

39. கருமங்கள் செய்யும்போது, யாரை சிந்தையில் நிறுத்துவதன் மூலம் அதன் பயனைப் பெறலாம்?
சித்திர புத்திரனார்

40. மீண்டும் தனது பழைய நிலையை அடைய அமராவதி யாது செய்தார்?
சித்திர புத்திரனார் விரதத்தைக் கடைப்பிடித்தார்.

41. அமராவதிக்குக் கிடைத்த முத்திப்பேறு யாது?
விண்ணில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களில் ஒன்றாக மாறியமை.

42. சித்திர புத்திரனார் கதையைப் படித்து முடிப்பதனால் கிடைக்கும் பயன்கள் எவை?
- அவர்கள் குலம் ஆல் போல் தழைத்து, அறுகு போல் வேரூன்றி, மூங்கில்போல் சுற்றங்கள் சூழ்ந்து, இன்பகரமாக வாழ்வர்.
- செல்வங்கள் பெருகும்.
- நடராஜப் பெருமானது திருவடிகளை அடையும் பாக்கியம் பெறுவர்.

43. சித்திர புத்திரனார் பாவபுண்ணியக் கணக்கை எழுதும் புத்தகத்தை எவ்வாறு அழைப்பர்?
அக்கிரசந்தாணி

44. சித்திர புத்திரனாருக்கு இந்தியாவில் எவ்வெவ் இடங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன?
- காஞ்சிபுரம் தேனீ (தமிழகம்)
- கஜீராக்கோ (மத்திய பிரதேசம்)

45. சித்திர புத்திரனார் விரதம் எவ்வாறு அனுட்டிக்கப்படுகிறது?
ஆலயங்களில் கதை படித்தல், கஞ்சி வார்த்தல் மூலம்

46. ஆகமம் சாராத ஆலயங்களில் சித்திர புத்திரனார் வழிபாடு எவ்வாறு இடம்பெறும்?
- ஆலயத்தின் பிரதான மண்டபத்தின் மேலே வெள்ளை வேட்டி கட்டுவர்.
- வாழை, கரும்பு, தோரணம், தென்னம்பாளை, கமுகம்பாளை என்பன கொண்டு மண்டபம் அலங்கரிக்கப்படும்.
- ஈச்சம் இலைகள், நுங்குக் குலைகள் கட்டித் தொங்க விடப்பட்டிருக்கும்.
- கீழே நிறைகுடம் வைக்கப்படும்.
- நிறைநாழியும், ஏடும், எழுத்தாணியும் வைக்கப்படும்.

47. சித்திரைக் கஞ்சி என்பதனால் கருதப்படுவது யாது?
புழுங்கல் அரிசியில் மரக்கறிகள் இட்டுச் செய்யப்பட்ட கஞ்சி

48. சித்திர புத்திரனார் கதை படிப்பதனால் கிடைக்கும் பயன் யாது?
- தெரிந்தோ, தெரியாமலோ செய்த பாவங்களின் பலன் குறையும்.
- உடல் நலம் சீராக இருக்கும்.
- புண்ணியம் கைகூடும்.
- வாழ்வில் செல்வம் கொழிக்கும்.

## அலகு : 24 சைவ வித்தியாவிருத்திச் சங்கம், சைவ பரிபாலனசபை தரம் - 10,11

1. சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெரியார் யார்?
நல்லைநகர் ஆறுமுகநாவலர்

2. சைவ வித்தியாவிருத்திச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1923.12.09

3. சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்கள் யாவர்?
தலைவர் - சேர்.பொன்.இராமநாதன்
செயலாளர் - டபிள்யூ.விஜயரத்தினம்

பொருளாளர் - எ.ஃப்.ஜி.பீரிஸ்
சேர்.வைத்தியலிங்கம் துரைசாமி, எஸ்.குமாரசூரியர், சு.இராசரத்தினம், எ.மகாதேவா, சு.நடேசன்

4. திரு. சு.இராசரத்தினம் அவர்கள் "இந்து போர்ட்" என்ற அடைமொழியோடு அழைக்கப்பட்டதன் காரணம் யாது?

   சங்கம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தனது மரணம் வரை சங்கத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துப் பணி புரிந்தமையால்

5. சைவ வித்தியாவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் யாது?
   - இலங்கையில் தேவையான இடத்தில் சைவப்பாடசாலைகளை ஸ்தாபித்து அவற்றை நடாத்துதல்.
   - தனிப்பட்ட முகாமையாளர்களால் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும் பாடசாலைகளைப் பொறுப்பேற்று நடாத்துதல்.
   - சைவப்பாடசாலைகள் எல்லாவற்றுக்கும் வேண்டிய உதவிகளை வழங்குதல்.
   - சைவப்பிள்ளைகள் சைவப்பாடசாலைகளில் படிப்பதற்குரிய வசதிகளை வழங்கி இவ்வியக்கத்திற்கு மேலும் உற்சாகமூட்டல்.
   - தமிழ் இலக்கியம்,சங்கீதம், நாடகம் என்பவற்றை வளரச் செய்தல்.
   - ஆதரவற்ற சைவச்சிறார்களுக்கான இல்லங்களை நடாத்துதல்.

6. சைவ வித்தியாவிருத்திச் சங்கம் சைவ மக்களுக்கு ஆற்றிய பணிகள் எவை?
   - பாடசாலைகளை நடாத்தியமை.
   - சைவாசிரிய கலாசாலை நிறுவியமை.
   - காவிய பாடசாலை நடாத்தியமை.
   - தொழிற் பயிற்சிப் பாடசாலைகளை நடாத்தியமை.
   - ஆதரவற்ற சிறுவர்களுக்கான இல்லங்களை நடாத்தியமை.
   - பழைய நூல்களை மீள்பதிப்புச் செய்தல்.
   - ஏழை மாணவர்களுக்கு உதவுதல்.

## சைவ பரிபாலனசபை

7. 19 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற சமய நிறுவனங்கள் எவை?

   சைவ பரிபாலனசபை, இராமகிருஷ்ணமிசன், சைவ வித்தியாவிருத்திச் சங்கம், கொழும்பு விவேகானந்தா சபை, அகில இலங்கை இந்துமாமன்றம்

8. சைவ பரிபாலனசபை எப்போது தோற்றம் பெற்றது?

   1888.சித்திரை.29

9. இந்நிறுவனத்தின் முதல் தலைவர் யார்?

   ந.ச.பொன்னம்பலபிள்ளை

10. இச்சபை 1890 இல் எவ்வாறு பெயர் மாற்றப்பட்டது?

    சைவ பரிபாலனசபை

11. அதன் தலைவர்களாக விளங்கியவர்கள் யார்?

    சேர்.பொன்.இராமநாதன், பொன்.குமாரசுவாமி, கனகசபை துரைச்சாமி, சிவபாத சுந்தரனார்

12. இச்சபையின் நோக்கங்கள் எவை?
    - ஆலயங்களை அமைத்தல், புனருத்தாரணம் செய்தல்.
    - சைவப்பிரசங்கங்களை மேற்கொள்ளல்.
    - பத்திரிகைகள் வெளியிடுதல்.
    - பெண்களுக்கான கல்வி.
    - நூல்களை வெளியிடுதல்.

13. இந்நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சஞ்சிகை எது? எத்தனையாம் ஆண்டு வெளியிடப்பட்டது?

    இந்துசாதனம் 1889 இல்

14. இந்நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பொதுப்பணிகள் எவை?
   - விக்ரோறியா வாசிகசாலையைப் பொறுப்பேற்றமை.
   - நாவலர் ஆச்சிரம மடத்தில் சைவநூலகம் ஒன்றை ஆரம்பித்தமை.
   - நூல்களைச் சேகரித்து வைத்திருத்தல்.
   - சமய பாடப் பரீட்சை நடாத்துதல்.

15. இந்நிறுவனத்தினால் தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் எவை?
   - சிதம்பரத்தில் புண்ணிய நாச்சிய தர்மம் என்னும் தர்மபரிபாலனத்தை உருவக்கியமை.
   - இலங்கையிலிருந்து அடியவர்கள் தங்குவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.
   - சேதாரணியத்தில் கார்த்திகைமட தர்ம பரிபாலனத்தைப் பொறுப்பேற்றது.

16. இந்நிறுவனத்தினால் பொறுப்பேற்கப்பட்ட ஆலயங்கள் எவை?
   - திருக்கேதீச்சர ஆலயக் காணியைக் கொள்வனவு செய்தமை.
   - அதனைப் புனரமைத்தமை.
   - மறவன்புலவு சிதம்பர சித்திவிநாயகர் ஆலயம் பொறுப்பேற்றல்.
   - சங்கானை சிவன் கோயில் பொறுப்பேற்றல்.
   - கோயிலாக்கண்டி சிவன் கோயில் பொறுப்பேற்றல்.

17. இந்நிறுவனத்தின் ஊடாகப் பிரசாரங்கள் செய்தோர் யாவர்?
   பிரம்மஸ்ரீ சுப்பையர், அ.குமாரசாமிப்புலவர், மு.கனகசபாபதி ஐயர்

18. இந்நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் சிறப்பாகக் காணப்படும் பாடசாலை எது?
   யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 1890 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

19. இந்நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட பாடசாலைகள் எவை?
   - கொக்குவில் இந்துக் கல்லூரி
   - உரும்பிராய் இந்துக் கல்லூரி
   - வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

20. இந்நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகள் எவை?
   பாடசாலை மாணவர்களுக்கு தரம் 2 – 11 வரை சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர், சித்தாந்த பிரதேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர்

21. இந்நிறுவனத்தினால் பதிப்பித்து வெளியிடப்பட்ட நூல்கள் எவை?
   சிறுபிள்ளைப்பாடம், பாலபாடம்(1-8), இலக்கிய வாசகம் - மூன்றாம் புத்தகம், தமிழ் எழுத்துறுப்பு புத்தகம், செந்தமிழ் கருவூலம், நமசிவாயமாலை, சுகாதாரக்கும்மி, தஞ்சவாணன் கோவை, திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், சோமவாரவிரத மான்மியம், திருப்பெருவடிவம், ஆரோக்கியமும் தேகப்பயிற்சியும், நளவெண்பா, வில்லிபாரதம், கிருஷ்ணன் தூது.

**அலகு : 25 சைவதருமம், அன்னதானம் தரம் - 10,11**

## சைவதருமம்

1. சனாதனதருமம் என இந்து சமயத்தை அழைப்பதன் காரணம் யாது?
   அநாதிகாலமாக அழிவின்றி நிலவி வருகின்ற ஒரு நெறிமுறை என்பதால்

2. இந்து சமயத்தின் பழமையான பெயர் என்ன?
   சனாதனதருமம்

3. பதிபுண்ணியம் என்றால் என்ன?
   சிவனுக்கும், சிவனடியார்களுக்கும் செய்யும் தொண்டுகள்

4. பசுபுண்ணியம் என்றால் என்ன?
   ஏனைய மனிதர்களுக்கும், பிற உயிர்களுக்கும் செய்யும் நற்கருமங்கள், தொண்டுகள்

5. மனதில் எந்த அழுக்கும் இல்லாது நல்ல சிந்தனையோடு இருத்தல் எவ்வாறு அழைக்கப்படும்?
   அறம்

6. அறம் செய விரும்பு எனக் கூறியவர் யார்?
   ஔவையார்

7. தீவினை செய்வதன் பயன் யாது?
   இம்மையிலும் மறுபிறப்பிலும் துன்பம் அனுபவிக்க வேண்டும்.

8. அறங்கள் யாவற்றுக்கும் அடிப்படையானது எது?
   அன்பு

9. நம்மிடம் அருள் இருந்தால் எவை அனுகமாட்டாது?
   கொலை, புலால் உண்ணல், களவு, பொய் பேசுதல், புறம் பேசுதல், பொறாமை கொள்ளுதல் போன்ற தீய செயல்கள்

10. ''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' எனக் கூறும் நூல் எது?
    மணிமேகலை

11. நித்திய அதாவது வருடம் 365 நாட்களும் அன்னதானம் நடைபெறும் ஆலயம் எது?
    தொண்டமானாறு செல்வச்சந்நிதி, நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம்

12. பசுவுக்காக எம்முன்னோர் செய்த தருமம் யாது?
    நீர்த்தொட்டி அமைத்துவிடல், ஆவுரோஞ்சுக்கல் நட்டமை.

13. ஆறுகால் மடம் எங்குள்ளது? எதற்காக அமைக்கப்பட்டது?
    யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில், ஆனைக்கோட்டை தெற்கில்

14. எல்லா உயிர்களுக்குமாக நாம் செய்யவேண்டிய பெரிய தருமம் எது?
    நிழல் தரு மரங்களை நாட்டி வளர்த்துவிடல்.

15. தண்ணீர்ப் பந்தல் அமைத்து நித்தமும் தாகசாந்தி செய்த நாயனார் யார்?
    அப்பூதியடிகள்

**அன்னதானம்**

16. தானங்களில் சிறந்த தானம் எது?
    அன்னதானம்

17. ''ஈதல் அறம்'' எனக் கூறியவர் யார்?
    ஔவையார்

18. தானங்கள் சில கூறுக?
    கோதானம்(பசு), வஸ்திரதானம்(உடை), வித்தியாதானம்(கல்வி), பூதானம்(பூமி,நிலம்), கன்னிகாதானம்(கன்னிப்பெண்), இரத்ததானம், சிறுநீரக தானம், கண்தானம்

19. புண்ணிய கருமங்களில் ஒன்றாக அன்னசத்திரம் ஆயிரம் நாட்டல் எனக் குறிப்பிட்டவர் யார்?
    மகாகவி பாரதியார்

20. அன்னதானக் கந்தன் என அழைக்கப்படும் ஆலயம் எது?
    செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

21. தலயாத்திரை செய்பவர்களுக்கு நாம் எவற்றைக் கொடுக்க வேண்டும்?
    களைப்பாறுவதற்கு நிழல் இடம், தாகத்திற்கு தண்ணீர், பசிக்கு உணவு

22. தலயாத்திரை செய்து முடித்ததும் தம் வீட்டில் யாது செய்தல் வேண்டும்?
    சிவனடியார்களுக்கு அன்னதானம் கொடுத்தல் வேண்டும்.

Education கல்வி අධ්‍යාපන

23. அன்னதானம் பெறும்போது நாம் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகளை எழுதுக?
- வரிசையில் ஒருவர் பின் ஒருவராகச் செல்லுதல்.
- மற்றவர்களை முட்டி மோதக்கூடாது.
- உணவு பரிமாறும்வரை அமைதியாக இருந்து நமசிவாய மந்திரத்தை உச்சரித்தல்.
- உண்ணும் முன் அன்னம் பாலிக்கும் எனும் தேவாரத்தைப் பாடி இறைவனுக்கு நன்றி கூறுதல்.
- நமக்குப் படைத்த உணவை நீர் தெளித்து இறைவனுக்கு அர்ப்பணமாக்கிய பின் உண்ணுதல்.
- அளவான உணவை வாங்கி ஒரு சோற்றையேனும் நிலத்தில் சிந்தாது இலையில் போட்ட அத்தனை உணவையும் உண்ணுதல்.
- சாப்பிட்ட இலைகளை உரிய இடத்தில் போடுதல்.
- உண்ட உணவுக்காக இறைவனுக்கும், அன்னமிட்டவருக்கும் நன்றி கூறுதல்.

24. அன்னதானம் நடக்கும் இடத்தில் நீர் செய்யக்கூடிய தொண்டுகள் எவை?
- மரக்கறிகள் வெட்டிக் கழுவிக் கொடுக்கலாம்.
- உணவு பரிமாறலாம்.
- உணவுண்ட இடத்தைக் கூட்டிக் கழுவிச் சுத்தம் செய்யலாம்.
- பாத்திரங்களைக் கழுவிச் சுத்தம் செய்யலாம்.
- வாழையிலையோ, வீட்டிலுள்ள மரக்கறி, அரிசியோ, விறகோ வசதிக்கேற்றபடி கொடுத்து உதவலாம்.

**அலகு : 26 பகவத் கீதையும் தம்மபதமும் தரம் - 10,11**

**பகவத் கீதை**

1. இந்து சமயத்தின் முக்கிய நூல்களில் ஒன்றாவது யாது?
பகவத்கீதை

2. பகவத்கீதையின் மூலநூல் எந்த மொழியில் அமைந்துள்ளது?
சமஸ்கிருத மொழியில் (வடமொழி)

3. பகவத்கீதை எந்த நூலில் காணப்படுகின்றது?
மாகாபாரதத்தில்

4. பகவத் கீதையின் தோற்றமாவது யாது?
யுத்தகளத்தில் மனங்கலங்கிய அர்ஜீணனுக்கு கிருஸ்ண பரமாத்மாவால் உபதேசிக்கப்பட்டது.

5. பகவத்கீதையில் உள்ள அத்தியாயங்ஙள் எத்தனை?
18

6. 18 அத்தியாயங்களும் எத்தனை பகுதிகளுள் உள்ளடங்குகின்றன? அவை எவை?
மூன்று பகுதிகள்.
கர்யோகம், பக்கதியோகம், ஞானயோகம்

7. பகவத்கீதையில் உள்ள சுலோகங்கள் எத்தனை?
700

8. வைதீக நெறியில இந் நூல் பெறுகின்ற முக்கியத்துவம் யாது?
பிரஸ்தான திரயங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது

9. பிரஸ்தானதிரயம் என்றால் என்ன?
முக்கியமான மூன்று நூல்கள்

10. இந் நூலுக்கு உரை எழுதியவர்கள் சிலரைத் தருக?
சங்கரர், இராமானுஜர், மத்துவர்

## தம்மபதம்

11. பௌத்த தர்மத்தின் ஆரம்பகர்த்தா யார்?
கௌதமர்

12. கௌதமரின் உபதேசங்கள் எவ்வாறு தொகுக்கப்பட்டது?
திரிபிடங்களாக

13. திரிபிடங்களும் எவை?
சுத்தபிடகம், விநயபிடகம், அபிதம்பிடகம்.

14. சுத்தபிடகம் எத்தனை பகுதிகளைக் கொண்டது?
ஐந்து.

15. குத்தக நியாயம் பகுதியின் சிறப்பு யாது?
தம்மபதம் எனும் தொகுப்பு உள்ளது.

16. இந் நூல் பௌத்த நுர்லாக அங்கீகரிக்கப்பட்டது எப்போது? இதனை உறுதிப்படுத்திக் கூறியவர் யார்?
- முதலாம் பௌத்தசங்க மாநாட்டில்.
- புத்தகோசர்

17. தம்மபதத்தின் மூலவடிவம் எந்த மொழியில் உள்ளது?
பாளிமொழியில்.

18. பௌத்த சமயத்தின் முக்கிய நூல்களில் ஒன்றாவது யாது?
தம்மபதம்

19. தம்மபதம் எத்தனை அத்தியாயங்ஙளைக் கொண்டது?
26 அத்தியாயம்

20. தம்மபதம் எத்தனை சூத்திரங்களைக் கொண்டமைந்துள்ளது?
423 திரங்கள்

21. தம்மபதத்தின் ஊடாக பௌத்தம் கூறவிளையும் கருத்து யாது?
பௌத்த மதத்தின் அறக் கோட்பாடுகள்.

## இரு நூல்களுக்கும் இடையிலான பொது ஒருமைப்பாடு

22. இவ்விரு நூல்களினதும் பொதுவான தன்மையாது?
மனிதனின் ஆன்ம விடுதலை பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்கின்ற தன்மை.

23. இந்நூல்கள் பந்தத்திற்கு காரணமாக அமைவதாகக் கூறப்படுவது?
மனித மனதில் எழும் துக்கமே பந்தத்திற்குக் காரணமாகின்றது..

24. இந்நூல்கள் துக்கம் தொடர்பாக வெளிப்படுத்தும் படிமுறைகளாக வெளிப்படுத்தப்படுவது?
துக்கம் - துக்கஉற்பத்தி - துக்கநிவாரணம் - துக்கநிவாரண மார்க்கம்.

25. இந்நூல்கள் அறத்தின் வழி நிற்பவர்கள் எவ்வாறு செயலாற்றுவர் எனக் கூறுகின்றது?
- அவரவர் தத்தமது கடமைகளைச் சரிவரச் செய்பவராக இருப்பர்.
- செயல்களைச் செய்யும் போது பற்றற்றுச் செய்பவராக இருப்பர்.
- மனமாசுகளை நீக்கி ஒழுக்கத்தில் நிலைபெற்று இருப்பர்
- தன்னடக்கமும், மெய்யுணர்வும் உடையவராகத் திகழ்வர்.

26. இந்நூல்கள் மனித வாழ்வின் பிரதான இலக்காகக் கூறுவது?
உண்மைப் பொருளைக் காண விழைதல் ஆகும்.

27. இந்நூல்கள் உண்மைப் பொருளைக் காண்பதற்கான வழியாக கூறுவது?
ஞானம்

28. இந்நூல்கள் மேலான நிலையினை அடையும் ஆற்றல் உள்ளவனாக யாரைக் கூறுகின்றன?
ஐம்புலன்களை ஞானம் எனும் கருவியால் அடக்கி ஆள்பவர்களை

29. இந்நூல்கள் கூறுகின்ற பிற கருத்துக்களாவன?
சிந்தனை, பேதை, ஞர்னி, முனிவர், தீயொழுக்கம், தண்டனை, முதுமை, உலகு, ஆன்மா

30. இந்நூல்கள் கன்மத்தை எவ்வாறு ஆற்றுதல் வேண்டும் என்று கூறப்படுகின்றன?
உணர்ச்சிகளுக்கு முதன்மையளிக்காது பற்றற்றுக் கர்மத்தை ஆற்றுதல் வேண்டும்.

31. இந்நூல்கள் மீளப்பிறத்தலுக்கு வழிவகுப்பன வாகக் கூறப்படுபவை எவை?
பற்றுக்களும், கன்மமும்

32. இந்நூல்கள் எதற்கு வழிகாட்டுின்றன?
விடுதலைக்கு

33. இந் நூல்கள் விடுதலைக்கு வழியாகக் கூறுபவை?
மனம், வாக்கு காயம் ஆகிய மூன்றிலும் தூய்மை பேணுதல் வேண்டும்.
எமது காட்சி, எண்ணம், மொழி, செயல், வாழ்க்கை, முயற்சி, கடைப்பிடிப்பவை, தியானம் ஆகியவை எம்மை நல்வழிப்படுத்தும் வகையில் அறவழியில் அமைத்துக் கொள்ளல்.

34. மானிட வாழ்வின் அம்சங்கள் ஆனவை எவை?
இல்லறம், துறவறம்

35. இருநூல்களும் காட்டும் பொது வழியாவது?
மானுட ஈடேற்றம்.

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp 075 287 1457**